இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 156 | வள்ளுவர் ஆண்டு 2048 | சித்திரை 18 திங்கட்கிழமை 01.05.2017

## "குடி"மக்கள் இன்று தப்பமுடியாது

கொழும்பு, மே 1
மே தினமான இன்று மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்களைக் கைது செய்யச் சிறப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர். கொழும்பு நகரின் பாது காப்புக்காக சுமார் 7 ஆயிரம் பொலிஸார் நியமிக்கப்பட்டுள்ளனர். போதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளைக் கைதுசெய்யச் சிறப்புப் பொலிஸ் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (த-4)

## ஆனந்தத்துடன் சொந்த மண்ணில் முள்ளிக்குளம் மக்கள் கால்பதிப்பு



மன்னார், மே 1
கடற்படையினரின் ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட முள்ளிக்குளம் பிரதேசத்தினுள் மக்கள் ஆனந்தமாக நேற்றுச் சென்றனர். 10 ஆண்டுகளின் பின்னர் தமது சொந்த மண்ணில் அவர்கள் வழிபாடுகளின் பின்னர் கால் பதித்தனர்.
முள்ளிக்குளம் கிராம மக்கள் ஒன்றிணைந்து நேற்றுக் காலை >> 24

# மக்கள் கருத்தை அறிந்த பின்தான் இறுதித் தீர்வு!

### தந்தை செல்வா நினைவுப் பேருரையில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் உறுதி



மட்டக்களப்பு, மே 1
தீர்வு முன்வைக்கப்பட்ட பின்னர், மக்களின் ஆலோசனைகளை - கருத்துக்களைக் கேட்போம். அதன் பின்னர்தான் முடிவெடுப்போம். எமது மக்கள் ஏற்காத தீர்வை நாங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை"
இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.
மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற தந்தை செல்வா நினைவுப் பேருரையில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது: >> 24

## உண்மையைக் கூற அமைச்சர்களுக்கு முதுகெலும்பு இருக்கவேண்டும்

### அமைச்சர் ராஜித கொதிப்பு

கொழும்பு, மே 1
"உண்மையைக் கூறுவதற்கு அமைச்சர்களுக்கு முதுகெலும்பு இருக்கவேண்டும். சில அமைச்சர்கள் சரத்பொன்சேகா மீண்டும் இராணுவத்துக்குள் நுழைவதை விரும்பவில்லை. இந்தச் செய்தியைக் கேட்டு மகிந்த ராஜபக்சவின் குடும்பம் அச்சத்தால் நடுங்குகிறது. மகிந்தவின் கயிற்றை விழுங்கிய சில அமைச்சர்களும் நடுங்குகின்றனர். >> 24

## மோடியின் வருகையால் புலனாய்வுத் துறையினர் உச்ச விழிப்பு நிலையில்

கொழும்பு, மே 1
இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியின் பயணத்தை முன்னிட்டு, புலனாய்வு அமைப்புகள் உச்ச விழிப்பு நிலையில் செயற்படுவதாக ஆங்கில ஊடகமான சண்டே லீடர் செய்தி வெளியிட்டுள்ளது.
"ஐ.நா. ஏற்பாட்டில் உலக வெசாக் >> 24

## 2020 அரச தலைவர் தேர்தலில் மைத்திரிபாலவே வேட்பாளர்

### சுதந்திரக் கட்சி உறுதி

கொழும்பு, மே 1
"2020 இல் அரச தலைவருக்கான தேர்தல் நடந்தால் தற்போதைய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நிச்சயமாக மீண்டும் போட்டியிடுவார். சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் அவர்தான்"
இவ்வாறு அமைச்சரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளருமான மகிந்த அமரவீர தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் >> 24

## யாருமே எம்மை கைவிடவில்லை!

### அதனால் ஈழத் தமிழர் அரசியல் இப்போது திருப்பு முனையில் என்கிறார் சுமந்திரன்



மட்டக்களப்பு, மே 1
"எல்லோரும் எங்களைக் கைவிட்டு விட்டார்கள் என்கின்ற ஒப்பாரி இப்பொழுது நடந்து கொண்டே இருக்கின்றது. ஆனால், உண்மை அதுவல்ல. யாரும் எங்களைக் கைவிடவில்லை. எங்களுக்குச் சாதகமான எத்தனையோ விடயங்கள் நடந்து கொண்டே இருக்கின்றன. ஐ.நா. பன்னாட்டுச் சமூகம் >> 24

## ஜி.ஜி. பொன்னம்பலத்தின் சைக்கிளையா ஓடுகிறார்கள்

### கூட்டாட்சியை எதிர்ப்பவர்களைப் பார்த்து சம்பந்தன் கேள்வி

மட்டக்களப்பு, மே 1
"கூட்டாட்சி (சமஷ்டி) கோரிக்கையை செல்வா முன்வைத்தபோது, அதனை ஜி.ஜி.பொன்னம்பலம் எதிர்த்தார். தொடர்ச்சியாக பொன்னம்பலம் எதிர்த்துக்கொண்டிருந்தார். நாம் தந்தை செல்வாவின் தடத்தில் தற்போது பயணித்துக் கொண்டிருக்கும் நிலையில், அதனையும் எதிர்ப்பவர்கள் இருக்கின்றார்கள். இப்படிப்பட்டவர்கள் அமரர் பொன்னம்பலத்தின் வாரிசுகளா? பொன்னம்பலத்தின் சைக்கிள்களில் ஓடிக் கொண்டிருப்பவர்களா ?"
இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார், தமிழ்த் தேசியக் >

### புதிய பயங்கரவாதச் சட்டத்தால்

## தகவல் அறியும் உரிமை சட்டத்துக்குப் பாதிப்பு!

கொழும்பு, மே 1
அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டத்தைக் கடுமையாகப் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளதாக, கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.
அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:
பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தில் இரகசியத் தகவல்களைப் பெறுவதற்காக சட்டவிரோதமான, ஏற்றுக் கொள்ளப்படாத நடவடிக்கைகளில் ஈடுபடுவது குற்றம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக திட்டமிடுபவருக்கு >

## உலகைச் சுற்றிப் பிச்சை எடுக்கின்றது இலங்கை

### யாழ். நகரில் நடந்த மேதின நிகழ்வில் ஜேவிபியின் தலைவர் குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம் மே 1
உலகம் சுற்றிப் பிச்சை எடுக்கும் நாடாக இலங்கை மாறியுள்ளது என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான >> 23

## வடக்கு - கிழக்கு இணைப்பு; நழுவிச் சென்ற அநுரகுமார

யாழ்ப்பாணம், மே 1
வடக்குகிழக்கு இணைப்புத் தொடர்பில் கருத்துக் கேட்டதும், "அது தொடர்பில் கருத்துக் கூறமுடியாது" என்று தெரிவித்து நழுவிச் சென்றார் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க.
இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் முற்றவெளியில் நேற்றுமாலை இடம்பெற்ற மேதின நிகழ்வில் இடம்பெற்றது.
"வடக்கு - கிழக்கு இணைப்புத் தொடர்பாக உங்கள் கருத்து என்ன?" என்று செய்தியாளர்கள் அவரிடம் கேள்வி எழுப்பினர். இதன்போது "இந்த விடயம் தொடர்பாக இப்போது எவ்வித கருத்துக்களையும் என்னால் கூற முடியாது. நான் இன்றைய கூட்டத்தில் பேசியதை மட்டும் நீங்கள் கவனத்தில் எடுங்கள்" என்று கூறியபடியே இடத்தை விட்டு நழுவிச் சென்றார் அனுரகுமார. >> 22





மேதின மேடையிலும் அரசியல் தானப்பா...



## காங்கேசன் கடற்பரப்பில் தத்தளித்த மியன்மார் அகதிகள் 30 பேர் மீட்பு

யாழ்ப்பாணம், மே 1
காங்கேசன்துறைக் கடற்பரப்பில் தத்தளித்துக் கொண்டிருந்த கைக்குழந்தைகள் உட்பட 30 மியன்மார் அகதிகள், கடற்படையினரால் நேற்று மதியம் மீட்கப்பட்டனர். அவர்களுடன் இந்திய படகோட்டிகள் இருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் காங்கேசன் >> 22

## ஒன்றித்த முடிவு இன்றி கிராமங்களில் அபிவிருத்தி

### தன்னிச்சையாக முடிவெடுத்தது கொழும்பு அரசு

யாழ்ப்பாணம், மே 1
ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் முன்வைக்காது, அனுமதிக்கு அனுப்பப்பட்ட கிராமத்துக்கு 5 லட்சம் ரூபா திட்டத்துக்குரிய நிதி ஒதுக்கீடு யாழ்ப்பாண மாவட்டத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. அரச சுற்றறிக்கைக்கு மாறாக அனுமதிக்குச் சமர்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு

## வீட்டுக்குள் இன ஒற்றுமை வெளியில்தான் இனவாதம்

### வடக்கு முதல்வரைச் சாடுகிறார் ஜே.வி.பியின் சந்திரசேகரன்

யாழ்ப்பாணம், மே 1
வடக்கு மாகாண முதலமைச்சரை அவரது பேரப்பிள்ளைகள் சியா (தாத்தா) என்று அழைக்கின்றனர். [illegible] சந்தோசமாக இன >> 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டு அரசுக்கு எதிராக இடதுசாரிக் கட்சிகள் வியூகம்

கொழும்பு, மே 1
சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து நடத்திவரும் கூட்டு அரசுக்கு எதிராக இடதுசாரிக் கட்சிகள் வியூகமொன்றை அமைக்கவிருப்பதாக அரசியல் வட்டாரங்களிலிருந்து அறிய முடிந்தது.

கடந்த ஐம்பது ஆண்டுகாலமாக நடந்துவரும் தனவந்தக் கட்சிகளின் ஆட்சிமுறைக்கு எதிராக போர்க்கொடி உயர்த்த இடதுசாரிக் கட்சிகள் இப்போது முயன்று வருவதாகவும், அந்தவகையில் மக்கள் விடுதலை முன்னணியும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் அண்மையில் சந்தித்து பேச்சுகள் நடத்தியமை அரசியல் மாற்றமொன்றுக்கான சமிக்ஞையாகத் தெரிவதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த இரு கட்சிகளினதும் சந்திப்பின்போது அரசமைப்பு மாற்றம், நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமையை நீக்குதல், தேர்தல் முறைமையில் மாற்றங்களைக் கொண்டுவருதல் போன்ற முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டிருந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-5)

*மத்திய வங்கி பிணைமுறி மோசடி*

## ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை கிடைத்ததும் மைத்திரி நடவடிக்கை

கொழும்பு, மே 1
இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரணை நடத்திவரும் அரச தலைவர் ஆணைக்குழு முன்வைக்கவுள்ள இறுதி அறிக்கையின் அடிப்படையில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மேலதிக நடவடிக்கைகளை எடுக்கவுள்ளார் என்று அரசின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகள் மட்டத்திலும் பெரும் சலசலப்பைத் தோற்றுவித்துள்ள பிணைமுறி விவகாரத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன எடுக்கும் நடவடிக்கை வரலாற்று முக்கியத்துவத்தைப் பெறுமென அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

பெரிதும் எதிர்பார்க்கப்பட்டுள்ள அமைச்சரவை மாற்றத்தின் பின்னர் அடுத்துவரும் தேர்தல்களில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மீதான நல்லெண்ணத்தை மக்கள் மத்தியில் நிலைநாட்டும் வகையில் அரச தலைவர் மைத்திரிபாலவின் இந்த நடவடிக்கை அமையுமெனவும், இதற்கு இன்று நடைபெறவுள்ள இரு முதன்மைக் கட்சிகளினதும் மகிந்த அணியினதும் மேதினக் கூட்டத்தின் பெறுபேறுகளும் ஓர் அடிப்படையாக அமையும் என்றும் அரசியல் விமர்சகர்கள் எதிர்வு கூறியுள்ளனர். (வ-5)

## ஊழல், மோசடி ஒழிப்புப் பிரிவும் நிதி மோசடிப் பிரிவும் செயலிழப்பு

*நிதி பற்றாக்குறையே காரணமாம்*

ஊழல், மேசடி ஒழிப்புப் பிரிவின் செயலாளர் காரியாலயமும், பொலிஸ் நிதிமோசடி விசாரணைப் பிரிவும் (எவ்.சீ.ஐ.டி) கடந்த ஒருமாத காலமாக செயலிழந்திருக்கின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த இரு பிரிவுகளிலும் பணிபுரியும் புலனாய்வு அதிகாரிகளுக்கான உத்தியோகபூர்வ கொடுப்பனவுகளுக்கான நிதியில் ஏற்பட்டுள்ள குறைபாடே இந்தப் பின்னடைவுக்குக்காரணமெனவும்தெரியவருகின்றது.

கூட்டு அரசின் நூறு நாள் வேலைத்திட்டத்தின்கீழ் ஊழல், மோடி ஒழிப்புப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. முறைப்பாடுகள் மீதான விசாரணைகளை நடத்துவதன் மூலம் இந்தப் பிரிவுக்குத் தேவையான ஒத்துழைப்பை பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு வழங்கிவந்தது. எனினும், கடந்த ஒரு மாத காலமாக நிதி பற்றாக்குறை காரணமாக இந்தவிரு பிரிவுகளின் செயற்பாடுகளும் செயலிழந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5)

## கிழக்கில் தமிழரின் பலம் குறைந்ததனால்தான் வடக்கு - கிழக்கு இணைப்புத் தீர்மானம் வந்தது

*மட்டக்களப்பில் மாவை எம்.பி. தெரிவிப்பு*

மட்டக்களப்பு, மே 1
"கிழக்கு மாகாணத்தில் தமிழரின் பலம் குறைவாக இருக்கின்றது. இதனால் கிழக்கு மாகாணத்துக்கு துணையாக வடக்கு மாகாண மக்களின் பலம் கொடுக்கப்படவேண்டும் என்பதை அனைவரும் ஏற்றுக் கொண்டே, வடக்கு கிழக்கு இணைப்பை வலியுறுத்திய தீர்மானம் 1949ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது"

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா தெரிவித்தார்.

தந்தை செல்வா நினைவு நிகழ்வு மட்டக்களப்பில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

1961ஆம் ஆண்டு காலப் பகுதியில் சத்தியாக்கிரத்தில் நானும் மாணவனாக இருந்தபோது பங்குபற்றியிருந்தேன். அந்தக் காலத்தில் இடம் பெற்ற சம்பவங்களை நினைத்துப் பார்க்கின்றேன். கிழக்கு மாகாணத்தின் பல பிரதேசங்களில் முஸ்லிம் பெண்கள் போராட்டத்தில் பங்கேற்றுக்கொண்டமை இன்னும் கண்முன்னே இருக்கின்றது.

அந்தக் காலத்திலிருந்தே தமிழர் தாயகத்தில் முஸ்லிம்களுக்கும் பங்கு உள்ளதை தந்தை செல்வா கூறியிருந்தார். இந்த தமிழர் தாயகப் பிரதேசம் முஸ்லிம் மக்களுக்கும் சொந்தமானது என்பதையும் அவர் கூறியிருக்கின்றார். மறைந்த தலைவர் அஷ்ரப்கூட தமிழர் விடுதலை கூட்டணி ஊடாகவே அரசியலுக்குள் பிரவேசித்திருந்தார். அவர் இறக்கும் வரை எங்களுக்கும் அவருக்கும் எந்தவித முரண்பாடுகளும் ஏற்பட்டதில்லை.

வடக்கு - கிழக்கு மாகாணம் ஏன் இணைந்திருக்க வேண்டும் என்பதை 1949ஆம் ஆண்டு தந்தை செல்வா மிகவும் தெளிவாக சுட்டிக் காட்டியிருக்கின்றார். யாழ்ப்பாணம் தமிழர்களை நிறைவாகக் கொண்ட பிரதேசம். ஆனால் கிழக்கு மாகாணத்தில் அவ்வாறில்லை. பல இனத்தவர்கள் வாழ்கின்றனர். இங்கு தமிழரின் பலம் குறைவாக இருக்கின்றது. கிழக்கு மாகாணத்தின் பலத்துக்கு துணையாக வடக்கு மாகாண மக்களின் பலம் கொடுக்கப்பட வேண்டும் என்பதை அனைவரும் ஏற்றுக் கொண்டமையால் இந்த முடிவு எடுக்கப்பட்டது - என்றார். (வ-5)

## அமைச்சு செயலர்கள் சிலருக்கு விரைவில் இடமாற்றம்!

அரசில் ஏற்படும் சில மாற்றங்களுக்கமைவாக அடுத்த இருவாரங்களில் சில அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் இடமாற்றம் வழங்கப்படலாம் என அரசின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

பல்வேறு பிரச்சினைகளுக்கு உள்ளாகியிருக்கும் சில அமைச்சுகளின் செயலாளர்கள் இந்த இடமாற்றத்துக்கு உட்படுவார்கள் எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அரச நிறுவனங்களின் தலைவர்கள் சிலர் அடுத்த இரு வாரங்களில் மாற்றப்படுவார்கள் என அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கடந்த 20ஆம் திகதி ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவித்திருந்தார். (வ-5)

## காணாமற்போனோரின் உறவுகளால் மற்றொரு அமைப்பு உருவாக்கம்



யாழ்ப்பாணம், மே 1
வடக்கு - கிழக்கில் காணாமற்போனோரின் உறவுகளால் மற்றுமொரு புதிய அமைப்பு நேற்று உருவாக்கப்பட்டது. வடக்குமாகாண முதலமைச்சரின் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தின் பின்னர் புதிய அமைப்பின் உத்தியோகபூர்வ அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
'வடக்கிலும் கிழக்கிலும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான குரல்' என்ற அமைப்பு காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கான பொறுப்புக் கூறலை பன்னாட்டு மட்டத்துக்கு எடுத்துச் சொல்லும் நோக்கில் உருவாக்கப்பட்டது. வடக்கு - கிழக்கில் மக்கள் போராட்டம் வலுவுற்றிருக்கும் தருணத்தில் தகவல் ரீதியாகவும் கருத்து ரீதியாகவும் தெளிவான கோரிக்கைகளை பன்னாட்டு மட்டத்தில் முன்வைக்க வேண்டும்.

பாதிக்கப்பட்டோருக்கான நீதியை பன்னாட்டுத் தரப்புகளும் இலங்கை அரசிடம் மட்டும் கையளித்துவிட்டு காலத்தை இழுத்தடித்துக் கொண்டுள்ளார்கள். சமுதாயத்துக்கு ஆதாரபூர்வமாகவும் கருத்தியல் ரீதியாகவும் உரத்துக் கூறவேண்டிய ஈழத்தமிழர்களின் ஒன்றிணைந்த குரலாக இந்த அமைப்பு இயங்கும். இராணுவ ஆக்கிரமிப்புக்கு தொடர்ந்தும் ஈழத்தமிழர்கள் ஆளாக்கப்பட்டிருக்கின்றார்கள். அமைதியான போராட்டங்களில் ஈடுபடுபவர்களும், நீதி கேட்பவர்களும் புலனாய்வுக் கண்காணிப்பு ஊடாக அச்சுறுத்தப்படுகின்றார்கள். இலங்கையில் உள்நாட்டு நீதித்துறை முக்கியமான விசாரணைகளை எல்லாம் கிடப்பில் போட்டு வருகின்றது.

இனஅழிப்புப் போரின் பலவித பரிமாணங்களில் பாதிக்கப்பட்டவர்களாகவும் போராட்டங்களை முன்னெடுப்பவர்களாகவும் பெண்கள் இருக்கிறார்கள் . ஆனால் பெண்களின் குரலை அமைப்பு ரீதியாக முன்னிலைப்படுத்தும் தன்மை எம்மிடையே மிகவும் குறைவாக உள்ளது. ஒருங்கிணைந்த வேலைப்பாட்டுக்கான தளமாகவும் இந்த அமைப்பு இயங்கும் என்றுள்ளது.

இந்தச் சந்திப்பையடுத்து செய்தியாளர்களிடம் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்ததாவது:
அரச தலைவருடனான சந்திப்பின்போது எமது நிலைப்பாடு தொடர்பில் எடுத்துக் கூறி அடுத்த கட்ட நிலமை தொடர்பில் உறுதியான பதிலைப் பெற்றுத்தருமாறு காணாமற்போனோரின் உறவுகள் கோரியிருந்தனர். இதற்கான கருத்துப் பரிமாற்றமாகவே இந்தச் சந்திப்பு காணப்பட்டது. தற்போது நடத்தப்படும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டம் நீண்டு செல்வதால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது. எனவே இதற்குரிய தீர்வைப் பெறுவதற்கான வழி வகைகளை கண்டறிவதே சந்திப்பின் நோக்கமாகும்.

இவை தொடர்பில் பேச்சுக்கள் மற்றும் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்காக காணாமற்போனோர் தொடர்பான தரவுகளை பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது எனவும் அதனை எவ்வாறு பெறுவது எனவும் ஆராய்ந்தோம். இதன்போது கடந்த காலங்களில் பன்னாட்டு செஞ்சிலுவைச் சங்கம் போன்ற அமைப்புகளால் பெறப்பட்ட தரவுகளையும் சேகரிக்கலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. இன்றைய (நேற்றைய) சந்திப்புக்களின் அடிப்படையில் இவை தொடர்பில் அரச தலைவருடனான சந்திப்பின்போது உரையாடப்படும் - என்றார்.

இந்தச் சந்திப்பில் காணாமற்போனோரின் உறவுகளுடன் வட மாகாண சபை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம் , அனந்தி சசிதரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (வ-10-101)

## மாயக்கல்லி மலையில் அத்துமீறுவது அரசமைப்புக்கு முரணானது

*கிழக்கு மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு*

மட்டக்களப்பு, மே 1
"கிழக்கு மாகாண சபை அமைத்துள்ள குழு, அதன் அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு முன்பாக மாயக்கல்லி மலையில் யாராவது அத்துமீறி செயற்பட்டால், அது அரசமைப்புக்கு முரணானதாகும்"

இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

அரசமைப்பை மீறி நடப்பவர்கள் அதிகாரிகளாக இருந்தாலும் அவர்கள்மீது நீதித்துறையால் கடுமையான நடவடிக்கை எடுக்கமுடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இறக்காமம் ஜாமிய்யதுத் தைக்கா பள்ளிவாசலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமின் பங்கேற்புடன் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இதனைக் கூறினார்,

கிழக்கு மாகாண முதலமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:
கிழக்கு மாகாணசபையில் கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு ஏற்ப, மாகாண சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைவாகக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவின் அறிக்கை கிடைத்ததும் மாயக்கல்லி மலையில் அத்துமீறல் தொடர்பில் மாகாண சபை இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ளவுள்ளது.

இந்தக் குழுவில் முதலமைச்சர், காணியமைச்சர் மற்றும் அம்பாறை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாகாண சபை உறுப்பினர்கள், அம்பாறை மாவட்டச் செயலாளர், காணி ஆணையாளர், அம்பாறை மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர், இறக்காமம் பிரதேச செயலாளர், பிரதேச சபையின் செயலாளர், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள், நில அளவைத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் தமன பொலிஸாரும் இந்தக் குழுவில் உள்ளடங்குகின்றனர்.

இந்தக் குழுவினர் விரைவில் கூடி சுமுகமாகக் கலந்துரையாடி மாணிக்கமடு பிரச்சினைக்கு நியாயமான தீர்வொன்றைப் பெற்று அடுத்த மாகாணசபைக்கூட்டத்தில் அறிவிக்கவுள்ளோம்.

இனமுறுகல் ஏற்படாவண்ணம் சுமுகமாக இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கே அனைவரும் விரும்புகின்றோம். அதையே நாம் இப்போது செய்து வருகின்றோம். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் அரச தலைவருடன் பேசி இந்தப் பிரச்சினையைத் தீர்க்க சாதகமாக நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

அத்துடன் ரவூப் ஹக்கீமும், எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனும் இணைந்து செயலாற்றுவதன் ஊடாக இந்தப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வுகாண முடியும் என நம்புகின்றோம் என்றார். (வ-ய-46)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதிரத்தையே உழைப்பாக்கிய உத்தமரை வணங்குவோம்

## யாழ். பல்கலை முகாமைத்துவ மாணவர்கள் மே தினச் செய்தி

முல்லைத்தீவு, மே 1
உதிரத்தையே உழைப்பாக்கி உலகத்தையே உய்விக்கும் உழைப்பாளர் பெருந்தகைகளை மேதின நன்னாளில் நாமும் தலைவணங்கி நிற்கின்றோம்.

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீட மாணவர்கள் மே தினச் செய்தியை விடுத்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:
உலகுக்கான உணவு, உடை, உறையுள் உள்ளடங்கிய அனைத்தையும் நீங்களே வழங்குகின்றீர்கள். ஆனால் உங்களது தேவைகள் மட்டும் நெடுங்காலமாகப் பூர்த்தி செய்யப்படாமலே உள்ளன. அரசியல்வாதிகள் தொடக்கம் முதலாளி வர்க்கம் வரையும் உங்கள் உழைப்பைத் தங்கள் இலாபமாகவும், அதிகாரமாகவும் மாற்றி ஆடம்பரமாக வாழும் பொறிமுறையைத் தத்ரூபமாக உருவாக்கி வாழ்கின்றனர். நீங்கள், கரடுமுரடான வாழ்க்கையை வாழ்ந்து வாழ்நாளை கழித்துவருகிறீர்கள். ஒவ்வொருமுறையும் தொழிலாளர் உரிமைக்காக நடத்தப்படும் மேதினம் தேர்தலுக்கான வாக்குச்சேகரிப்பின் முன்னோட்டமாகவே நடத்தப்படுகின்றது. தொழிலாளர்களாகிய நீங்கள் விழித்துக்கொள்ளும் வரை உங்கள் உரிமைகளை விட்டுக் கொடுக்காமல் வாழும்வரை இந்தநிலை தொடர்ந்து கொண்டே இருக்கும்.

உங்கள் உரிமைக்கான இந்த நாளில் உங்களது சுபீட்ச வாழ்வுக்காக பிரார்த்திப்பதோடு சிலகோரிக்கைகளையும்முன்வைக்கின்றோம்.

1. தமிழர் உரிமைக்கான நிரந்தரத் தீர்வு காலஇழுத்தடிப்பின்றி வழங்கப்படவேண்டும்.
2. ஆக்கிரமிப்புக்குட்பட்டிருக்கும் நிலங்கள் மற்றும் கடற்பரப்புக்கள் விடுவிக்கப்பட்டு விவசாயம், மீன்பிடி மற்றும் இதர தொழிலாளர்களின் தொழில்கள் பாதுகாக்கப்படவேண்டும்.
3. பல்கலைக்கழக கல்விமுறைகள், தொழில்சார்கல்விக்கட்டமைப்பாகமாற்றப்படவேண்டும்.
4. அரசியல் நன்மைகளுக்காக தகுதியற்றவர்களுக்குத் தரப்படும் வேலைவாய்ப்புகள் பட்டதாரிகளுக்கு வழங்கப்படவேண்டும்.
5. வடக்கு - கிழக்கு கடற்பிராந்தியங்களில் தெற்கு மீனவர்களின் பிரசன்னம் தவிர்க்கப்படவேண்டும்.
6. அரசியல் மற்றும் அதிகாரப்பிரயோகத்தைப் பயன்படுத்தி வடக்கு, கிழக்கில் இடம்பெற்றுவரும் அத்துமீறிய குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்- என்றுள்ளது. (த-4-7)

# களனி கங்கைக்குள் மகனை வீசிய தாய்

*சிறுவன் சடலமாக மீட்பு*

தாயாரினால் களனி கங்கைக்குள் தூக்கி வீசப்பட்ட ஆறு வயதுச் சிறுவன் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் கடுவலைப் பாலத்தில் இருந்து களனி கங்கைக்குள் மகனைத் தூக்கி வீசிவிட்டுத்தானும் தற்கொலை செய்துகொள்வதற்காகத் தாயார் ஆற்றில் பாய்ந்துள்ளார். இதைக்கண்ட பிரதேசவாசிகள், தாயைக் காப்பாற்றினர். எனினும், சிறுவன் காணாமற்போயிருந்தார். இதையடுத்துக் கடற்படையினரும், பிரதேசவாசிகளும் இணைந்து தேடுதல் நடத்திய நிலையிலேயே குறித்த பாலத்துக்கு அருகிலிருந்து சிறுவனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. அத்துடன், பாலத்துக்கு மேல் இரத்தக் கறைகள் இருந்துள்ளன. மகன் ஆற்றல் பாய்வதற்கு மறுப்பு தெரிவித்ததால், தாய் அவரை தாக்கியிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். 39 வயதான தாய் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவருக்கு மேலும் இரண்டு குழந்தைகள் இருக்கின்றனர். கணவனுடன் ஏற்பட்ட தகராறு காரணமாகவே தற்கொலை செய்ய முயற்சித்ததாக அவர் கூறியுள்ளார். (த)

# ஒரே இரவில் ஆட்சியை பிடிக்கும் வல்லமை என்னிடம் இருந்தது

*எஸ்.பிக்கு பொன்சேகா பதிலடி*

"நான் நினைத்திருந்தால் ஒரே இரவில் கொழும்பைச் சுற்றிவளைத்து ஆட்சியைக் கைப்பற்றிருக்கலாம். அதற்குரிய வல்லமை கடந்த காலத்தில் என்னிடம் இருந்தது. எனினும், ஒழுக்கத்தை மீறிச் செயற்படும் பழக்கம் என்னிடம் இல்லை என்பதால் அவ்வாறு செய்யவில்லை"

இவ்வாறு முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

பொன்சேகாவுக்குப் பாதுகாப்புத்துறையில் உயர் பதவியை வழங்குவதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நகைச்சுவையாகவே கூறினார் என்று அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்திருந்தார். இது குறித்துக் கருத்து வெளியிட்ட அமைச்சர் சரத் பொன்சேகா, "எஸ்.பி.திஸாநாயக்க அமைச்சர் என்பதால் அவரை மதிக்கின்றேன். ஆனால், அனைத்தையும் கேலியாக அவர் நினைப்பது தவறு. அத்துடன், அமைச்சர் ஜோன் செனவிரத்ன அமைச்சுப் பதவி தொடர்பில் அச்சத்திலேயே இருக்கின்றார் என்றார். (வ-5)

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 21.05.1931 மறைவு 28.04.2017

திருமதி

இராசலட்சுமி சதாசிவம்



வாழ்க்கைச் சக்கரத்தில் –மனிதர்
வருவதும் போவதும் வழமை
இதுவே இயற்கையின் நியதி
இருப்பினும் ....
அன்னையே !
உன்னைப் போல அன்புடைய
உள்ளத்தை கண்டுவிட இயலாதே !
இந்த ஜென்மத்தில்
முகம் மலர்ந்து
எமை இன்முகத்துடன்
வரவேற்று
பாசப் பரிவூட்டும் உங்கள்
பிரிவை எப்படி ஏற்கமுடியும்
வாழ்கைச் சக்கரத்தில் –
மனிதர்
வருவதும் போவதும் வழமை
உம் பிரிவு எம்மை
விம்மி அழ வைக்கிறது.

தேவராஜா அன்கோ
வவுனியா TATA Transport (pvt)Ltd

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 21.05.1931 மறைவு 28.04.2017

திருமதி இராசலட்சுமி சதாசிவம்

(அற்புதா ரேடிங் கம்பனி உரிமையாளரின் அன்புத் தாயார்)



மாசற்ற மனம் கொண்டாய்
மாசில்லா மனிதனானாய்!
மக்கள் மனம் பிடித்தீர்கள்
பார் போற்றிட வாழ்ந்தீர்கள்!
இன்பமே சூழ்க எல்லோரும்
வாழ்க என்று சொல்லும்
உள்ளம் - இவ்
உலகைவிட்டு பிரிந்த செய்தி
கேட்டு - எம்உள்ளம் உடைந்து
போனதே அம்மா உன் குடும்ப
உறவுகள் உன்னை
பிரிந்துபடும்
துயர்கள் அறிவாயா அவர்கள் துயர் துடைக்கத்தான் நீ வருவாயா
காலன்தான் உன்னை விடுவானா? உறவுகள் ஒன்று கூடி அன்புற
பிரிவுறா பேசுவதை - உன்னுள் விருப்பமாய் கொண்டவரே - எமை
விம்மியிட்டு சென்றாயோ மேல் உலகு சொந்தமென்று...

அற்புதா ரேடிங் கம்பனி ஊழியர்கள்.
யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 21 |  | 28 |
| 05 | | 04 |
| 1931 | | 2017 |

## திருமதி இராசலட்சுமி சதாசிவம்

காரைநகர் கோவளம், நட்டுப்பாளியைப் பிறப்பிடமாகவும், வெள்ளவத்தை, இல. 15, இராஜசிங்க வீதி மற்றும் இல.08, மாவடி வீதி, ஐந்து சந்தி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசலட்சுமி சதாசிவம் 28.04.2017 வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வாரிவளவைச் சேர்ந்த முன்னாள் நாத்தாண்டிய பிரபல வர்த்தகர் காலஞ்சென்ற கந்தையா சதாசிவத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நாத்தாண்டிய பிரபல வர்த்தகர் அம்பலவாணர் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்புப்புதல்வியும் வாரிவளவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சாமி கந்தையா - கணபதிஅம்மா தம்பதியரின் மூத்தமருமகளும் காலஞ்சென்றவர்களான நடராசா, கமலாம்பிகை ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற குலதேவராசா(TATA Transport - Devarajah & Co, வவுனியா), கிருஷ்ணமூர்த்தி (SK Traders, யாழ்ப்பாணம்), உமாதேவி, புஸ்பாதேவி (கனடா), புஸ்ப்பராசா (உரிமையாளர், Puspa & Co, கொழும்பு, Patiya Gama Tea factory Deltotha, Romboda State, Ramboda, Partner A Gradge Holding), சறோஜாதேவி (யாழ்ப்பாணம்) அற்புததேவராஜா, புஸ்பாபாலன் (Atputha Trading Company - யாழ்ப்பாணம்), சந்திராதேவி(கனடா), நந்தகுமார்(கனடா), ஆகியோரின் அன்புத்தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2017) திங்கட்கிழமை காலை 6.00 மணியளவில் யாழ்ப்பாணம், ஐந்து சந்தியில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 3, மாவடி வீதி
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளர்களின் உழைப்பே முழு உலகையும் தாங்கியுள்ளது

## தலைமை அமைச்சர் மேதினச் செய்தி



யாழ்ப்பாணம், மே 1
"வேலை செய்யும் மக்களின் வியர்வை மற்றும் உழைப்பின் மீதே முழு உலகமும் தங்கியுள்ளது. வரலாறு முழுவதும் அவர்கள் தமது உரிமைகளுக்காக மேற்கொண்ட தொடர்ச்சியான போராட்டம் மற்றும் அர்ப்பணிப்பின் விளைவாக உலகின் கவனத்தை தொழிலாளர் மீது ஈர்க்கும் வகையில் பன்னாட்டு ரீதியாக மேதினத்தைக் கொண்டாடுவது ஆரம்பமாகியது"
இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
மேதினத்தை முன்னிட்டு அனுப்பிய ஊடக அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
தற்காலத்தில் உழைக்கும் மக்கள் என்பது மிகவும் பரந்த அர்த்தத்தைக் கொண்டுள்ளது. அது தொடர்ந்தும் தொழிற்சாலையில், பண்ணையில் உழைப்பைச் சிந்தும் ஒரு குழுவினருடன் மாத்திரம் வரையறுக்கப்படுவதில்லை. நவீன தொழில்நுட்ப உலகில் மனித ஊழியத்துக்கு பரந்தளவான பல சந்தர்ப்பங்களை உருவாக்கியுள்ளதுடன் அதற்கமைவாக வேலை செய்யும் மக்கள் எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் பிரச்சினைகளும் நாளுக்கு நாள் மாற்றமடைந்து வருகின்றன.
சம்பிரதாய மேதினக் கொண்டாட்டத்துடன் மாத்திரம் சுருங்கி விடாது, இந்த நவீன போக்குகள், சவால்களை இனங்கண்டு வேலை செய்யும் மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கவும், அவர்களது நலன்கள் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அரச, தனியார் துறைகள் ஒன்றிணைந்து கலந்துரையாடல்களை மேற்கொள்ளுதல், விரிவான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல் என்பன அத்தியாவசியமானதாகும்.
நவீன தொழில்நுட்ப உலகில் புதிய சமூக, அரசியல் சவால்களுக்கு மத்தியில் தொழிலாளர்களுக்கு உரிய கௌரவம் கிடைக்கக் கூடிய, தேசத்தின் முன்னேற்றத்துக்காகத் தமது பணியை ஆற்றுவதற்குத் தேவையான பின்புலம் உருவாக்கவேண்டும். அவர்களது உழைப்புக்கு உரிய பெறுமானம் கிடைக்கும் சிறப்பான எதிர்காலமொன்றுக்காக உரையாடல் ரீதியான, இணக்கப்பாடு மிக்க பணியை மேற்கொள்ள மேதினத்தைச் சந்தர்ப்பமாக மாற்றிக் கொள்வோம் என்றுள்ளது. (வ-10)

# குருதியாலும் கண்ணீராலும் உருவாக்கப்பட்டவையே தொழிலாளர் உரிமைகள்



## மேதினச் செய்தியில் அரச தலைவர் சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 1
"மக்களை சங்கிலிகளால் பிணைத்து, அவர்களை தமது உடைமையாகக் கருதி முதலாளித்துவ வர்க்கத்தினர் செயற்பட்ட காலம் முதல் தொழிலாளர் உரிமைகளை வென்றெடுப்பதற்காக ஒரே மேசையில் அமர்ந்து முதலாளி வர்க்கத்துடன் பேரம் பேசக்கூடிய தற்போதைய காலம் வரை தொழிலாளர்கள் கடந்துவந்த பாதையானது, அவர்கள் சிந்திய குருதியாலும் வியர்வையாலும் கண்ணீரினாலுமே உருவாக்கப்பட்டது என்பதை பன்னாட்டு தொழிலாளர் தினம் எமக்கு நினைவூட்டுகின்றது"
இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.
மேதினத்தை முன்னிட்டு ஊடகங்களுக்கு அனுப்பிய அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
மனித உழைப்பால் உருவாக்கப்பட்ட மேற்கட்டுமானமானது, மனித உழைப்பின் பெருமைமிக்க உன்னதத் தன்மை முன் மண்டியிட்ட வரலாற்றுரீதியான நிகழ்வை நினைவுகூரும் முகமாக கொண்டாடப்படும் பன்னாட்டு தொழிலாளர் தினத்தை முன்னிட்டு மே தினத்தைக் கொண்டாடும் உலகவாழ் சகோதர தொழிலாளர் சமூகத்துக்கு மரியாதை செலுத்தியே இந்தச் செய்தியை வெளியிடுகிறேன். எஸ்.டபிளியு.ஆர்.டீ. பண்டாரநாயக்கவால் மே தினம் விடுமுறை தினமாக பிரகடனம் செய்யப்பட்டது முதல் இலங்கைவாழ் தொழிலாளர் சமூகத்துக்கும் தாம் வென்றெடுத்த வெற்றிகளை சீர்திருத்திப்பார்க்க கிடைக்கும் வாய்ப்பாகவே அமைகின்றது எனலாம்.
இத்தகைய நீண்டகால போராட்டப் பாதையில் புடம்போடப்பட்டு, நவீன ஜனநாயக சமூகக் கட்டமைப்பிலும் முக்கியமான சக்தியாக செயற்படும் தொழிலாளர் வர்க்கம் நாட்டில் ஜனநாயகத்தை வெற்றி பெறச்செய்யும் போராட்டத்திலும் முக்கிய பங்கை வகித்தனர் என்பதையும் நினைவு கூர விரும்புகிறேன்.
நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல், பொருளாதார சுபீட்சத்தை அடைதல் உள்ளிட்ட நாடு எதிர்நோக்கியிருக்கும் சவால்களை வெற்றி கொள்ளும் செயற்பாடுகளிலும் தொழிலாளர் சமூகத்தின் மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்பு கைவிட முடியாததாகும். தொழிலாளர்கள் தமது உரிமைகளையும், வரப்பிரசாதங்களையும் மேலும் பலப்படுத்திக்கொள்ளும் அதே சமயம், நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார செயன்முறை மற்றும் உலகின் புதிய போக்கு ஆகியவற்றையும் அறிந்து தெரிந்து பொறுப்பு மிக்கதொரு சமூக சக்தியாக செயற்படுவார்கள் என நான் நம்புகிறேன்.
1917ஆம் ஆண்டு நிகழ்ந்த உன்னத ரஷ்ய புரட்சியின் வெற்றிகரமான நூறாண்டு நிறைவடையும் இந்த ஆண்டில் கொண்டாடப்படும் மே தினமானது, பலமான உந்துசக்தியை எம் அனைவருக்கும் பெற்றுக் கொடுத்துள்ளது. அந்த உற்சாகத்துடன் இன்று மே தினத்தைக் கொண்டாடும் உலகவாழ் தொழிலாளர்களோடு நானும் இணைந்து கொள்வதோடு, மனித சமூகத்தின் சுதந்திரத்துக்காகவும்,
தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைகளுக்காகவும் தமது வியர்வையையும் கண்ணீரையும் சிந்திப் போராடிய, குரல் கொடுத்த, உயிர்த்தியாகம் செய்த அனைத்து தொழிலாளர் சகோதரர்களுக்கும் எனது கௌரவமான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றுள்ளது. (வ-10)

# தொழிலாளர்களின் தியாகங்களுக்கு மரியாதை செலுத்தவேண்டிய நாள்

## மேதினச் செய்தியில் எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து



யாழ்ப்பாணம், மே 1
"தொழிலாளர் வர்க்கத்தினரின் வெற்றிக்கு வரவேற்பைப் பெற்றுக்கொடுப்பதற்கும், உலகவாழ் மக்களின் பொருளாதார மற்றும் சமூக உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் தியாகங்களைச் செய்த தொழிலாளர்களுக்கு மரியாதை செலுத்துவதற்கும் கிடைக்கப் பெற்றுள்ள ஒரு சந்தர்ப்பமே பன்னாட்டுத் தொழிலாளர் தினமாகும்"
இவ்வாறு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்
மேதினத்தை முன்னிட்டு அனுப்பிய ஊடக அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
தற்போதைய நிலைக்கு இலங்கையை கொண்டு வருவதற்காக பல வருட காலமாக தொழிலாளர் வர்க்கத்தினர் முக்கிய பங்களிப்புச் செலுத்தியுள்ளனர். அதனால் எமது நாட்டின் முன்னேற்றம் மற்றும் அபிவிருத்தியின் பொருட்டு தமது சக்தியை ஈடுபடுத்தி சேவையாற்றிய தொழிலாளர் வர்க்கத்தினருக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.
எமது நாடானது தற்போது வரலாற்றிலே ஒரு முக்கிய கட்டத்தை அடைந்துள்ளது. தேசிய அபிவிருத்திக்காக சிறப்புடன் பணியாற்றும் அதேவேளை, தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் என்பவற்றை அடைந்து கொள்வதற்காக உணர்ச்சிபூர்வமாக அர்ப்பணிப்புடன் பணியாற்றுமாறும் தொழிலாளர் வர்க்கத்திடம் நான் வேண்டிக்கொள்ள விரும்புகிறேன்.
இறுதியாக, இந்த நாளில் தொழிலாளர் வர்க்கத்தின் போராட்டம், வெற்றி மற்று அவர்கள் முகம் கொடுத்து வருகின்ற சவால்கள் என்பவற்றை முன்னிலைப் படுத்தி அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் ஒரு மேடையாகவும்,
தொழிலாளர்களின் முயற்சிகளை நினைவுகூருவதற்கான ஒரு சந்தர்ப்பமாகவும் தமது மே தினக் கொண்டாட்டத்தை அமைத்துக் கொள்ளுமாறு அனைத்து அரசியல் கட்சிகளிடமும் நான் வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன் என்றுள்ளது. (வ-10)

# தொழிலாளர் உரிமைகளை வென்றெடுத்த நன்னாள்

## மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மே 1
"உழைக்கும் வர்க்கம் உரிமைகளை வென்றெடுத்த உன்னதத்தைக் கொண்டாடி மகிழும் மேதின நன்னாளில் உழைக்கும் தொழிலாளர்கள் அனைவருக்கும் மேதின நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்"
இவ்வாறு மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். கிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.
மேதினத்தை முன்னிட்டு ஊடகங்களுக்கு அனுப்பிய செய்திக் குறிப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
தொழிலாளர்களது உரிமைகளைப் பாதுகாக்கவும் அதனை உரிய முறையில் பெற்றுக்கொடுக்கவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மிகப்பெரும் பங்காற்றியுள்ளது. தொழிலாளர் தினத்தை விடுமுறை நாளாக பிரகடனம் செய்தல், தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டவரைவு நிறைவேற்றல், தொழிலாளர் விபத்து இழப்பீட்டை இரண்டு மடங்காக அதிகரித்தல், தொழிலாளர் உடன்படிக்கை அறிமுகப்படுத்தல், போர்க் காலத்திலும் அரச ஊழியர்களது சம்பளத்தை அதிகரிக்கச் செய்தல், தெற்காசியாவில் முதல் நாடாக அடிப்படைச் சம்பளத்தை நிர்ணயித்தல் உள்ளிட்ட பல்வேறு தொழில்சார் நலன்களை சிறிலங்கா சுதந்திரக் கட்சியே பெற்றுக்கொடுத்துள்ளது.
தனியார், அரச தொழிலாளர்களது சம்பள பிரச்சினைகளுக்கும் நல்லாட்சி அரசு குறுகிய காலத்தில் தீர்வு பெற்றுக் கொடுத்துள்ளமை வரவேற்கத்தக்கது. நாட்டின் நிலையான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் உள்ள சவால்களை வெற்றி கொள்வதற்கு உழைக்கும் மக்கள் அரசுக்கு ஒத்துழைப்புக்களை வழங்க முன்வர வேண்டும்.
உழைக்கும் மக்களின் தொழில், பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலன்புரி விடயங்கள் தொடர்பில் அரசு அதிக கவனம் செலுத்தியுள்ளமை தொழிலாளர்களுக்குக் கிடைத்துள்ள பெரும் வெற்றியாகும் என்றுள்ளது. (வ-10)

# தொழிலாளர் உரிமைகளுக்காக அனைவரும் ஒன்றிணைவோம்

## மலையக மக்கள் முன்னணி அழைப்பு



யாழ்ப்பாணம், மே 1
"தொழிலாளர்களின் உரிமைகளுக்காகவே மேதினம் கொண்டாடப்படுகின்றது. ஆனால் இன்று அந்த மேதினம் திசைமாறி பயணித்துக் கொண்டிருக்கின்றது. தொழிலாளர் தினமான இன்றைய தினத்தில் அவர்களின் உரிமைகளுக்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டும்"
இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் முற்போக்கு கூட்டணியின் இணைத்தலைவரும் கல்வி இராஜாங்க அமைச்சருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.
மேதினத்தை முன்னிட்டு ஊடகங்களுக்கு அனுப்பிய செய்திக்குறிப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
பன்னாட்டு ரீதியாக பல தினங்கள் கொண்டாடப்பட்டாலும் பாகுபாடு இல்லாமல் எல்லாத் தொழிலாளர்களும் இணைந்து கொண்டாடும் ஒரு நாள் என்றால், அது மேதினம் மாத்திரமே. இன்றைய தினத்தில் தொழிலாளர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து இந்தத் தினத்தை கொண்டாடுகின்றார்கள். ஆனால் மலையகத்தில் இந்த தினமானது ஒவ்வொருவருடைய தொழிற்சங்க அரசியல் பலத்தை நிரூபிக்கின்ற ஒரு தினமாக மாறிவிட்டது. இந்த நிலையில் இருந்து தொழிற்சங்கங்கள் விடுபட வேண்டும்.
எமது பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அன்றாடம் வழங்கப்படுகின்ற வேதனம் மிகவும் குறைவானதாகவே இருக்கின்றது. கூட்டு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பொழுது பெருந்தோட்ட நிறுவனங்கள் கூறிய காரணம் தேயிலை விலையில் பெரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்பதே. ஆனால் இன்று தேயிலை இறப்பர் ஆகியவற்றின் விலைகள் அதிகரித்துள்ளன. அப்படியானால் தொழிலாளர்களின் நாள் வேதனத்தையும் அதிகரிக்க முடியும்.
இதனை வலியுறுத்துவதற்காக ஏன் மலையகத்தில் இருக்கின்ற தொழிற்சங்கங்கள் எல்லாம் ஒன்றிணையக் கூடாது? அப்படி ஒரு நிலை ஏற்படுமானால் நாங்கள் எங்கள் பதவிகளுக்கு அப்பால் சென்று ஒன்றிணைந்து குரல் கொடுக்கத் தயாராக இருக்கின்றோம்.
எமது தமிழ் முற்போக்கு கூட்டணி அந்த நிலைப்பாட்டிலேயே செயற்பட்டு வருகின்றது. நமக்கு பல அரசியல் தொழிற்சங்க சிந்தனைகள் இருக்கலாம். ஆனால் தொழிலாளர்களின் நலனை கருத்திற் கொண்டு நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயற்படாவிட்டால் அரசின் மூலமாக தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய எந்த ஒரு விடயத்தையும் பெற்றுக் கொடுக்க முடியாது என்றுள்ளது. (வ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா கால்பந்தாட்டச் சங்கத்துக்கு நிரந்தரக் கட்டடம் அமைக்க வேண்டும்

## சங்கத்தின் செயலாளர் கோரிக்கை

வவுனியா, மே 1

சங்கத்தின் நிர்வாக சபையின் பொதுக்கூட்டங்களிலும் அரசியல் தலையீடுகள் காணப்பட்டன. ஆனால் அதையும் கடந்து இன்று நாம் வெற்றியடைந்துள்ளோம்.

சங்கத்தின் வளர்ச்சிக்கு புலம்பெயர் சமூகத்தவர்களின் உதவிகளும் தேவை. சங்கத்துக்கான் நிரந்தரக் கட்டடத்தை அமைத்துத் தர வேண்டும். இவ்வாறு வவுனியா கால்பந்தாட்டச் சங்கத்தின் செயலாளர் அ.நாகராஜா தெரிவித்தார்.

வவுனியா கால்பந்தாட்டச் சங்கத்தின் புதிய நிர்வாகச் சபைத் தெரிவு வவுனியா இந்திரன் விருந்தினர் விடுதியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன் போது இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அனைத்து விளையாட்டுக்கழகங்களின் ஒத்துழைப்பால் மறுபடியும் நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது.

சங்கத்தை முன்னேற்றுவதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். புலம்பெயர் சமூகம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தாய்ச்சங்கத்திலிருந்து குறைந்தளவு நிதிகிடைக்கப் பெறுகின்றது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சங்கத்துக்கான உதவிகளை வழங்க முன்வர வேண்டும். சங்கத்தில் சிறந்த பயிற்சியாளர்களை உருவாக்கியிருக்கின்றோம்.

கடந்த காலங்களில் அதிக சுற்றுப்போட்டிகளை நடத்தயிருக்கின்றோம். பெரும் சவாலுக்கு மத்தியில் சங்கத்தைப் பொறுப்பெடுத்திருக்கின்றோம்.

எனினும் விளையாட்டுக்கழகங்களூடாக 2019 வரை எமக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. சகல கழகங்களும் ஒன்றிணைந்து அங்கீகாரத்தை வழங்கியுள்ளனர். வவுனியா மாவட்டத்தில் இன மத பேதமற்று செயற்படுவோம். -என்றார்.

பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் இடம்பெற்ற பொதுச்சபைக் கூட்டத்தில், பழைய நிர்வாக சபை வவுனியாவிலுள்ள கழகங்களின் வாக்கெடுப்பால் மீண்டும் தெரிவு செய்யப்பட்டது.

இதில் வவுனியா கால்பந்தாட்ட சங்கத் தலைவராக ஜோண்சன் (தேவா), செயலாளராக அ. நாகராஜா. பொருளாளராக ஏ. ஆர். எம். லரீப் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ஜ-21)




# சிவன் ஜோதிடம்

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள

**பண்டித் ஜெயதேவ் சுவாமிகள்**

**076 585 9977 , 075 787 3073**

துல்லியமாக கணித்து சொல்லப்படும் விடயங்கள்

மெய்யன்பர்களே !

இந்தியாவின் புகழ் பெற்ற மாந்திரீக ஜோதிடர் இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. கணவன் மனைவி சண்டை பிரிவு. காதல் திருமண தடை இதுவரை திருமணமே ஆகாதவர்கள் பிள்ளைகள். பெற்றோர் சொல் கேளாமல் திரிவது. வேலை தொழில் உத்தியோகம் இப்படி பல பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். பணம் பெறாமையால் தொழில் பாதிப்பு பலன் சொல்வதோடு பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். புத்திர பாக்கியம் இல்லாதவர்களுக்கு புத்திரபாக்கியம் பலன்களை சொல்வார். மேலும் உங்கள் வீட்டில் செல்வம் கொழிக்க உதவும் லட்சுமி பூசை செய்து தருவார்.

தமிழ் மொழிகளில் ஜோதிடம் சொல்லப்படும்.

100% உத்தரவாதம்

**இல.394, 1/1 மணிக்கூட்டு வீதி,**
**(பெருமாள் கோயில் வீதி, லிங்கம் கிறீம் ஹவுஸ் அருகில்)**
**யாழ்ப்பாணம்.**

நேரம்: காலை 8.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை


# முகமாலை ஆரோக்கிய அன்னை தற்காலிக ஆலயத்துக்கு அடிக்கல்



கிளிநொச்சி, மே 1

கிளிநொச்சி முகமாலை தூய ஆரோக்கிய அன்னை ஆலயத்தின் தற்காலிக ஆலயத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

போர்ச்சூழல் காரணமாக இந்த ஆலயம் முழுமையாக அழிவடைந்தது. பழமைவாய்ந்த ஆலயத்தை சீரமைப்பு செய்யும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. அதன் ஆரம்ப கட்டமாக தற்காலிக ஆலயத்துக்கான அடிக்கல் நடும்நிகழ்வு புலோப்பளைப் பங்குத்தந்தை அ.சில்வெஸ்ரார்தாஸ் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் புலோப்பளைப் பங்குத்தந்தை, திருவுலப் பணியாளர் சபையின் மாகாண இயக்குநர் அருட்தந்தை அலன்யுஸ்டஸ் மற்றும் அருட்தந்தை அலன் அகியோர் கலந்து கொண்டதுடன். முகமாலை ஆயைப் பங்கு மக்களும் கலந்து கொண்டனர். (ஜ-6)


# Sandy's Beauty Care & Training Centre

**அழகுக்கலைப் பயிற்சி நிலையம் புதிதாக திறக்கப்பட்டதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.**

அதனை முன்னிட்டு பயிற்சி அதிக குறைந்த கட்டணத்தில் மிக விரைவான பயிற்சிகள், பயிற்சி நிறைவில் சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சிபெற விரும்பும் மாணவர்கள் முற்பதிவினைப் பெற்றுக் கொள்ளவும். வயதெல்லை கிடையாது. நேரில் தொடர்பு கொள்ளவும். அனுபவம்மிக்க ஆசிரியரால் பயிற்றுவிக்கப்படும்.



01. Facial - 10 வகை
02. Makeup and dressing
03. Face cleanup
04. Bleach
05. Eyebrow shape
06. Pimple treatment
07. Hair straitening
08. Hair perming
09. Hair Colour
10. Hair cutting
11. Waxing
12. Pedeicure manicure

**மேற்குறிப்பிட்ட பயிற்சிகள் அனைத்தும் செயன்முறை விளக்கத்தோடு மேற்கொள்ளப்படும்.**

Sandy's Beauty Care TRAINING CENTRE

பயிற்சி ஆரம்பம் : 06.05.2017
பயிற்சி நேரம் : 10 மணி - 1 மணி

**தொடர்பு : 021 300 4668/ 070 250 2500**
**3ஆம் குறுக்குத்தெரு, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

குறிப்பு: குறிப்பிடப்பட்ட அனைத்து விதமான அழகும் தங்களின் விருப்பத்திற்கு ஏற்றவாறு செய்து கொள்ளப்படும்.

இயக்குநர்.

### பிறேயிலி இயந்திரம் திருத்துதல்

சகல வகையான பிறேயிலி இயந்திரகளும் உதிரிப்பாகங்களுடன் திருத்துதல்.

**தொடர்பு: 076 896 7664**

### வாடகைக்கு

Racca Road / Temple Road } சந்தியில் சகல வசதியுடன்

- மேல்மாடி வீடு Hall அமைப்பில் வாடகைக்கு வழங்கப்படும்.
- வகுப்புக்கள் எடுக்கக் கூடிய வகையில் அறை.
- அரச நிறுவனம், தனியார் நிறுவனம் விரும்பத்தக்கது.

**077 282 6267**

### வீடு வளவு விற்பனைக்கு

மாதகல் கிழக்கில் சகல அடிப்படை வசதிகளும் கொண்ட 3½ பரப்பில் வீடு வளவு விற்பனைக்குண்டு.

**077 451 7553/ 077 558 0643**

### பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கிநின்று வயோதிபத்தாயைப் பராமரிக்கக்கூடிய 45 வயதுக்கு உட்பட்ட பணிப்பெண் தேவை.

**077 769 6771**

### விருந்தினர் விடுதிக்கு வேலை ஆள்கள் தேவை

சிங்களம், ஆங்கிலம் பேசத் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை. காலை, மாலை உணவு, தேநீர், காப்பி தயாரிக்கக் கூடியவர்கள் விரும்பத்தக்கது.

**076 879 9089**

### வேலையாள் தேவை

கடை ஒன்றில் பணிபுரிய ஆண், பெண் இருபாலாரும் தேவை.

**077 937 0000**

### இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்..

சுத்தம் செய்யப்பட்டது.

1Kg 450/= மட்டும்

கூடுதல் கொள்வனவுக்கு 430/= மட்டும்.

**U.S.A பாம்**
**குளப்பிட்டிறோட், ஆனைக்கோட்டை.**
**077 868 9500**

### பணிநிலை வேண்டுகை

- **முகாமையாளர்கள்** (அரச ஓய்வுநிலையாளர்கள்)
- **கணக்காளர்** (பெண்)
- **வரவேற்பாளர்கள்** (பெண்)
- **அலுவலக உதவியாளர்கள்** (ஆண்)
- **கணினி இயக்குனர்கள்** (பெண்) (CorelDRAW, Photoshop)
- **பெனர் மெசின் இயக்குனர்** (இருபாலாரும்)

அனுபவமுள்ளவர்களும் பழக விரும்புவர்களும் தமது சுயவிபரக்கோவையுடன் 02,03-05-2017 செவ்வாய், புதன் கிழமைகளில் நேரில் வரவும்.

**திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.**

**ஷாம்பவி பதிப்பகம்,**
**267, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**(கிருபா லேணர்ஸ் முன்பாக)**

# 2 மணி நேர கனவு லீசிங்

லீசிங்
நிலையான வைப்புகள்
வாடகைக் கொள்வனவு
வியாபாரக் கடன்கள்
நுண்நிதிக் கடன்
அடகு சேவை

பதிவு செய்யப்பட்ட முச்சக்கர வண்டிகளிற்கான **லீசிங் வசதிகள்**





**2 மணி நேரத்தில் உங்கள் கையில் பணம்**

**021 221 9997**
**021 221 9998**

நிபந்தனைகளுக்குட்பட்டது

TRADE FINANCE & INVESTMENTS PLC


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 10 . 12 . 1927

மறைவு 01 . 05 . 2014

**அமரர் J.B அருமைநாயகம்**
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

நீங்கள் மரித்தீர்கள்
உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே
தேவனுக்குள் மறைந்திருக்கிறது

நவாலி தெற்கு,
மானிப்பாய்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 03.04.2017 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் தம்பித்துரை புவனேந்திரன்**
(வலி.வடக்கு பிரதேசசபை - ஓய்வூதியர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (01.05.2017) திங்கட்கிழமை காலை 7 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 03.05.2017 புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

ஈவினை மத்தி,
புன்னாலைக்கட்டுவன்.

குடும்பத்தினர்.

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி கலாதேவி சந்தான கிருஷ்ணன்**

அவர்களின் வருடாந்த திதி இன்று (01.05.2017) திங்கட்கிழமை இந்தியாவில் திருச்சியில் உள்ள காவேரி அம்மா மண்டபத்திலும், மதிய உணவு சீரடி சாயி Dr. சிற்றம்பலம் கண்ண்ன் முதியோர் இல்லத்திலும் நடைபெறுகின்றது. இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்கின்ற வைத்தியர்கள், உறவினர்கள், நண்பர்கள்அனைவருக்கும் அன்பார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிறப்பு 24.11.1952

இறப்பு 16.04.2013

திதி :- 01.05.2017

ஓமான் - + 96899429816,
இந்தியா - + 9197 9071 6623
சுவிஸ் - + 4177 9931 122,
இலங்கை - +9477 992 7788

V.R. கிருஷ்ணன், சந்தான கிருஷ்ணன் குடும்பம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 12 . 10 . 1961

மறைவு 01 . 04 . 2017

**அமரர் முத்து இந்திரன்**

கடந்த 01.04.2017 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியம் இன்று (01.05.2017) திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

காந்தியி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்

குடும்பத்தினர்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு 09 . 02 . 1948

உதிர்வு 03 . 04 . 2017

கடந்த (03.04.2017) திங்கட்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவி

**திருமதி ராசாத்தி ஜெயம்**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (01.05.2017) திங்கட்கிழமை காலை 08.00மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக் கிருத்தய கிரியைகள் (03.05.2017) புதன்கிழமை மதியம் 12.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதமாய் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


எங்கள் குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி கேட்டு உடன்வந்து ஆறுதல் கூறியும் பல வழிகளில் உதவிகள் புரிந்தும் உள்நாடு, வெளிநாடுகளிலிருந்தும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மலர்வளையம் வைத்தோருக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும் கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

இல.118, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

கணவர் : ஜெயம்
(ஓய்வு பெற்ற உதவி முகாமையாளர்
இலங்கை வங்கி)

## மரண அறிவித்தல்



பிறப்பு 1938 . 05 . 20

இறப்பு 2017 . 04 . 30

**முத்தையா சிவப்பிரகாசம்**
(முன்னைநாள் அதிபர், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் அவர்களின் தந்தையார்)

புதுக்குடியிருப்பு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முன்னைநாள் அதிபரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் அவர்களின் தந்தையுமான முத்தையா சிவப்பிரகாசம் நேற்று (30.04.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா - கண்ணகை தம்பதியரின் புதல்வனும் கமலாம்பிகையின் அன்புக் கணவரும் சி.சிவமோகன்(வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்), சி.சிவரஞ்சன்(உதவிக்கல்விப் பணிப்பாளர்), சி.சிவஜெயந்தன்(அபிவிருத்தி உத்தியோகத்தர், புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம்), சி.சிவதர்சன்(லண்டன்), சி.சிவதர்சினி(புதுக்குடியிருப்பு - மத்தியகல்லூரி ஆசிரியர்) ஆகியோரின் தந்தையும் தேவிகா(ஆசிரியை), சி.சோமாவதி (ஆசிரியை - முல்லைத்தீவு ம.வி), சி.ஜீவினி(முகாமைத்துவ உதவியாளர், புதுவை பிரதேசசபை) சி.றஜனிதேவி (லண்டன்) காலஞ்சென்ற சி.ஜெயஸ்ரீ (மாவட்ட செயலகம் - முல்லைத்தீவு) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.05.2017) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு முதலாம் வட்டாரத்தில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புதுக்குடியிருப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: மகன்**
வைத்தியகலாநிதி சிவப்பிரகாசம் சிவமோகன்
(வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்)
077 209 3213 (சிவமோகன்)

## சுகாதார பரிசோதகர்களின் பணிப்புறக்கணிப்புக்கு தடை

யாழ்ப்பாணம், மே 1
பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்துக்கு யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்று இடைக்காலத் தடை விதித்துள்ளது.

கோரிக்கைகள் சிலவற்றை முன் வைத்து இந்தப் பணிப்புறக்கணிப்பை மேற்கொள்வதாகச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் அறிவித்திருந்தது.

எனினும் அந்தப் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்துக்கு வடக்கு மாகாணச் சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ். திருவாகரன் தடை கோரி விண்ணப்பித்தார். மனுவைப் பரிசீலித்த நீதிமன்று, கடந்த 28 ஆம் திகதி தடை உத்தரவு வழங்கியுள்ளது என்று அமைச்சுச் செயலாளர் திருவாகரன் மேலும் தெரிவித்தார்.

(த-4-101)

## சீரமைப்பின்றிய நிலையில் நீர்வேலி தெற்கு விவசாய வீதி

யாழ்ப்பாணம்,ஏப்.29
நீர்வேலி தெற்கு விவசாய வீதி கடந்த பல வருடங்களாகப் சீரமைப்பு இன்றிய நிலையில் உள்ளது.

இந்த வீதி தார் ஊற்றிச் சீரமைக்கப்படாமையால் பயணிகள் பெரும் சிரமப்பட்டு வருகின்றனர்.

அத்துடன் இந்த வீதியை மூடிப் பற்றைகள் வளர்ந்துள்ளதால் இரவில் பயணிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

இந்த வீதியால் பயணிக்கும் விவசாயிகள் தமது விளை பொருள்களைச்சிரமப் பட்டே எடுத்துச் செல்கின்றனர்.

வீதியை மூடி மரக்கிளைகள் படர்ந்துள்ளதால் திருடர்களின் தொல்லையும் அதிகரித்திருப்பதாக விவசாயிகள் அச்சம் தெரிவித்து ள்ளனர்.

இந்தவீதியின்சீரமைப்பு தொடர்பாக வலி.கிழக்குப் பிரதேச சபைச் செயலாளருடன் தொடர்புகொண்டு கேட்டபோது, இதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள ப்படும் என்று தெரிவித்தார்.

(த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசமைப்பு உருவாக்கத்தை விரைவுபடுத்த மே தினத்தைப் பயன்படுத்துவோம்

## வடமாகாண சபை உறுப்பினர் அஸ்மின் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், மே 1

"புதிய அரசமைப்பு உருவாக்கம் துரிதமாக இடம்பெறல் வேண்டும் என்ற கருத்தை சிறுபான்மை மக்கள் எல்லோரும் ஒன்றிணைந்து மேதின நிகழ்வில் மிகவும் அழுத்தமாக இலங்கை அரசிடமும் பன்னாட்டு சமூகத்திடமும் முன்வைக்க வேண்டும்"

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் அஸ்மின் வலியுறுத்தியுள்ளார்.

மேதினத்தை முன்னிட்டு ஊடகங்களுக்கு அனுப்பிய அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மே தினமானது இலங்கையின் தொழிலாளர் வர்க்கத்தின் நலன்கள் குறித்து அக்கறை செலுத்தும் அதே சந்தர்ப்பத்தில் இலங்கையின் பொதுப் பிரச்சினை குறித்தும் கவனம் செலுத்தவேண்டிய அவசியத்தை வலியுறுத்தி நிற்கின்றது. சிறுபான்மை சமூகங்கள் இன்றைய சூழ்நிலையில் எதிர்நோக்கும் பெரியளவிலான சவால்களை எதிர்கொள்வதற்கான உபாய மார்க்கமொன்றையும்முன்மொழியவேண்டிய தேவையையும் அது வலியுறுத்தி நிற்கின்றது.

வடக்குக் கிழக்குப் பிராந்தியங்களிலே நாம் எதிர்நோக்குகின்ற பல்வேறு பிரச்சினைகள் ஒத்த தன்மையுடையனவாகும், அவற்றைத் தீர்த்துக் கொள்வதற்கான உபாய மார்க்கங்களும் ஒன்றாகவே இருக்கின்றன. ஆனால் எமக்கிடையிலான முரண்பாடுகள் அவற்றைத் தீர்ப்பதற்குத் தடையாக இருக்கின்றன. இதனை நாம் புரிந்து செயற்படுவது சிறப்பானது.

வடக்கை விடவும் கிழக்கில் தமிழ் முஸ்லிம் உறவானது சீரானதாக இல்லை என்பதை நாம் அறிவோம். அங்கு சமபலத்தோடு மூன்று சமூகங்களும் வாழ்கின்றன. எனவே முரண்பாட்டுக்கான வாய்ப்புகளைத் தேடும் மனோநிலையே அங்கு மிகைத்திருக்கின்றது. இரண்டு சமூகங்களின் பிரதிநிதிகளும் மனம்விட்டுப்பேசி பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும். அதே போன்று வடக்கிலும் தமிழ் முஸ்லிம் உறவு நிலையில் இன்னோரன்ன குறைபாடுகள் நிலவவே செய்கின்றன. இவற்றைச் சீர்செய்வதற்கு இதயசுத்தியோடு கூடிய முயற்சிகள் முன்னெடுக்கப்படல் அவசியமாகும் என்றுள்ளது. (வ-10,101)

# தொழிலாளர் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைத்த நாள்

## வடக்கு போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு

மன்னார், மே 1

"ஒரு நாட்டின் முதுகெலும்புகளாக எப்போதும் தம்முடைய கடின உழைப்பால் உயர்ந்து நிற்கும் உழைப்பாளர்களின் தினமாகிய இந்த மே தினத்தில், உயர்ந்தவர்கள் அடித்தட்டுவர்கத்தினர் என்ற எந்தப் பாகுபாடுமின்றி நாட்டையே தோளில் சுமக்கும் உழைப்பாளர்களின் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைத்த நன்னாள் இது. இந்தச் சிறந்த தருணத்தில் உழைக்கும் வர்க்கத்தினராகிய தொழிலாளர்கள் அனைவருக்கும் எனது உளம் நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் உவகை அடைகின்றேன்"

இவ்வாறு வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா. டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார். மேதினத்தை முன்னிட்டு அவரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உலகம் ஒவ்வொரு நொடியும் இயங்க மனித உழைப்புத்தான் மிக முக்கிய காரணமாக இருக்கிறது. அவ்வாறாக தமது முழுநேரத்தையும் உழைப்புக்காகக் கொடுத்து தம்முடைய வாழ்வையும் உயர்த்துகிற அதேவேளையில் நாட்டையும் உயர்த்துகின்றனர். அவ்வாறாக வாழும் இந்த உயர்வர்க்கமான தொழிலாளர் வர்க்கத்தினருக்கு இந்த நாள் எவ்வாறு உருவானது என்பது ஒரு வரலாறாக இன்றும் நினைவுகூரப்படுகிறது. 1880ஆம் ஆண்டில் அமெரிக்காவில் தொடங்கி, 1890ஆம் ஆண்டு பாரிஸில் உருவானதுதான் உலகத் தொழிலாளர் தினம்.

மே முதலாம் நாளையும் எல்லா நாட்களையும்போல சாதாரண விடுமுறை நாளாக எண்ணி நம்மில் பலர் அது குறித்துப் பெரிதாகச் சிந்திப்பதில்லை. ஆனால் மற்ற விடுமுறை நாட்களைப்போல இதுவும் ஒரு விடுமுறை நாள் என்று நாம் நினைத்துவிடக்கூடாது. மனித நாகரிகத்தின் வளர்ச்சிக்கு மாபெரும் பங்காற்றிய உழைப்பாளர்கள் முற்காலத்தில் 18 மணி நேரம் வேலை வாங்கப்பட்டனர். இதை எதிர்த்து தாங்கள் உழைக்க வேண்டிய நேரத்தை 8 மணி நேரமாக வரையறுத்து, அதற்காக போராடி உலக தொழிலாளர்களுக்கு கிடைத்த மாபெரும் ஒரு சரித்திர வெற்றி நாளாக அவர்களது உரிமையைப் பெற்ற நாளே மே தினம்.

இவ்வாறாக உலகம் முழுவதும் ஒருமைப்பட்டு குரல்கொடுத்து பல உயிர்த்தியாகங்களினூடாகவும், பலதரப்பட்ட போராட்டங்களின் வாயிலாகவும், கிடைத்த இந்த மாபெரும் வெற்றியின் சரித்திர நாளிலே உழைக்கும் வர்க்கமாகிய உழைப்பாளர்களே இன்று ஒன்று திரண்டு உங்களுக்கு கிடைத்துள்ள மகத்தான வெற்றியை சந்தோஷமாகக் கொண்டாடி மகிழுங்கள் என்றுள்ளது. (வ-21)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி பூமலர் இராசலிங்கம்



யாழ். ஏழாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூமலர் இராசலிங்கம் 28.04.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னையா - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஆறுப்பிள்ளையின் அன்புப் பெறாமகளும் இராசலிங்கத்தின் பாசமிகு மனைவியும் ஸ்ரீகாந்தன்(கனடா), சகுந்தலாதேவி(ஜேர்மனி), உதயகுமாரி(ஜேர்மனி), உதயகுமார் (சுவிஸ்), சிவகுமார்(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற இராசலிங்கம், பரமேஸ்வரி(பூசனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கலாவதி (கனடா) . காலஞ்சென்ற ஜேசுதாஸ் (ஜேர்மனி), றவீந்திரன் (ஜேர்மனி), சிவமதி(சுவிஸ்), தனுஷா(கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஈசன் கஜனா(லண்டன்), றஜீப் (ஜேர்மனி), கோபிரமணன், ஜீவநந்தினி (கனடா), சத்தியரமணன் அஜனிறா (கனடா), ஜெனிற்றன், ஜெனிற்றா, மொகன், டெனிலா (ஜேர்மனி), றஜீத்தா (லண்டன்), சுரேன் (ஜேர்மனி), சகானா (சுவிஸ்), கெவின் (ஜேர்மனி), சர்மி (சுவிஸ்), லவுறா(ஜேர்மனி), கோகிலறமணன்(கனடா), சர்வின் (சுவிஸ்), சிந்துஜா, சந்தியா, சச்சின்(கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் சஜேய், சஜீத்தா, சஜிகா, யஸ்வின் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2017) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் உசத்தியோடை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோயிலடி,
ஏழாலை வடக்கு. (ο/8377)

தகவல்
குடும்பத்தினர்.

**076 413 2497/ 021 490 5197**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மேரிடெல்மா (கலா) றஞ்சன்



யாழ்ப்பாணம் கொட்டடியை பிறப்பிடமாகவும் நாவாந்துறை கன்னாபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரிடெல்மா(கலா) றஞ்சன் 28.04.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி பொன்னுத்துரை - திரேசம்மா(இராசாத்தி) தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி அருமை முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் றஞ்சனின் அன்பு மனைவியும் சுலக்சனா(றுக்சி - பிரதேச வைத்தியசாலை, கோப்பாய்), பப்சி, பிரபு(சவுதி), பிரசந்த், கிஷோ, டிமல், தாத்தனா ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக அவரின் இல்லத்திலிருந்து இன்று (01.05.2017) திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு யாழ் அடைக்கல அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.08, கன்னாபுரம்,
நாவாந்துறை தெற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

**077 745 8324/ 075 076 6305**

## மரண அறிவித்தல்



### வேதாசலம் இராஜரட்ணம்

களுத்துறையைப் பிறப்பிடமாகவும் கம்மாலையடி சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட வேதாசலம் இராஜரட்ணம் நேற்று (30.04.2017) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேதாசலம் - பொட்டம்மாள் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் வசீகரன், லோகதர்ஷன், மோகனதர்ஷன், கோபிகா, கபிலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பூபாலன், நடராஜா, மாசிலாமணி, தேவராஜா ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற வர்களான தங்கராசா, நடராஜா மற்றும் தேவராசா, செல்வராசா ஆகியோரின் மைத்துனரும் றஜிதா, யூடியானா ஆகியோரின் மாமனாரும் ஏஞ்சலின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2017) திங்கட்கிழமை மு.ப 10 மணியளவில் சண்டிலிப்பாயிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கம்மாலையடி,
சண்டிலிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.



### திருமதி இலட்சுமிப்பிள்ளை வீரகத்தி

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், 612, கொக்காவில் வீதி, துணுக்காயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இலட்சுமிப்பிள்ளை வீரகத்தி நேற்று (30.04.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.05.2017) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியக்காக ஆலங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

612, கொக்காவில் வீதி,
துணுக்காய்.

தகவல்:
பிள்ளைகள்



### திருமதி பரமேஸ்வரி இரத்தினம்

தோற்றம் 22.04.1940
மறைவு 29.04.2017

வேலணை கிழக்கு, 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வவுனியா சிந்தாமணிப்பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் தற்பொழுது 65/5 , மாட்டின் வீதியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி இரத்தினம் 29.04.2017 சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - அமுதம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - பூரணத்தின் அன்பு மருமகளும், இரத்தினத்தின் அன்பு மனைவியும், சிவறஞ்சன் (இணைப்பாளர் US.AID நிறுவனம்), தவறஞ்சினி (U.K) ஆகியோரின் அன்புத் தாயும், மகாலிங்கத்தின் (U.K) அன்பு மாமியும், யதுர்சன், பிரவின்சன், றிஸ்விகன் (U.K) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சுந்தரம் (ஓய்வுபெற்ற தொழில் நுட்ப உத்தியோகத்தர் இலங்கை மின்சார சபை), காலஞ்சென்றவர்களான இராசமணி, சிவபாக்கியலட்சுமி, இராசா, கனகசபை, காந்தியம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.05.2017) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

65/5, மாட்டின் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

**078 269 4595**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 40ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
05 . 07 . 1950

மறைவு
01 . 05 . 1977

அமரர் குமரையா தேவராஜன்

மே மாதத்தில் மலர்கள் யாவும் மலருவதுண்டு ஆனாலும்
எம் மலர் மட்டும் உதிர்ந்தது ஏனோ?

என்றும் அழியாத நினைவுகளுடன்
மனைவி, மகளிமார், மருமகளிமார்,
பேரப்பிள்ளைகள் உற்றார்,
உறவினர்.

இல. 28, றக்கா ஒழுங்கை,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்


# கொடிகாமம் நகரப் பகுதியில் கட்டாக்காலிகளால் விபத்துகள்

சாவகச்சேரி, ஏப்.29

சாவகச்சேரிப் பிரதேச சபையின் கொடிகாமம் நகர்ப் பகுதியில் கட்டாக்காலிக் கால்நடைகளின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனைக் கட்டுப்படுத்தச் சாவகச்சேரிப் பிரதேச சபை நடவடிக்கை எடுத்துள்ளது எனச் சாவகச்சேரிப் பிரதேச சபையின் செயலாளர் திருமதி முகுந்தினி கோடீஸ்வரன் தெரிவித்தார்.

நகரில் கட்டாக்காலியாகத் திரியும் கால்நடைகளால் வீதி விபத்துக்கள் ஏற்படுவதுடன் பொதுச் சந்தை வளாகத்தில் உள்புகுந்து வியாபாரி மற்றும் பொதுமக்கள் கொள்வனவு செய்து வைக்கும் பொருள்களைத் தின்று சேதம் விளைவித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே கட்டாக்காலியாகத் திரியும் கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறும், இல்லையேல் கட்டாக்காலி கால்நடைகள் பிடிக்கப்பட்டுத் தண்டப்பணம் அறவிடப்படும். உரிமை கோரப்படாத கால்நடைகளை ஏலத்தில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-131)

# முன்பள்ளியில் திருட முற்பட்டவர் கைதானார்

தென்மராட்சி மே. 1

நாவற்குழி 300 வீட்டுத் திட்டப் பகுதியில் உள்ள முன்பள்ளியின் கண்ணாடியை உடைத்துத் திருட்டு நடவடிக்கையில் ஈடுபட்ட வேளை அயலவர்கள் கண்டு சத்தமிட்டதால் தப்பியோடியவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சாவகச்சேரி உணவகம் ஒன்றில் பணிபுரியும் அனுராதபுரம் தம்புத்தேகம வாசி நாவற்குழியில் தங்கியிருந்துள்ளார். நேற்றுமுன்தினம் அங்குள்ள முன்பள்ளிக் கட்டடத்தினுள் புகுந்து அங்கிருந்த இரகசியக் கமராவின் செயற்பாட்டை நிறுத்திவிட்டு கட்டடக் கண்ணாடியை உடைத்து உள்நுழைய முற்பட்டுள்ளார். இதனை அவதானித்த ஒருவர் சத்தமிடவே இவர் தப்பியோடியுள்ளார். இந்த விடயம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து அங்கு வந்த பொலிஸார் இரகசியக் கமராவில் பதிவு செய்யப்பட்டிருந்த விவரங்களைப் பெற்றுப் பார்வையிட்டபோது குறித்த நபரின் செய்கைகள் கமராவில் பதிவு செய்யப்பட்டிருந்தமையைக் கண்டுள்ளனர்.

இவரைத் தேடியபோது அங்குள்ள பேருந்து தரிப்பிடக் கட்டடத்தில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்துள்ளார். அப்போது அவரைக் கைது செய்த பொலிஸார் நேற்று சாவகச்சேரி நீதிமன்ற நீதிவானிடம் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் இந்த நபரை எதிர்வரும் ஒன்பதாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (த-9)


# விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு அழைப்பு



கடந்த 30.04.2016 சனிக்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்த எமது குடும்பத் தலைவர்

கலாபூஷணம் தம்பு சிவலிங்கம்

அவர்களின் ஓராண்டு நினைவு ஆராதனை நிகழ்வு இன்று (01.05.2017) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஞாபகார்த்த ஆராதனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.



# 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
05 . 10 . 1932



மறைவு
04 . 04 . 2010

கனகசபாபதி சிவசுப்பிரமணியம்

மௌனத்தின் வாசலிலே மனக்குமிழி உடைகிறது
மறுபடியும் உயிர் வேண்டி மனமெல்லாம் அழுகிறது
நாள்களும் பறந்துசெல்ல வருடங்களும் ஏழு உருண்டோட
வேர் இல்லா மரம்போல நாம் நிற்கின்றோம் அப்பா!

குடும்பத்தினர்.


# யாழ். பல்கலையில் இன்று மே தினம்

யாழ்ப்பாணம், மே 1

இலங்கை ஆசிரியர் சங்கம், யாழ்.பல்கலைக்கழக ஊழியர்சங்கம், கிராமிய உழைப்பாளர் சங்கம், அரங்க செயற்பாட்டுக்குழு, தமிழ்மக்களின் வாழ்வுரிமைக்கான செயற்பாட்டு மையம், சமூக விஞ்ஞான ஆய்வுமன்றம் ஆகிய அமைப்புக்கள் இணைந்து நடத்தும் மே தின நிகழ்வு இன்று இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இன்று முற்பகல் 9.30 அளவில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. மேதின ஊர்வலமும் பல்கலைக்கழகத்திலிருந்து ஆரம்பமாகி மீண்டும் பல்கலைக்கழகத்தை வந்தடையும். இறுதியில் தொழிற்சங்கங்கள் மற்றும் பொது அமைப்புக்களின் தலைவர்களின் உரைகள் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் உழைக்கும் மக்கள், தமிழ் தேசிய சக்திகள், முற்போக்கு ஜனநாயக சக்திகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர். (த-4)

# யாகம் இன்று

யாழ்ப்பாணம், மே 1

மேல்மருவத்தூர் சுயம்பு ஆதிபராசக்தியின் 2ஆவது மன்ற யாகம் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இல.156, ஜீ.பி.எஸ்.வீதி, கல்வியங்காடு மன்றத்தில் நடைபெறவுள்ளது. (த-10)

# இடதுசாரிகளின் மே தினம் யாழ்ப்பாணத்தில் இன்று

யாழ்ப்பாணம்,மே 1

தொழிலாளர் மேதினக் கூட்டம் இன்று திங்கட்கிழமை பி.ப 4 மணிக்கு யாழ். நூலகச் சிற்றுண்டிச்சாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது என இடதுசாரி மற்றும் தொழிலாளர் அமைப்பு தெரிவித்தது.

தொழிலாளர் சாசனத்தை உடன் வெளியிட வேண்டும், தற்காலிகமாக, அமைய மற்றும் வெளிக்கள ஊழியர்களின் பதவிகளை நிரந்தரமாக்கவேண்டும், கடைச் சிப்பந்திகள், நிறுவன ஊழியர்களுக்கு நியாயமான சம்பளத்தை வழங்கவேண்டும், வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்தவேண்டும், தொழிலாளர்களே இது உங்கள் தினம் ஏனைய வர்த்தகத்தைச் சார்ந்தோருக்கு இந்தத் தினத்தை கபளீகரம் செய்ய இடம் கொடாதீர்கள் என்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (த-10)


# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
04.02.1947

தோற்றம்
16.02.1949



மறைவு
23.03.2017

மறைவு
01.04.2017

பொன்னையா அழகரத்தினம் திருமதி புஸ்பவதி அழகரத்தினம்

இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்களான பொன்னையா அழகரத்தினம், திருமதி புஸ்பவதி அழகரத்தினம் ஆகியோரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (01.05.2017) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறுவதால் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும். எமது தந்தை, தாயை நாம் இழந்து நின்றபோது எமக்குத் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும் நேரில் வந்து ஆறுதல் கூறியோருக்கும் அவர்களின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

சதீஸ் (மகன் - சுவிஸ்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் கனவுகளில் ஒன்று நிறைவேற்றப்பட்டு விட்டது

## வடக்கு விவசாய அமைச்சர் பெருமிதம்

யாழ்ப்பாணம், மே 1

``விடுதலைப் புலிகளின் கனவுகளில் ஒன்று நிறைவேறி யிருக்கின்றது. விடுதலைப் புலிகள் அமைப்பு போரில் மாத்திரம் ஈடுபாடு கொண்டிருக்கவில்லை. கல்வி வளர்ச்சியிலும் அக்கறை காட்டினார்கள். அதனாலேயே பல்கலைக் கழகம் ஒன்றுக்குரிய கட்டுமானங்களுடன் அறிவியல் நகரைக் கட்டியெழுப்பினார்கள்".

இவ்வாறு வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

கிளிநொச்சி, அறிவியல் நகரில் அமைக்கப்பட்ட கால்நடைப் பயிற்சி நிலையம் நேற்றுமுன்தினம் திறக்கப்பட்டது. அந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகக் கலந்து உரையாற்றும்போதே வடக்கு அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார் என்று அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் உள்ளதாவது:

இப்போது அறிவியல் நகரில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாயபீடம் இயங்குகின்றது. நாங்களும் பண்ணையாளர்களுக்கும், எமது கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் அறிவூட்டும் நோக்கில் பிராந்திய கால்நடை பயிற்சி நிலையம் ஒன்றை நிர்மாணித்திருக்கிறோம்.

விடுதலைப்புலிகளின் கனவுகளில் ஒன்று இன்று நிறைவேறியி ருக்கிறது. அதை எமது திணைக்களம் செய்து முடித்திருப்பதையிட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

விடுதலைப் புலிகள் பல்மருத்துவப் பயிற்சி நிலையம் ஒன்றை அமைக்க ஆரம்பித்திருந்தார்கள். அரைகுறையாக இருந்த அந்தக் கட்டடத்தின் அத்திபாரத்தின் மீதே நாங்கள் கால்நடைப் பயிற்சி நிலையத்தைக் கட்டிமுடித்திருக்கிறோம். சகல வசதிகளையும் கொண்டதாக இதனை அமைப்பதற்கு 50 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.



இந்தநிதியைமாகாண அரசு, மத்திய அரசு மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் வழங்கியுள்ளன. ஒரே தடவையில் இவ்வளவு பெருந்தொகைப் பணத்தைப் பெறுவதில் இருக்கக்கூடிய சிரமங்கள் காரணமாகவே இதன் கட்டுமாணப் பணிகளைப் பூர்த்தி செய்வதில் காலதாமதம் ஏற்பட்டது.

கால்நடை அபிவிருத்தியில் அதற்கான பயிற்சி மிகவும் அவசியம். எமது கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்களும், பண்ணையாளர்களும் பயிற்சியைப் பெறுவதற்குப் பெரும் சிரமங்களின் மத்தியிலேயே குண்டகசாலையில் உள்ள பயிற்சி நிலையத்துக்குச் சென்று வருகிறார்கள். கிளிநொச்சியில் பிராந்திய கால்நடைப் பயிற்சி நிலையத்தை நாம் இப்போது அமைத்திருப்பதன் மூலம், அவர்கள் சிரமங்கள் இல்லாமல் பயிற்சிகளை இனிமேல் இங்கேயே பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும் என்று தெரிவித்தார்- என்றுள்ளது.

(ற-10)

## யாழ். மாவட்ட தனியார் வைத்தியசாலைகளை பதிவு செய்ய அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,மே 01

யாழ். மாவட்டத்தில் உள்ள தனியார் வைத்தியசாலைகள் மற்றும் ஆய்வு கூடங்கள் பதிவு செய்யப்பட வேண்டும் என்று யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் க.நந்தகுமாரன் தெரிவித்தார்.

முழுநேர, பகுதி நேர தனியார் வைத்திய சாலைகள், தனியார் ஆய்வு கூடங்கள், பகுதி நேர, முழு நேர பற் சிகிச்சை நிலையங்கள், தனியார் சிகிச்சை நிலையங்கள், தனியார் நோயாளர் காவு வண்டிச் சேவை, தனியார் மருத்துவ நிலையங்கள், தனியார் முழுநேர, பகுதிநேர மருத்துவ நிபுணத்துவ ஆலோசனை வழங்கும் நிறுவனங்கள், சுகாதார சேவைகள் வழங்கும் நிறுவனங்கள் அனைத்தும் தனியார் மருத்துவ நிலையங்கள் சட்டம் 21.2016இன் பிரகாரம் தனியார் வைத்திய சேவை ஒழுங்குபடுத்தல் சபையில் பதிவு செய்யப்பட்டிருத்தல் அவசியமாகும். இதுவரை பதிவு செய்யாதவர்கள் உடனடியாகப் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார்.

(ற-10)

## நீராவிப்பிட்டி கூட்டுறவுச் சங்கத்தை மீளச் செயற்படுத்துமாறு கோரிக்கை

முல்லைத்தீவு,மே 01

முள்ளியவளை நீராவிப்பிட்டியில் அமைந்துள்ள கூட்டுறவுச் சங்கத்தை மீண்டும் செயற்படுத்துமாறு நீராவிப்பிட்டி மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இது குறித்து அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

``போர்க்காலத்துக்கு முன்னர் நீராவிப்பிட்டி மக்களுக்கு அளப்பரிய சேவையை வழங்கி வந்த குறித்த கூட்டுறவுச் சங்கம் மீள்குடியமர்வின் பின்னரும் செயற்பட்டு வந்தது. எனினும் பல மாதங்களாகக் குறித்த சங்கம் மீண்டும் திறக்கப்படவில்லை. அதனால் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளோம். தனியார் கடைகளில் அதிகரித்த விலைகளுக்குப் பொருள்களைக் கொள்வனவு செய்ய வேண்டிய நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளோம். எனவே சங்கத்தை மீண்டும் செயற்படுத்த வேண்டும்" என்றனர்.

'கரைதுறைப்பற்று பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் நீராவிப்பிட்டிக் கிளையை நடத்துவதன் மூலம் இலாபம் ஈட்ட முடியவில்லை. இலாபம் கிடைக்காது விட்டாலும் கடந்த காலங்களில் சங்கம் தொடர்ந்து செயற்பட்டது. சங்கத்தின் முகாமையாளருக்குச் சம்பளம் வழங்க முடியாத நிலை ஏற்பட்டது. நட்டத்தைத் தவிர்ப்பதற்கே சங்கம் பூட்டப்பட்டது" என்று கரைதுறைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் தெரிவித்தார்.

(ஐ - 7)

# கிளி. இளைஞர் கழகங்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் தாமதம்

கிளிநொச்சி, மே 01

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மூன்று பிரதேச செயலாளர் பிரிவில் இளைஞர் கழகங்களுக்கான விளையாட்டுப்போட்டிகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை என்று விளையாட்டு வீரர்கள் விசனம் தெரிவித்தனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

``கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவைத் தவிர்ந்த ஏனைய மூன்று பிரதேச செயலர் பிரிவுகளிலும் இளைஞர்கழக விளையாட்டு உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளவர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள். அவர்கள் இந்த வருடத்துடன் வேறு திணைக்களத்துக்கு மாற்றம் பெற்றுச் செல்லவுள்ளனர். அடுத்த மாத ஆரம்பத்தில் தேசிய மட்டப் போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன. இந்த நிலையில் இன்னமும் பிரதேச மட்ட விளையாட்டுக்கள் ஆரம்பிக்கப்படவில்லை. இன்னமும் ஒரு வாரம் மட்டும் உள்ள நிலையில் பிரதேச மற்றும் மாவட்ட விளையாட்டுக்கள் நடத்த வேண்டியசூழ்நிலை ஏற்பட்டுள்ளது. வீரர்கள் போதிய பயிற்சி அனுபவங்கள் இன்றி கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து தேசிய மட்டப் போட்டிக்குச் செல்லவுள்ளனர் என்றார்.

இது தொடர்பாகக் கிளிநொச்சி மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப்பணிப்பாளரிடம் கேட்ட போது: ``அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான விடுவிப்பை நாங்கள் மேற்க்கொள்ள முடியாது. அதனை பணிப்பாளர் தான் மேற் கொள்ள முடியும். தற்போது இளைஞர் சேவைகள் மன்றத்தின் அலுவலகங்களில் உள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு மாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டமாக வெளிக்களத்தில் வேலை செய்யும் உத்தியோகத்தர்களுக்கான மாற்றம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மாகாணப் பணிப்பாளர் தலைமையில் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு 45 நாள்களுக்குள் விடுவிப்பு வழங்கப்படும் எனவும், அதுவரை இளைஞர் சேவை மன்றத்தில் தொடர்ந்தும் சேவையாற்று மாறும் தெரிவிக்கப்பட்டது. அதனை ஏற்றுக் கொண்டு தமது பணியைத் தொடர்வதாக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்" - என்றார்.

(ஐ - 6)

## சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் மே தின நிகழ்வு

கிளிநொச்சி, மே 1

சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் 2017 மே தின நிகழ்வுகள் கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் இன்று பிற்பகல் மூன்று மணிக்கு நடத்தப்படவுள்ளது.

அந்த அமைப்பின் அமைப்பாளரும் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினருமான முருகேசு சந்திரகுமார் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உழைப்பாளர்களின் நாளான இன்று நாம் எங்களுடைய உரிமைகளை வலியுறுத்தி ஒன்று கூடியிருக்கிறோம். உழைப்புக்கான அங்கீகாரம் முதல், கௌரவமாக வாழ்வதற்கான அடிப்படை உரிமைகள் வரையில் அனைத்து உரிமைகளுக்காகவும் நாங்கள் ஒன்று திரண்டிருக்கிறோம். சமத்துவம், சமூக நீதி என்ற வகையில் அனைவரையும் சமனிலையில் வைத்து நோக்கும் பாரம்பரியத்தை உருவாக்குவதற்காக இந்த நாளில் நாம் உறுதியெடுத்துக் கொள்வோம். இந்தக் கூட்டுத்திரட்சியான அரசியற் பலமே எமது மெய்யான விடுதலைக்கும் அனைத்து உரிமைகளுக்கும் வழியை ஏற்படுத்தும்- என்றுள்ளது.

(ற -21)

## வவுனியா தொழிலாளருக்கு விடுமுறை வழங்க அறிவுறுத்து

வவுனியா, மே 1

இன்று திங்கட்கிழமை அனைத்து தொழிலாளர்களுக்கும் விடுமுறை வழங்கி உலக தொழிலாளர்கள் தினத்தைக் கடைப்பிடிப்பதற்காக வவுனியாவிலுள்ள வியாபார நிலையங்களில் பணிபுரிகின்ற அனைத்துத் தொழிலாளர்களுக்கும் விடுமுறை வழங்க வேண்டும் என்று வவுனியா வர்த்தகர் சங்கம் அறிவித்துள்ளது.

இன்று இடம்பெறவுள்ள உலக தொழிலாளர்கள் தினத்துக்கு அனைத்து வியாபார நிலையங்களிலுள்ள தொழிலாளர்களுக்கு விடுமுறை வழங்குவது என்று வவுனியா வர்த்தகர் சங்கம் முடிவு எடுத்துள்ளது. வியாபார நிலைய உரிமையாளர்கள் தொழிலாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

(ற -21)

# முன்னாள் போராளிகளை தமிழரசு கட்சியில் இணைத்துச் செயற்படுவது குறித்து ஆராய்வு

## எம்.ஏ. சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 01

தமிழரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகளை தமிழரசுக் கட்சியில் இணைத்துச் செயற்படுவது தொடர்பில் ஆராயப்பட்டதுடன், பல விடயங்கள் தீர்மானிக்கப்பட்டன.

இவ்வாறு தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் மட்டக்களப்பில் கட்சியின் தலைவர் மாவை. சோ.சேனாதிராசா தலைமையில் நடைபெற்றது.

அது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

கட்சியில் எழும் கட்சி ரீதியிலான பெண்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் சட்ட நடவடிக்கையுடன் பாதிக்கப்பட்டவர்கள் கட்சியின் மூத்த இரு பெண்களிடம் முறையிடும் வகை



யில் நாச்சியார் செல்வநாயகம், சாந்தி சிறிஸ்கந்தராசா ஆகியோரை நியமித்தல், தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டை ஒகஸ்ட் மாதம் நடத்துவது, வடக்கு மீள்குடியேற்ற செயலணி எனும் அமைப்பில் தமிழர் தரப்பு புறக்கணிக்கப்பட்டமை தொடர்பில்தலைமைஅமைச்சரின்கவனத்துக்குக்கொண்டு சென்று உரிய நடவடிக்கை மேற்கொள்வது போன்ற தீர்மானங்கள் எட்டப்பட்டன-" என்றார். (ற -101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழமைக்கு மாறாக ஏற்றப்பட்ட இலங்கையின் தேசியக் கொடி



முல்லைத்தீவு, மே1
ஒட்டுசுட்டான்பொலிஸாரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நடமாடும் சேவையில் இலங்கைத்தேசிய கொடியேற்றுவதற்கு முன்னதாக பொலிஸ் திணைக்கள கொடி ஏற்பட்டது. சேவையை பெற்று கொள்ள வந்த மக்கள் மத்தியில் இது வியப்பை ஏற்படுத்தியிருந்தது.
இந்த சம்பவம் நேற்று முந்தினம் கற்சிலைமடுப் பாடசாலையில் நடைபெற்றது.
ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவின் கீழுள்ள கீராம மக்களுக்கான நடமாடும் சேவை பொலிஸாரின் ஏற்பாட்டில் நடைபெற்றது.
பொலிஸ் முறைப்பாட்டுப் பிரதி வழங்குதல், ஆயுள்வேத வைத்திய சேவைகிராமஅலுவலர்களின்சேவைஎன்பவற்றுடன் யானை வெடி வழங்குதல் தென்னங்கன்றுகள் வழங்குதல் பாடசாலைப் பிள்ளைகளுக் கான அப்பியாசக் கொப்பிகள் வழங்குதல் போன்ற சேவைகள் அதில்வழங்கப்பட்டன.
நிகழ்வில் பொலிஸ் உயர் அதிகாரிகள் பாடசாலை அதிபர் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர்பொலிஸ்எல்லைக்குட்ப்பட்ட கிராம உத்தியோகத்தர்கள், மக்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். நிகழ்வின் ஆரம்பத்தில் வழமைக்கு மாறாக முதல் நிகழ்வாக இலங்கை பொலிஸ் கொடி ஏற்றப்பட்டது. பின்னர் தேசியக்கொடிஏற்றப்பட்டது.
அத்துடன்தேசியக்கொடியும் கம்பமும் பொலிஸ் கொடியும் கம்பத்தை விட உயரம் குறைந்ததாகவே காணப்பட்டது ஏற்றப்பட்ட தேசியக் கொடியின் கரையின் ஒரு பகுதியும் மூலையின்ஒருபகுதியும்கிழிந்து கந்தலாகிய நிலையில் காணப்பட்டது என்று சேவைகளைப் பெறச் சென்றிருந்த மக்கள் தெரிவித்தனர். (ற-21)

# பிரச்சினைகளுக்குத்தீர்வுகாண ஒன்றிணைந்து செயற்படுவோம்

### அமைச்சர் ரிசாத் பதியுதீன் அழைப்பு



வவுனியா, மே1
கட்சி பேதங்களை மறந்து நாம் அனைவரும் ஒன்றிணைந்து காணி விடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோரைக் கண்டறிதல் போன்ற விடயங்களுக்குத் தீர்வு காணவேண்டும்.
இவ்வாறு கைத்தொழில், வாணிபத்துறை அமைச்சர் ரிசாத்பதியுதீன்தெரிவித்தார்.
வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரியில் நேற்று நிலமெஹவர 2017 நடமாடும் சேவை நடத்தப்பட்டது. அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது
புதிய அரசுக்கான வெற்றியை வடக்கு பிரதேசமே கூடுதலாக வழங்கியது. எங்கள் மக்கள் அபிவிருத்திக்காக, சொந்த காணிக்காக, விவசாய காணிளுக்காக, எங்களுடைய சிறை சென்றிருக்கின்ற பிள்ளைகளுக்காக, காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளைக் காண்பதற்காக ஆர்ப்பாட்டம் செய்வதை பார்க்கின்றேன்.
எங்களுக்கிடையே கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. அரசியல் ரீதியிலான கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன.
மத ரீதியாக ஆளுக்கொரு மதத்தைப் பின்பற்றுப வர்களாக இருக்கின்றோம். ஆனால் நாங்கள் எல்லோரும் மனிதர்கள் என்ற ரீதியில் ஒன்று பட்டவர்கள். நாங்கள் எல்லோரும் மனிதாபிமானத்துடன் சிந்திக்கப் பெற்றுள்ளோம். நாங்கள் எல்லோரும் சிறிது காலம் வாழ அனுப்பப்பட்டவர்கள் என்கிறது எமது மதம்.
சிங்களவர்கள், முஸ்லிம்கள், தமிழர்கள் என நாங்கள் பிரிந்து வாழ ஆசைப்படவில்லை. நாங்கள் நிம்மதியாக வாழ ஆசைப்படுகின்றோம். ஒருவருடைய துன்பத்திலே இன்னொருவர் சந்தோசப்படும் நிலமைகள் தான் இப்போது உள்ளது. அரசியல் வாதிகளும் அரச அதிகாரிகளும் நேர்மையுடன், மனச்சாட்சியுடன், மனிதாபிமானத்துடன் இறைவனுக்கு பயந்தவர்களாக செற்பட்டு மக்களின் துன்பங்களுக்குத் தீர்வு வழங்க வேண்டும்.
நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் ஆகிய நாங்கள் கட்சிகளால்வேறுபடலாம். ஆனால் நாங்கள் மக்களின் பிரச்சினைக்கு உதவவேண்டும். பல மக்கள் காணிகள் கேட்டு உயிரிழந்துவிட்டார்கள். பலர் காணாமல் போனவர்களைத் தேடி உயிரிழந்து விட்டார்கள். நாங்களும் எப்போது உயிழப்போம் என எங்களுக்கு தெரியாது. நாங்கள் ஒற்றுமையாக இவ்வாறான பிரச்சினைக்களுக்குத் தீர்வு காண்போம். என்றார்.
நிகழ்வில் சக்கரநாற்காலி வழங்கல், கை ஊன்று கோல், சமுர்த்தி பயனாளிகளுக்குக் காசோலை வழங்கல் என்பன உட்பட பல சேவைகள் இடம்பெற்றன.
நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், மாகாண சபை உறுப்பினர்களான இ.இந்திராராஜா, ஜெயதிலக, செ.மயூரன், ம.தியாகராஜா வவுனியா மாவட்ட செயலாளர் றோகணபுஸ்பகுமார, வுனியா பிரதேசசெயலாளர் கா.உதயராஜா, வவுனியா மாவட்ட மேலதிக செயலாளர் திரேஸ்குமார், அரசஅதிகாரிகள், பொதுமக்கள் என பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ற-21-402)

## மணல் கடத்திய வாகனம்சிக்கியது

சாவகச்சேரி, ஏப்.27
கேரதீவுப் பகுதியில் சட்ட விரோத மணல் கடத்தலில் ஈடுபட்ட சந்தேகத்தில் வாகனம் ஒன்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. அதில் பயணித்தவர்கள் பொலிஸாரைக் கண்டதும் தப்பியோடினர் என்று தெரிவிக்கப்பட்டது.
கேரதீவு, அறுகுவெளியில் நீண்ட காலமாக மணல் கடத்தப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்ட நிலையில் பொலிஸாரின் சோதனைகளில்எவரும்சிக்கவில்லை. கடந்த செவ்வாய்க்கிழமை பொலிஸார் அங்குள்ள பற்றைக் காடுகளில் மறைந்திருந்தனர். அங்கு மணல் ஏற்றும் வாகனம் ஒன்றைப் பொலிஸார் இனங்கண்டு நெருங்கிச் சென்றுள்ளனர். அங்கிருந்தவர்கள் தப்பியோடினர். வாகனம் கைப்பற்றப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-9)

## வவுனியா நடமாடும் சேவையில் 3தம்பதியருக்குப் பதிவுத்திருமணம்

### நடத்தி.வைத்தார் அமைச்சர் ரிசாத்



வவுனியா, மே1
வவுனியாவில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதி நடமாடும் சேவையில் மூன்று தம்பதியருக்கு பதிவுத் திருமணம் நடத்தி வைத்தார் அமைச்சர் ரிசாத் பதியுதீன்.
இதுவரை திருமணப் பதிவு மேற்கொள்ளாதிருந்த மூன்று தம்பதியருக்கே இவ்வாறு பதிவுத் திருமணம் நடத்தப்பட்டது.
பதிவுத்திருமணங்களுக்கான சாட்சி கையெழுத்துக்களை அமைச்சர் ரிஸாட்டும். வடமாகாணசபை உறுப்பினர் செந்தில்நாதன் மயூரனும் இட்டனர். வவுனியாமாவட்ட செயலர், பிரதேசசெயலாளர், மக்கள்பிரதிநிதிகள், அரசஉயர்அதிகாரிகள் என பலரும் அங்கிருந்தனர். (ற-21)

## கொழுத்தும் வெயிலில் காத்திருந்த மக்கள்

வவுனியா, மே1
வவுனியா தெற்கு பிரதேச செயலகத்தின் ஏற்பட்டில் நேற்றுமுன்தினம்நடத்தப்பட்ட நடமாடும்சேவையில் நீண்ட நேரம் கொழுத்தும் வெயிலில் காத்திருக்க வேண்டியிருந்தது என்று மக்கள் கவலை தெரிவித்தனர். நடமாடும் சேவை காமினி மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட மக்கள் காலை 8 மணியிலிருந்து 3 மணிவரை மூக்கு கண்ணாடி பெறுவதற்கு காத்திருந்தனர். முறையான ஒழுங்கமைப்பு இன்றி வரிசையில் நீண்ட நேரம் காத்திருக்கவேண்டியிருந்தது என்று மக்கள்விசனம்தெரிவித்தனர். (ற-402)



## சிவமோகன் எம்.பியின் தந்தை காலமானார்

முல்லைத்தீவு, மே1
வன்னி நாடாளுன்ற உறுப்பினர் சி.சிவமோகனின் தந்தையாரான முத்தையா சிவப்பிரகாசம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
இவர் புதுக்குடியிருப்பு முதலாம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகக் கொண்டவர். முன்னைநாள் அதிபராவார்.
அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை செவ்வாய்க்கிழமைமுல்லைத்தீவுபுதுக்குடியிருப்பு முதலாம் வட்டாரத்தில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும். பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக புதுக்குடியிருப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லபட்டுதகனகிரியைகள்இடம்பெறும்என நாடாளுமன்ற உறுப்பினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-21)

## சிறாட்டிக்குளம் கிராமச்சாலைசீரமைப்புக்கு ரூபா30 மில். நிதி

முல்லைத்தீவு, மே 01
முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சிறாட்டிக்குளம் கிராம சாலைச் சீரமைப்புக்காக 30 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது என்று பிரதேச செயலர் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவு க்குட்பட்ட பாலைப்பாணி, சிறாட்டிக்குளம் ஆகிய இரு கிராமங்கள் மிகவும் பின்தங்கிய கிராமங்களாக இனங்காணப்பட்டு அவற்றின் அபிவிருத்திக்காக நிதி கோரப்பட்டிருந்தது.
இரு கிராமங்க ளுக்கும் தனித்தனியாக முன்வைக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களில் சிறாட்டிக்குளம் அபிவிருத்தித் திட்டத்துக்கான நிதி கிடைத்துள்ளது.
நட்டாங்கண்டலில்இருந்துசிறாட்டிக்குளம் செல்லும் பிரதான வீதியான 6.5 கிலோமீற்றர் சாலைச் சீரமைப்புக்கு 30 மில்லியன் ரூபா நிதி கிடைத்துள்ளது.
அந்த நிதியில் முழுச் சாலையையும் சீரமைக்க முடியாது. 2கிலோமீற்றர் சாலையை மட்டுமே சீரமைக்க முடியும்.
சீரமைக்கப்படவுள்ளசாலையின் மூலம் சிறாட்டிக்குளம் மக்கள் நேரடியாக நன்மையடைய வேண்டும் என்ற நோக்கோடு சிறாட்டிக்குளம் கிராமத்தில் இருந்து சீரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இந்த நடவடிக்கைகளை இந்த ஆண்டுக்குள் ஆரம்பிப்பதற்குத்திட்டமிடப்பட்டுள்ளது-என்றார். (ற-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறிச்சுக்கட்டி விவகாரம்

## வர்த்தமானி அறிவித்தலை ஆராய சுயாதீன குழுவை நியமிக்க முடிவு

கொழும்பு, மே 1
மறிச்சுக்கட்டிப் பிரதேச மக்களின் காணிகளைக் கையப்படுத்தும் வகையில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் தொடர்பாக ஆராய்வதற்கு, சுயாதீனக் குழுவொன்றை நியமிப்பதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளார்.
குறித்த குழுவில் உள்ளடக்கும் வகையில் பிரதிநிதி ஒருவரைத் தந்துதவுமாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரிஷாத் பதியுதீனிடம் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
மாவில்லு பாதுகாக்கப்பட்ட வனாந்தர வர்த்தமானியில் மறிச்சுக்கட்டி பிரதேச மக்களின் 4 ஆயிரத்து 30.525 ஹெக்ரேயர் விஸ்தீரணம் கொண்ட காணி கையகப்படுத்தப்பட்டது. அதனையடுத்து அமைச்சர் ரிஷாத் பதியுதீன் உள்ளிட்ட பல முக்கியஸ்தர்கள் அண்மையில் அரச தலைவரின் செயலாளருடன் உயர்மட்டச் சந்திப்பை நடத்தினர்.
இந்தச் சந்திப்பில் குறித்த வர்த்தமானி அறிவித்தலை நீக்க வேண்டுமென கோரிக்கை விடுத்தனர். அதனையடுத்தே சுயாதீன குழுவொன்றை அமைத்து இந்தப் பிரச்சினை குறித்து ஆராய்வதற்கு அரச தலைவர் தீர்மானித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-10)

## மாபெரும் மேதின கூட்டம் கண்டியில்

"இலங்கையில் மாபெரும் மே தினக்கூட்டம் கண்டியிலேயே இடம்பெறும். கண்டிக்கு அதிகளவிலான மக்கள் தொகை வந்த நாளாகவும், இந்த முறை இடம்பெறப்போகும் சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டம் பதிவாகும்" என்று அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.
"மேதினத்துக்கு வராவிட்டால் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச, பிரசன்ன ரணதுங்க உள்ளடங்களாக மகிந்த அணியில் உள்ள சுதந்திர கட்சி உறுப்பினர்கள் எவருக்கு எதிராகவும் எந்தவித நடவடிக்கையும் எடுப்பதாக இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை" என்று அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். (ஐ-10)





# நாட்டில் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கு ஊடகவியலாளர்களுக்கு சுதந்திரம் அவசியம்

### எதிர்க்கட்சித்தலைவர் இரா.சம்பந்தன் வலியுறுத்து

மட்டக்களப்பு, மே 1
நாட்டின் ஜனநாயகம் பாதுகாக்கப்படுவதற்கும், ஜனநாயகம் பலமாக இருப்பதற்கும், நாட்டில் செயலாற்றும் ஊடகவியலாளர்களுக்கு சுதந்திரம் மிக அவசியம். ஊடகவியலாளர்கள் உண்மைகளை எழுத வேண்டும். உண்மை கள் சாதாரண மக்களுக்குத் தெரிய வேண்டும். இவ்விதமாக தெரியப்பட்டால்தான் அந்த நாட்டின் ஜனநாயகம் பாதுகாக்கப்படும்.
இவ்வாறு எதிர்க்கட்சித்தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.
மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு அமெரிக்க மிசன் மண்டபத்தில் மூத்த ஊடகவியலாளர் தராக்கி சிவராமின் 12ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்று நடைப்பெற்றது.
இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தா.
அவர் மேலும் தெரிவித்ததாவது: ஒரு காலகட்டத்தில் இந்த நாட்டில் யாரும் சுதந்திரமாகச் சிந்திக்கவில்லை. சுதந்திரமாகச் செயற்பட முடியாத சூழல் இருந்தது. ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக எழுத முடியாத நிலைமையும் இருந்தது. ஆனால் இன்று அந்த நிலைமை சற்று மாறியிருக்கின்றது.
சிவராம் தனது சிந்தனையின் கூர்மையை அன்று எழுத்துக்களால் காட்டினார். அவரது எழுத்தின் கூர்மை அவரால் எழுதப்பட்ட கட்டுரையிலிருந்து வெளிப்பட்டது. சிவராமின் எழுத்துத்திறமையைப் பல பெரியார்கள், புத்திஜீவிகள் புகழ்ந்து பேசியதை நான் காதால் கேட்டிருக்கின்றேன். அவருடன் தனிப்பட்ட ரீதியில் பேசும் போதும், கருத்துக்களை, சிந்தனையைப் பரிமாறிக் கொள்ளும்போதும் அவர் சொல்கின்ற கருத்துக்களிலிருந்து, அவருடைய சிந்தனையின் ஆழம், அழுத்தம், எல்லாம் புலப்படும். சிவராம் சாதாரண மனிதரல்ல. அவர் திறமைசாலி. அவர் உயிரோடு இருந்திருந்தால் ஊடகத்துறையில் பெரியதொரு இடத்தைப் பிடித்திருப்பார். அதில் எவ்விதமான சந்தேகமும் இல்லை. எங்களது சமுதாயம் பல ஊடகவியலாளர்களை இழந்திருக்கின்றது. சிவராம், நடேசன், சுகிர்தராஜன் போன்றவர்களை இழந்திருக்கின்றோம். சமூகத்தில் பிரபல சம்பவங்கள் நிகழ்ந்த போது, அந்தச் சம்பவங்களை வெளிக் கொண்டு வருவதற்காக, சம்பவங்களின் உண்மைகளை மறைக்காமல் இருப்பதற்காக, அவர்கள் பல உண்மைகளை எழுதியதால் கொலை செய்யப்பட்டார்கள்.
திருகோணமலையில் 2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஐந்து மாணவர்கள் கொலை செய்யப்பட்டபோது, அந்தக் கொலைச் சம்பவத்தை மூடிமறைப்பதற்காக பல முயற்சிகள் நடைபெற்றன. அந்த மாணவர்கள் குண்டுகளின் நிமித்தம் கொலை செய்யப்பட்டார்கள் எனும் சம்பவத்தை மாற்றியமைக்க முனைந்தார்கள். அப்பாவி மாணவர்களைச் சுட்டுக் கொன்ற விடயங்கள் பத்திரிகை மூலம் வெளிக்கொண்டு வரப்பட்டது. அதன் நிமித்தம் சுகிர்தராஜன் கொலை செய்யப்பட்டார். சிவராமின் கொலை சம்பந்தமாக இன்னும் உண்மைகள் அறியப்படவில்லை. உண்மைகள் அறியப்பட வேண்டியது அவசியமானது என்று நான் நினைக்கின்றேன். ஏனென்றால் பல்வேறு விதமான திறமையான ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டிருந்த போது அவர்கள் ஏன் கொலை செய்யப்பட்டனர்? எதற்காகக் கொலை செய்தார்கள்? அவை வெளிவர வேண்டியது சமூகத்தில் உள்ள அத்தியாவசியமான தேவையாகும் என்று நான் கருதுகின்றேன்.
இவ்வாறான சம்பவங்கள் இனிமேலும் இந்த நாட்டில் இடம்பெறக் கூடாது. ஏனென்றால் ஊடகவியலாளர்களின் கொலைகள் தொடர்பான உண்மைத்தன்மை வெளி கொண்டு வரப்பட வேண்டும். லசந்த விக்ரமதுங்க கொலை செய்யப்பட்டார். எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்டார். இந்த சம்பவங்களின் விசாரணைகள் இன்று நடைபெறுகின்றது. அவர்களின் உடலங்கள் தோண்டியெடுக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒரு நாட்டின் சமுதாயத்துக்கு ஊடகவியலாளர் பெரிய பங்களிப்பைச் செய்திருந்தார்கள். ஊடகவியலாளர்கள் பலமாக இருக்க வேண்டும். ஊடகப்பணியை துணிவாக ஆற்ற வேண்டும். எம்மைப் பொறுத்தளவில் ஊடகவியலாளர்கள் மீது அதிக மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கின்றோம். நீங்கள் சுதந்திரமாகச் செயற்படுவதற்கு நாங்கள் எந்த விதமாக உதவலாமோ அவ்வாறு உங்களுக்கு உதவுவதற்கு நாங்கள் பின் நிற்க மாட்டோம். அதனை உறுதியாகக்கூறிவைக்கின்றோம்-என்றார்.
இந்த நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், ஞா.ஸ்ரீநேசன், சீ.யோகஸ்வரன், வியாழேந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேந்திரன், பொன்.செல்வராசா, கிழக்கு மாகாண பிரதித் தவிசாளர் இந்திரகுமார் பிரசன்னா, மாகாண சபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், இ.சாணக்கியன் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-10)

## தண்ணீருக்காகப் போராடும் நிலமை எதிர்காலத்தில் வரும்

### எச்சரிக்கிறார் அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா



கொழும்பு, மே 1
"நாட்டில் குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வதற்காக எதிர்காலத்தில் போராடும் அபாயம் உள்ளது. எனவே குடி தண்ணீரை வீண் விரயம் செய்யாது, சிக்கனமாகப் பாவிக்க வேண்டும்.
இவ்வாறு இடர்நிவாரணசேவைகள் அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.
பொல்ககவெல, பொத்துகெர பிரதேசத்தில் ஒருங்கிணைந்த குடிதண்ணீர் வழங்கல் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு பொத்துகெரபொதுவிளையாட்டரங்கில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்ததார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது, நாட்டைப் பிடிப்பதற்கான போர் எதிர்காலத்தில் இடம்பெறப்போவதில்லை. வேறு காரணங்களுக்கும் போர் இடம்பெறப்போவதில்லை. மாறாக குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்வதற்காகவே எதிர்காலத்தில் போர் ஏற்படும்.
தண்ணீரைப் பெற்றுக்கொள்வதில் ஏற்படும் பிரச்சினைகளுக்காகப் பொலிஸ் நிலையம் வரை செல்லும் நிலமையைத் தற்போது அவதானிக்க முடிகிறது. மத்திய கிழக்கிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றவர்கள் அனைவரும் போர் காரணமாக அங்கு செல்லவில்லை. மத்திய கிழக்கில் குடிதண்ணீர் இல்லாத காரணத்தால் சிலர் ஐரோப்பிய நாடுகளுக்குப் புலம் பெயர்ந்தனர்.
தற்போது வடமேல் மாகாணத்தில் மாஓயாவை அண்மித்த பிரதேசங்களில் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு அதிகரித்துள்ளது. குடிதண்ணீர் பெறும் மாஓயாவை பாதுகாக்கும் வேலைத்திட்டங்களையும் முன்வைக்க வேண்டும்.
கடந்த காலங்கில் மாஓயாவிலிருந்து அதிகளவான மணல் அகழப்பட்டது. அதனால் தற்போது அங்கு மணல் இல்லை. அங்கு மணல் அகழப்படுவதை சிறிது காலத்துக்கு நிறுத்த வேண்டும்.
[illegible] பழ[illegible] முறைகளையே பயன்படுத்திக்கொண்டிருக்கிறோம். தொடர்ந்தும் அந்தப் பழைய முறைகளுக்கு இணங்கச் செயற்பட முடியாது. நீரைப் பயன்படுத்தும்போது அதனை வீணாக்காது பயன்படுத்துவதற்கான புதிய திட்டங்களையும் அறிமுகப்படுத்த வேண்டும். தண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டால், அதற்கு எவராலும் உரிய தீர்வு முன்வைப்பது கடினம். பௌசர் மூலம் நீர் வழங்கினாலும் அனைத்து தேவைகளைப் நிறைவு செய்ய முடியாது.
தற்போது நாட்டில் குடிதண்ணீர்ப் பிரச்சினை மாத்திரமல்லாது, குப்பை பிரச்சினையும் ஏற்பட்டுள்ளது. மனித சமூகம் தமது வாழ்க்கை முறையை மாற்றிக்கொள்கின்ற போது தான் இவ்வாறான சகல பிரச்சினைகளும் ஏற்படுகின்றன. குறித்த பிரச்சினைகளுக்கு சமூகம் பொறுப்புக் கூற கடமைப்பட்டுள்ளது-என்றார். (ஐ-10)

## நவுரு தீவு ஒரு நரகம்

### இலங்கைத்தமிழர் சாட்சியம்

கொழும்பு, மே 1
"இலங்கையில் அரசியல் கைதி என்ற ஒரு நரகத்திலிருந்து தப்பிய பின்னர் நவுரு என்ற மற்றொரு நரகத்துக்கு நான் அனுப்பப்பட்டேன். நவுரு தீவு ஒரு நரகம்" இவ்வாறு ஆஸ்திரேலியாவில் புகலிடம் கோரியுள்ள இலங்கைத் தமிழர் சாட்சியமளித்துள்ளார்.
"சட்ட விரோதமாகப் படகு மூலம் சென்றவர்கள் ஆஸ்திரேலியாவால் நவுரு தீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இந்தத் தடுப்பு முகாமிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ரவி என்ற இளைஞன் விக்டோரியாவில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றினார். அவர் தனது உரையில்,
"மனிதர்களின் மூச்சுகாற்று தான் சுதந்திரம். நீண்டகால தடுப்புகள் எங்களது நம்பிக்கையை இழக்கச் செய்துள்ளது. புகலிட கோரிக்கையாளர்கள் தொடர்பான கொள்கைகள் மக்களைக் கொன்றுள்ளது. புகலிடம் கோருவோர் தடுத்து வைக்கப்படுவதன் மூலம் மனித உரிமை மீறப்படுகிறது.
இது ஆஸ்திரேலியாவில் தொடர்கின்றது. நாங்கள் உங்கள் எதிரிகள் அல்ல, நாங்கள் உங்கள் நண்பர்களே, ஒன்றாக ஒரு பெரிய ஆஸ்திரேலியாவை உருவாக்க முடியும்" என்று அவர் குறிப்பிட்டார் என்று ஆஸ்திரேலிய ஊடக செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ அதிகாரிகளுக்கு அரசியல் நடத்தத் தெரியாது

*இப்படிச் சொல்கிறார் டிலான் பெரேரா*

கொழும்பு, மே 1

"இராணுவ அதிகாரிகளுக்கு அரசியல் நடத்தத் தெரியாது. இராணுவம் வேறு, அரசியல் வேறு என்பதை சரத் பொன்சேகாவுக்கு தெளிவுபடுத்தவே, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அமைச்சரவைக் கூட்டத்தில் நகைச்சுவையாக இராணுவத்துக்கு மீண்டும் செல்கிறீர்களா? எனக்கேள்விஎழுப்பினார்." இவ்வாறு இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

பதுளை காலிஎலவில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தா.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, அமைச்சர் சரத் பொன்சேகாவுக்குசிறியஅறிவிப்பொன்றை வழங்கினார். அரசியல் என்பதும், இராணுவ நிர்வாகம் என்பதும் இரு வேறானவைகள். அதனால் தான், இராணுவத்திலிருந்து வந்து தேர்தலில் போட்டியிட்டவர்களை மக்கள் புறக்கணித்தனர்.

அரச தலைவர் , சரத்பொன்சேகாவை அரசியலிருந்து விலகி மீண்டும் இராணுவத்துக்குச் சேருமாறு நகைச்சுவையாகக் கூறினார். இராணுவத்திலிருக்கும் போது அவர்கள் திறமையானவர்கள். அது சரத்பொன்சேகாவுக்கும்பொருந்தும், கோத்தபாயாவுக்கும் பொருந்தும். ஏனையவர்களுக்கும் பொருந்தும். இத்தகையவர்கள், அரசியலுக்கு வந்தவுடன், சும்மா அல்ல, நிரந்தரமாகவே சித்தி யெய்யாதவர்கள்- என்றார்.

அமைச்சரவையில்என்ன இடம்பெற்றது என்பது தொடர்பில் பீல்ட் மார்ஷல் சரத் பொன் சகாவும் தெளிவான கருத்துத் தெரிவித்துள்ள நிலையில், அரச தரப்பிலுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்கள் அரசதலைவரின் கருத்துக்கு பல்வேறு வகையான கருத்துக்களை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-10)

# முஸ்லிம் மாணவிகள் இனி பர்தா அணியலாம்

*கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவிப்பு*



மட்டக்களப்பு, மே 1

"முஸ்லிம் மாணவிகள் பர்தாவைக் கழற்ற வேண்டிய கட்டாயம் இனி இல்லை. அவர்கள் தங்களது கலாச்சாரப்படி பர்தாவை அணியலாம்" இவ்வாறு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரிய வசம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு ஓட்டமாவடி மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கல்வியியல் மற்றும் வர்த்தகக் கண்காட்சி நிகழ்வுகளின் ஆரம்ப விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், அதிபர்களுக்கிருந்த பல்வேறு அசௌகரியங்களை நாம் மாற்றியமைத்திருக்கின்றோம். முஸ்லிம் மாணவிகள் தங்களது கலாசாரப்படி பர்தா அணியலாம். அவற்றைக் கழற்றி வீசிவிட்டுபாடசாலைகளுக்கு வரவேண்டிய எந்த நிர்ப்பந்தமும் இல்லை. எல்லா சமூகத்தாரும் தமக்கே உரித்தான பாரம்பரிய கலாசார விழுமிய பண்பாட்டுச் சிறப்பம்சங்களை பேணிப் பாதுகாத்து அதன்படி இந்த நாட்டில் வாழ்வதற்கு எல்லா உரிமைகளும் உள்ளன.

கடந்த கால அரசில் இருந்ததைப் போலல்லாது, வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு என்று பிரித்துப் பார்க்காது பொதுவான கல்விக் கொள்கையை வகுத்து நாம் இன ஐக்கியத்தின்பால் செயற்பட்டு வருகின்றோம். இலங்கையின் கல்வியமைச்சிலே முதற் தடவையாக இன நல்லிணக்கப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இனக்குரோத பாகுபாடுகளை இல்லாமற் செய்வதற்காகச் சிறப்பு சுற்றறிக்கைகளை நாங்கள் தயாரித்து அவற்றைக் கடைப்பிடித்தொழுகுமாறு கண்டிப்பான உத்தரவையும் கல்வி அதிகாரிகளுக்கு வழங்கியிருக்கின்றோம். அரச தலைவர், தலைமை அமைச்சர் ஆகியோரின் முழு ஆதரவு எமக்கிருப்பதால் இந்த விடயம் சாத்தியமாகியுள்ளது.

கல்வியில் பெருந்தொகையைச் செலவு செய்து கிழக்கு மாகாண கல்வித் தரத்தை உயர்த்தவுள்ளோம். கல்வி முன்னேற்றத்தினூடாகத் தான் இந்த நாட்டில் ஒரு புதிய வழியைத் திறக்க முடியும். 3 ஆயிரத்து 901 அதிபர்களையும், 852 கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளையும் நியமிக்க முடிந்தது. ஆசிரியர்களுக்கான பயிற்சிகளை வழங்கும் வளவாளர்களாக ஆயிரத்து 190 பேர் உள்வாங்கப் படவுள்ளனர். மாகாணப் பாடசாலைகளில் உள்ள ஆசிரியர் வெற்றிடங்களை கணக்கிட்டு 20 ஆயிரம் ஆசிரியர்கள் உள்வாங்கப் படவுள்ளனர். சகல ஆசிரியர்களுக்கும் அவர்களது ஆளுமையையை வளர்த்துக் கொள்ளத் தேவையான பயிற்சிகளை வழங்கி வருகின்றோம்.

இந்த நாடு ஏனைய உலக நாடுகளுடன் கல்வியில் போட்டி போட்டு முன்னேறுவதற்கான சகல திட்டங்களும் தீட்டப்பட்டுள்ளன. 5 ஆயிரம் பாடசாலைகளுக்கு கணினிகளை வழங்கவிருக்கின்றோம்.

முதன்மைப் பாடசாலைகளுக்கு 50 கணினிகளை வழங்கும் உத்தேசம் உள்ளது. அருகிலுள்ள சிறந்த பாடசாலை திட்டத்திலே 78 பாடசாலைகளுக்குப் போதுமான சிறந்த பௌதீக வளங்களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம்.

இந்த வருடத்துக்குள் 45 இலட்சம் பாடசாலை மாணவர்களுக்கு தலா இரண்டு இலட்சம் ரூபா காப்புறுதி செயற்திட்டத்தைவழங்கவுள்ளோம். அதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன-என்றார். (ஐ-10, 46)

# ரேடர் வலையமைப்பை கொழும்பில் நிறுவுகிறது அமெ.

## அச்சத்தில் அயல் நாடுகள்

கொழும்பு, மே 1

கொழும்பில் ஆறு ஏக்கர் நிலப்பரப்பில் உயர் தொழில் நுட்பத் திறன் கொண்ட ரேடர் வலையமைப்புடன் கூடிய கண்காணிப்பு மையம் ஒன்றை அமெரிக்கா அமைக்கவுள்ளது என்று கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொழும்பு நகரில், கொள்ளுப்பிட்டி பகுதியில் பிரிட்டன் தூதரகத்துக்குச் சொந்தமான ஆறு ஏக்கர் காணியை அமெரிக்கா கொள்வனவு செய்திருப்பது, இலங்கை உள்ளிட்ட பல நாடுகளின் புலனாய்வு அமைப்புகளுக்குக் கரிசனையை ஏற்படுத்தியுள்ளது.

அந்த இடத்தில் அமெரிக்கா, பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய ஐந்து நாடுகளின் புலனாய்வு அமைப்புகள் கண்காணிப்பு மையம் ஒன்றை அமைக்கவுள்ளமையே அதற்குக் காரணமாகும். உயர் தொழில்நுட்ப ரேடர் கண்காணிப்பு வலையமைப்பு மற்றும் தகவல் பரிமாற்ற கருவிகள் பொருத்தப்பட்டு இந்தக் கண்காணிப்பு மையம் அமைக்கப்படவுள்ளது. இது பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று ஆசியப் பிராந்தியத்தில் உள்ள பல நாடுகள் கவலையை வெளிப்படுத்தியுள்ளன.

கொழும்புத் துறைமுகம், கோட்டை, காலிமுகத்திடல் போன்ற கொழும்பின் முக்கிய வணிகப் பகுதியின் மையத்தில், இந்தக் கண்காணிப்பு அமையம் அமையவுள்ளமை குறித்து சீனாவும், இந்தியாவும் மிகவும் கவலையடைந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கா இந்தப் பிராந்தியத்தைக் கண்காணிக்கும் ரேடர் வலையமைப்பை உருவாக்கினால், தாமும் அது போன்ற மையங்களை அமைக்க இந்தியாவும், சீனாவும் திட்டமிட்டுள்ளன. அமெரிக்க தூதுரகத்தால் கொள்வனவு செய்யப்பட்ட காணிக்குப் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டு, அங்கிருந்த கட்டடங்கள் அழிக்கப்பட்டு, புதிய கட்டடங்களை அமைப்பதற்கான தயார்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தக் கட்டுமானங்கள், இலங்கையில் உள்ள ஏனைய தூதரகங்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளது. கண்காணிப்பு மைய கட்டுமானத்தால் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருப்பதாக அமைச்சர்களிடம் வெளிநாட்டுப் புலனாய்வு அமைப்புகள் எச்சரித்துள்ளன.

அமெரிக்கத் தூதரகம் கொள்வனவு செய்துள்ள காணியில், கண்காணிப்பு மையம் அமைக்கப்படவுள்ளது பற்றி இலங்கை பாதுகாப்புச் செயலர் கருணாசேன கெட்டியாராச்சி"

அது பற்றி தாம் எதுவுமே அறியவில்லை என்றார்" -என்றுள்ளது. (ஐ-10)

# மே தினத்தால் இ.போ.சவுக்கு 40 மில். வருமானம்

கொழும்பு, மே 1

மே தினப் ரேணி மற்றும் கூட்டத்துக்கு பேருந்துகள் வழங்கியுள்ளதன் மூலம் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு 40 மில்லியன் ரூபா வரையில் வருமானம் கிடைக்கப் பெற்றுது என்று இலங்கைப் போக்குவரத்துச் சபையின் முதன்மை கண்காணிப்பு அதிகாரி சீ.எச்.ஆர்.டி சந்ரசிறி தெரிவித்தார்.

"இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ள மே தினப் பேரணிக்காக அரசியல் கட்சிகள் சுமார் 4 ஆயிரம் பேருந்துகளைப் பதிவு செய்துள்ளன. ஐக்கிய தேசிய கட்சி ஆயிரத்து 432 பேருந்துகளையும், சிறிலங்கா சுதந்திர கட்சி ஆயிரத்து 537 பேருந்துகளையும், ஜே.வி.பி 209 பேருந்துகளையும் ஒன்றிணைந்த எதிர்கட்சி 22 பேருந்துகளையும் பதிவு செய்துள்ளது." - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை மே தினப் பேரணிக்காக 7 ஆயிரம் தனியார் பேருந்துகள் வரையில் கோரப்பட்டுள்ளன என்று இலங்கை தனியார் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜரட்ண தெரிவித்தார்.

மே தினப் பேரணியில் கட்சி ஆதரவாளர்கள் பங்குகொள்ளும் வகையில் மருதானையில் இருந்து கண்டி வரையிலும், திருகோணமலையில் இருந்து மருதானை மற்றும் மருதானையில் இருந்துதிருகோணமலை வரையிலும் மேலதிக தொடருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படும் என்று தொடருந்துப் போக்குவரத்து அதிகாரி விஜய சமரசிங்க தெரிவித்தார்.

மே தினக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக அதிவேக நெடுஞ்சாலைகள் ஊடாகச் செல்லும் பேருந்துகளுக்கு இன்று கட்டணங்கள் அறவிடப்படமாட்டாது என்று அதிவேக நெடுச்சாலைகளின் நிர்வாகப் பணிகள் மற்றும் முகாமைத்துவ பிரிவு தெரிவித்தது.

(ஐ-10)

# வெளிநாட்டு நாணயங்களுடன் இந்தியர்கள் கைது

கொழும்பு, மே 1

வெளிநாட்டு நாணயங்களுடன் இந்தியாவைச் சேர்ந்த இருவர் கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டனர் என்று சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்

"12 கோடி ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயங்கள் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டன. 14 நாடுகளின் நாணயங்கள் அவர்களிடம் காணப்பட்டன.

சந்தேகநபர்கள் குறித்த நாணங்களைச் சிங்கப்பூருக்கு எடுத்துச் செல்ல முயற்சித்தனர்" என்று சுங்கப் பிரிவினர் தெரிவித்தனர். (ஐ-10)

# கிழக்கில் மாகணத்தில் நெசவுத்தொழிலை மேம்படுத்த நடவடிக்கை

மட்டக்களப்பு, மே 1

கிழக்கு மாகாணத்தில் பிரபலமாகத் திகழ்ந்த நெசவுத் தொழிற்துறையை மேம்படுத்துவதற்கு முழு வீச்சில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

இதுதொடர்பில் ஆராயும் கூட்டமொன்று கிழக்கு மாகாண முதலமைச்சர் தலைமையில் காத்தான்குடி பாலமுனை அலிகார் வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

நெசவுத்தொழிலில் ஈடுபடுவோர் பல்வேறு நடைமுறைச் சிக் கல்களைச் சந்தித்து வரும்நிலையில் இந்தத் தொழிற்துறையைப் பாதுகாக்கும் நோக்கில் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பாரம்பரிய நெசவுத் தொழிலில் தற்போது எதிர்நோக்கும் நடைமுறைப் பிரச்சினைகள் குறித்து முதலமைச்சரிடம் நெசவுக் கைத்தறி உற்பத்தியாளர்கள் எடுத்துரைத்தனர்.

நெசவுத் தொழிலாளர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்த முதலமைச்சர், " இந்தத் தொழிற்துறையில் நவீன உத்திகளை புகுத்தி நவீன நெசவு இயந்திரங்கள் மூலம் அபிவிருத்தி செய்ய முடியும். நெசவுத்தொழில் ஆர்வமுடைய இளைஞர் யுவதிகளுக்கு பயிற்சிகளை அளிக்கும் வேலைத் திட்டமொன்று ஆரம்பிக்கப்படும்." என்றார். (ஐ-ய-46)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லிணக்கம், காணி விடுவிப்புக் குறித்து

# ஐ.நா. அதிகாரிகளுக்கு இராணுவம் விளக்கம்

யாழ்ப்பாணம், மே.1

நல்லிணக்கச் செயற்பாடுகள் மற்றும் வடக்கில் காணிகள் விடுவிப்புக் குறித்து ஐக்கிய நாடுகள் அமைப்பின் அதிகாரிகளுக்கு இராணுவம் விளக்கம் அளித்துள்ளதாக இராணுவ ஊடகப் பிரிவு தகவல் வெளியிட்டுள்ளது.

கொழும்பை மையமாகக் கொண்ட ஐக்கிய நாடுகள் அமைப்பின் பிரதிநிதிகள் இராணுவத் தலைமையகத்தில் இராணுவத் தலைமை அதிகாரி மகேஸ் சேனாநாயக்கவைச் சந்தித்தனர். இதன்போதே இந்த விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இராணுவ தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்ட மகேஸ் சேனாநாயக்கவுக்கு ஐக்கிய நாடுகள் அதிகாரிகள் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர் என்றும், அந்த ஊடகப் பிரிவுத் தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-5)

# தன் மக்களுக்காகப் போராடும் பிரதிநிதியே எமக்குத் தேவை

சிவசக்தி ஆனந்தன் எம்.பி. சுட்டிக்காட்டு

வவுனியா, மே.1

அரசின் பங்காளி அமைச்சரவையில் முக்கிய அமைச்சர் ஒருவர் தனது மக்களின் நிலம் பறிபோகின்றது என்பதற்காக அரச தலைவருடன் கடுமையாகத் தர்க்கப்பட்டுள்ளார். அவர் போன்ற மக்கள் பிரதிநிதிகளே தற்போதைய தேவை.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

வவுனியா சைவப் பிரகாசா கல்லூரியில் நடமாடும் சேவை நேற்று நடத்தப்பட்டது. அந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

நாங்கள் அழுத்தம் கொடுத்தால், மக்களுக்காகப் பரிந்து கதைத்தால் வேறு அரசு வந்து விடும். வாயை மூடிக் கொண்டிருக்க வேண்டும் என்று கூறுவது உண்மையான மக்கள் பிரநிதியின் கடமையல்ல.

அமைச்சர் ரிசாத் பதியுதீன் தனது மக்களுக்கு ஆதரவாக அரச தலைவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருக்கின்றார். தமது மக்களின் நிலங்களைக் காக்க வேண்டும் என்று அரச தலைவருடன் கடுமையாகத் தர்க்கப்பட்டுள்ளார்.

தமது பூர்வீகக் காணிகளை விடுவிக்க வேண்டும் என்று மக்கள் பல இடங்களில் தொடர் போராட்டம் நடத்துகின்றனர். ஆட்சி மாற்றம் நடந்த பின்னரும் நாம் நசுக்கப்படுகின்றோம். எங்கள் நிலங்கள் கையகப்படுத்தப்படுகின்றன.

இவற்றைப் பார்த்துக் கொண்டு நாம் வெறுமனே இருக்க முடியாது. அவற்றுக்கு எதிரான அழுத்தங்களை நாம் உரிய இடங்களில் கொடுக்க வேண்டியிருக்கின்றது. தமது காணிகளுக்குள் செல்லும்போது அதிகாரிகள் வந்து தடுக்கின்றனர் என்று எம்மிடம் பலர் முறையிடுகின்றனர். அந்த நிலங்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உண்டு.

உங்களிடம் உள்ள மேட்டுக் காணிகளைத் துப்புரவு செய்து ஏதாவது பயிரிடுங்கள். இல்லாதபட்சத்தில் அவை பறிபோகும் ஆபத்துள்ளது. 2011, 2014 வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் ஒன்றரை லட்சம் ஏக்கருக்கு மேற்பட்ட எங்கள் நிலங்கள் பறிபோகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. சில இடங்களில், சில நேரங்களில் அதிகாரிகளால் எதுவும் செய்ய முடியாது. சுற்றறிக்கைகள் அவ்வாறு அமைகின்றன.

ஆட்சி மாற்றத்தின் பிரதான பங்காளிகள் தமிழ் மக்களே. இந்த அரசு எதுவும் செய்யவில்லை. எம்கட்சியில் உள்ள ஒரு சிலர் கூறுவது போன்றுவாயைமூடிமௌனமாக இருக்க முடியாது. எங்கள் மக்களின் உரிமைகள் கிடைக்கும் வரை உரத்துக் குரல் கொடுப்போம். அமைச்சர் ரிசாத் பதியுதீன் இதற்கு ஓர் உதாரணம் என்று நினைக்கின்றேன். என்றார். (ற-21)

# ரிதியகமவில் யாசகருக்கு மத்திய நிலையம்

கொழும்பு, மே1

ரிதியகம பிரதேசத்தில் யாசகர்ர்களுக்கு மத்திய நிலையம் ஒன்றை அமைப்பதற்கு முதற்கட்டமாக 100 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் செயலாளர்நிகால் ரூபசிங்கதெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"கொழும்பு நகரத்தில் யாசகம் எடுப்பவர்களை அப்புறப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கொழும்பில் யாசகம் எடுப்பவர்கள் எதிர்வரும் ஜூன் மாதம் தொடக்கம் அம்பலாந்தோட்டை - ரிதியகம பிரதேசத்தில் உள்ள மத்திய நிலையத்துக்கு மாற்றப்படுவர்." என்றார். (10)

# கங்கையில் தொலைந்த சிறுமி முதலை வயிற்றிலிருந்து மீட்பு

அநுராதபுரத்தில் சோகச் சம்பவம்

கொழும்பு, மே.1

கங்கையில் குளித்துக் கொண்டிருந்த 12 வயதுச் சிறுமி காணாமல் போயிருந்த நிலையில் அவர் முதலையின் வயிற்றிலிருந்து உடலமாக மீட்கப்பட்டார்.

அநுராதபுரம், கல்னேவ பகுதியில் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. நாளை பிறந்த நாள் கொண்டாட இருந்த நிலையில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

கல்னேவ முலன்னடுவ கங்கையில் பெற்றோர், சக நண்பர்களுடன் குளித்துக் கொண்டிருந்தபோது சிறுமி திடீரெனக் காணாமல் போனார். சிறுமியைக் காணாது தேடியபோது கங்கையில் முதலையொன்று வழமைக்கு மாறாக வயிறு பெருத்த நிலையில் காணப்பட்டது. சம்பவங்களின் அடிப்படையில் குறித்த முதலைதான் சிறுமியை விழுங்கியிருக்க வேண்டும் என்று அனைவரும் முடிவுக்கு வந்தனர். மக்கள் மற்றும் கடற்படையினர் இணைந்து அந்த முதலையை பிடித்துள்ளனர். அதனைக் கட்டிவைத்துப் பார்த்தபோது சிறுமியின் உடலம் முதலையில் வயிற்றில் இருந்தமை தெரியவந்தது.

முதலையைக் கொன்று வயிறு பிரிக்கப்பட்டு சிறுமி உடலமாக மீட்கப்பட்டார். இந்தச் சம்பவம் அந்தக் கிராமத்தையே கவலையில் மூழ்கடித்துள்ளது. அங்குள்ள கல்லூரியில் தரம் 7 இல் குறித்த சிறுமி கல்வி கற்கிறார். (ற-4)

# இலங்கையில் தொழிலாளர்களுக்கு பற்றாக்குறை

கொழும்பு, மே1

இலங்கையில் தொழிலாளர்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. அதனால் வெளிநாட்டுத் தொழிலாளர்களின் வருகை அதிகரித்தள்ளது என்று பெருநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார் என்று ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"இலங்கையில் சுமார் 2 இலட்சம் வெளிநாட்டவர்கள் பணியாற்றுகின்றனர். அவர்களில் தொழில் நுழைவுவிசைவு இல்லாமல் பணியாற்றுபவர்களும் உள்ளனர். வெளிநாட்டுப் பணியாளர்களின் வருகை குறித்துஆராயகுடியேற்றவிதிமுறைகளை கடுமையாக்க வேண்டும்.

வெளிநாட்டுப் பணியாளர்களில், இந்திய, பங்களாதேஷ் மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களே அதிகமாக உள்ளனர்" என்றுள்ளது. (ஜ-10)

# இரு குழுக்களிடையே மோதல் ஒருவர் சாவு

மீகவத்தை நாரங்வல பிரதேசத்தில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சியொன்றின் போது, இரு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

"நேற்று அதிகாலை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் படுகாயமடைந்த அவர் கம்பகா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார். சம்பவத்தில் தெல்கொட பகுதியைச் சேர்ந்த 41வயதான நபர் உயிரிழந்துள்ளார். மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன." என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஜ-10)



# இரு மாதங்கள் கடந்தும் இன்னமும் தீர்வில்லை

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டம் தொடர்கிறது

கிளிநொச்சி, மே 1

கிளிநொச்சி மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நடந்தும் தொடர் போராட்டம் நேற்று 70 ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் வெளிப்படுத்தலையும், விடுவிப்பையும் வலியுறுத்தி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடர் போராட்டங்கள் நடத்தப்படுகின்றன.

கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்தைத் தொடர்ந்து வவுனியா, முல்லைத்தீவு, மருதங்கேணி, திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலும் தொடர் போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

இன்று உலக தொழிலாளர் தினம் முன்னெடுக்கப்படும் நிலையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பேரணியாகச் சென்று அரச தலைவருக்கு மனு அனுப்பத் தீர்மானித்துள்ளனர்.

காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி, கந்தசுவாமி கோயில் முன்றலில் இருந்து ஆரம்பமாகி டிப்போச் சந்தி வரை பேரணியாகச் சென்று மனுவைக் கையளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பேரணிக்கு அனைத்துத் தரப்பினரும் ஆதரவு தர வேண்டும் என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

வவுனியாவில் 66 நாளாகவும், முல்லைத்தீவில் 55 ஆவது நாளாகவும், யாழ்ப்பாணம் மருதங்கேணியில் 48 ஆவது நாளாகவும், திருகோணமலையில் 58ஆவது நாளாகவும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களது போராட்டங்கள் தொடர்கின்றன. (ற-21-6)

# மத்திய வங்கிக் குண்டுவெடிப்பு; தண்டனைக் கைதியை விடுவிக்க மனு

யாழ்ப்பாணம், மே 1

மத்திய வங்கிக் குண்டுவெடிப்பில் குற்றஞ் சாட்டப்பட்டு சிறையில் இருக்கும் விக்னேஸ்வரநாதன் பார்த்திபனை கருணை அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டும் என்று அவரது பெற்றோர் ஊடகங்கள் மூலம் அரச தலைவரிடம் உருக்கமான வேண்டுகோளை விடுத்துள்ளனர்.


விக்னேஸ்வரநாதன் பார்த்திபன் மத்தியவங்கிக் குண்டு வெடிப்புச் சம்பவத்துடன் தொடர்புபட்டார் எனக்கூறி 1996ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 13ஆம் திகதி கொழும்பில் வெதுப்பகம் ஒன்றில் வைத்துக் கைது செய்யப்பட்டார். 2002ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் திகதி 20 வருடக் கடூழிய சிறைத்தண்டனையும் ஆயுள் தண்டனையும் அவருக்கு விதிக்கப்பட்டது. பார்த்திபன் ஏற்கனவே 22 வருடங்களை சிறைக்குள் கழித்து விட்டபடியால் தன்னை விடுதலை செய்ய வேண்டுமெனக்கோரி மேன்முறையீடு செய்துள்ளார்.

"தள்ளாத வயதில் முதுமையுடனும் பாரிசவாதத்துடனும் நாம் சிரமப்படுகின்றோம். நாங்கள் இறக்க முன்னர் எமது மகனை [illegible] பார்க்க விரும்புகின்றோம். [illegible] ளது ஒரு மகன் முள்ளி வாய்க்காலில் இறந்து விட்டார். இன்னொரு மகன் அங்கவீனமுற்றுள்ளார். மற்றொரு மகன் காணாமல் ஆக்கப்பட்டோர் பட்டியலில் உள்ளார்.

எமது மகன் கைது செய்யப்படும் போது அவனுக்கு 17 வயது. அறியாத வயதில் எமது மகன் கைது செய்யப்பட்டார். மத்திய வங்கிக் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட அப்பாவிப் பொதுமக்களுக்காக நாங்கள் வருந்துகின்றோம்" எனப் பார்த்திபனின் பெற்றோரான 83 வயதான விக்னேஸ்வர [illegible] (வ - 10,101)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





பிரான்ஸ் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் நிலவும் அளவுக்கு அதிகமான பனிப்பொழிவின் காரணமாக அங்குள்ள திராட்சைத் தோட்டங்கள், அதிகாலை வேளையில் தீப்பங்கள் மூலம் மிதமான வெப்பநிலையில் பராமரிக்கப்படுகின்றன. இது தொடர்பான ஒளிப்படங்கள் பன்னாட்டு ஊடகங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் வெளியாகியுள்ளன. (ம)

# நடுங்கியது பிலிப்பைன்ஸ்

மணிலா, மே 1

பிலிப்பைன்ஸில் தென் பகுதியில் நேற்று சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 7.2 அலகுகளாகப் பதிவானது என்று அமெரிக்க புவியியல்சார் ஆய்வு மையம் தெரிவித்தது.

இதுகுறித்து பிலிப்பைன்ஸ் தரப்பில், "பிலிப்பைன்ஸின் தென்பகுதியில் இன்று (நேற்று) சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 7.2 அலகுகளாகப் பதிவாகியது. மக்கள் உறங்கும் நேரத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. நிலநடுக்கத்தினால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து உடனடித் தகவல் இல்லை. இந்த நிலநடுக்கம் காரணமாக சுனாமி எச்சரிக்கை ஏதும் விடுக்கப்படவில்லை" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டு பிலிப்பைன்ஸில் 7.7 ரிச்டர் அளவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 2 ஆயிரம் பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# கொரியத்
# மற்றுமொ

## அனுப்பியது அ



வொஷிங்டன், மே 1

வடகொரியா நேற்றுமுன்தினம் நடத்திய ஏவுகணைச் சோதனை தோல்வியடைந்ததை அடுத்து, கொரியத் தீபகற்பப் பகுதிக்கு மற்றுமொரு வானூர்தி தாங்கிப் போர்க்கப்பலை அனுப்பியது அமெரிக்கா.

வடகொரியாவின் தொடர் அணுவாயுத சோதனைகள் காரணமாக அமெரிக்கா அந்த நாட்டின் மீது இராணுவ நடவடிக்கையை எடுக்க எத்தனித்துள்ளது. அமெரிக்காவின் வின்சன் என்ற விமானம் தாங்கிப் போர்க்கப்பல், நீர்மூழ்கிக் கப்பல் ஆகியன ஏற்கனவே கொரியத் தீபகற்பத்தில் முகாமிட்டிருந்தன. இந்த நிலையில் வடகொரியா நேற்றுமுன்தினம் மற்றுமொரு ஏவுக

" எத்தனி
வானூர்
ஆகியன
டிருந்தன

ணைச் சோ
நடத்தியது. இ
வாக மூன்றா
கப்பலைக்
கற்பத்துக்கு
அமெரிக்கா.
வடகொரிய
கணை முயற்
யடைந்திரு
அந்த நாடு த
கையில் விட
உள்ளது. இ
கொரியாவுக்

# ஓ.பி.எஸ். இ.பி.எஸ். இணைப்பில் மந்தகதி


சென்னை, மே 1

அ.தி.மு. கழகத்தின் இரு அணிகளையும் இணைக்கும் முயற்சி மந்த கதியில் உள்ளது என்று இந்திய ஊடங்கங்கள் செய்தி வெளியிட்டன.

சசிகலாவுக்கு ஏற்பட்ட எதிர்ப்பை அடுத்து, அவரையும் அவரால் கொண்டுவரப்பட்ட டி.டி.வி. தினகரனையும் கட்சியில் இருந்து நீக்கிவிட தமிழக முதல்வர் எடப்பாடி தரப்பு முடிவெடுத்துள்ளது. கட்சியில் இருந்து பிரிந்து சென்ற முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், அவரின் ஆதரவாளர்கள் ஆகியோரை மீண்டும் இணைக்க எடப்பாடி பழனிச்சாமி தரப்பினர் முடிவெடுத்து பேச்சுக்கு அழைத்திருந்தனர். இரு தரப்பிலும் பேச்சுக்கு செல்லப்போகும் அணிகளும் அறிவிக்கப்பட்டாயிற்று. ஆனால் இன்னும் எப்போது பேச்சு என்று திகதி முடிவாகவில்லை. இந்த நிலையில் ஓ.பன்னீர்செல்வம் தரப்பினர் பேச்சு நடத்த பின்னடிக்கின்றனர். தொண்டர்களின் கருத்தைக் கேட்டபின்னரேயே இணைப்புத் தொடர்பில் அவர்கள் முடிவெடுக்கவுள்ளனர் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)



# ஓவியங்கள் தந்த பெருமை



துனிசியாவின் ஜெர்பா தீவில் உள்ள மிகச் சிறிய கிராமம் எரியாட். ஒருகாலத்தில் கனவுத் தீவாகக் கருதப்பட்ட இந்தத் தீவு, தற்போது துனிசியாவின் சுற்றுலாப் பட்டியலில் இல்லை. கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக யாத்திரிகர்கள் வந்து செல்லும் இடமாக இருந்து வந்தாலும் மிகக் குறைவான வெளிநாட்டினரே சுற்றிப் பார்க்க வந்துகொண்டிருந்தனர். பெரிதாக உலகத்தின் பார்வைக்கு வராத இந்தக் கிராமம் சமீபகாலமாகச் சுற்றுலாப் பயணிகள் படையெடுக்கும் இடமாக மாறிவிட்டது.

இதற்குக் காரணம் அந்தக் கிராமத்து வீட்டுச் சுவர்களில் வரையப்பட்டுள்ள ஓவியங்கள்தான். 2014 ஆம் ஆண்டு மெகடி பென் சீய்க் என்ற பாரசீக ஓவியர், 30 நாடுகளிலிருந்து நூறு ஓவியர்களை ஜெர்பாவுக்கு வரவழைத்தார். கிராமங்களில் உள்ள வீட்டுச் சுவர்களின் மீது நிரந்தரமான ஓவியங்களைத் தீட்ட வைத்தார். 300 ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. சாதாரணமான ஒரு கிராமம், இன்று மிகப் பெரிய திறந்தவெளி ஓவிய அருங்காட்சியகமாக மாறிவிட்டது.

இந்த ஓவியங்களைப் பார்ப்பதற்காகவே சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள்.

"உணவு விடுதிகளும் உணவகங்களும் பெருகிவிட்டன. வேலை வாய்ப்பு அதிகரித்திருக்கிறது" என்கிறார் மெகடி பென் சீய்க். (ம)

# 12,000 கி.மீ. பயணத்தை முடித்தது ஈஸ்ட் விண்ட்

லண்டன், மே 1

லண்டனில் இருந்து கடந்த 10 ஆம் திகதி புறப்பட்ட சரக்கு தொடருந்து, தனது 12 ஆயிரம் கிலோ மீற்றர் பயணித்து நேற்றுமுன்தினம் சீனாவை வந்தடைந்தது.

மேற்கு ஐரோப்பாவுடன் தனது வர்த்தக தொடர்பை உயர்த்தும் நோக்கத்துடன் சீனா இந்தத் தொடருந்து சேவையை ஆரம்பித்துள்ளது.

உலகின் இரண்டாவது மிக நீளமான தொடருந்து தடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவே. 'ஈஸ்ட் விண்ட்' என்ற இந்த தொடருந்துவிஸ்கி, குழந்தைகளுக்கான பால், மருந்துப் பொருள்கள் உள்ளிட்ட பல மில்லியன் ரூபா பெறுமதியான பொருள்களுடன் கடந்த 10 ஆம் திகதி பயணத்தை ஆரம்பித்த[illegible]. பிரான்ஸ், பெல்ஜியம், ஜேர்மனி, போலந்து, பெலாரஸ், ரஷ்யா [illegible]தான் உள்ளிட்ட நாடுகளை [illegible] 20 நாள்கள் பயணமாகி [illegible] தினம் சீனாவின் யிவூ நகருக்[illegible]ழைந்தது. வானூர்திச் சரக்கு [illegible]தவரத்தைக் காட்டிலும் தொடருந்து [illegible]ாக்குவரத்து செலவு குறைவானது. கப்பலை விட குறைந்த நேரமே எடுத்துக் கொள்கிறது என்று தெரிவிக்கப்படுகிறது. (ம)

# யத் தீபகற்ப கடலில் மாரு போர்க் கப்பல்

## பது அமெரிக்கா



வடகொரியாவின் தொடர் அணுவாயுத சோதனைகள் காரணமாக அமெரிக்கா அந்த நாட்டின் மீது இராணுவ நடவடிக்கையை எடுக்க எத்தனித்துள்ளது. அமெரிக்காவின் வின்சன் என்ற வானூர்தி தாங்கிப் போர்க் கப்பல், நீர்மூழ்கிக் கப்பல் ஆகியன ஏற்கனவே கொரியத் தீபகற்பத்தில் முகாமிட்டிருந்தன.

ணைச் சோதனையை நடத்தியது. இதன் விளைவாக மூன்றாவது போர்க் கப்பலைக் கொரியத் தீபகற்பத்துக்கு அனுப்பியது அமெரிக்கா.

வடகொரியாவின் ஏவுகணை முயற்சி தோல்வியடைந்திருந்தாலும், அந்த நாடு தனது கொள்கையில் விடாப்பிடியாக உள்ளது. இதனால் வடகொரியாவுக்குப் பல நாடுகளில் இருந்து குறிப்பாக அமெரிக்காவின் முக்கியப் புள்ளிகளில் இருந்து கண்டனங்கள் குவிந்துள்ளன.

"வடகொரியாவின் இந்த நகர்வுகள் படுமோசமானவை. அந்த நாடு அமைதியான முறையில் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர விரும்பவில்லை என்பதை இது காட்டுகிறது. இந்த விவகாரத்தில் சீனா, அமைதியை ஏற்படுத்த எடுத்த முயற்சிகளுக்கு வடகொரியா மதிப்பளிக்கவில்லை" என ட்ரம்ப் சாடியுள்ளார்.

"வடகொரியாவின் மீது அழுத்தத்தை ஏற்படுத்தி ஏனைய நாடுகள் முன்வர வேண்டும்" என்று அமெரிக்க அயலுறவுத் துறை அமைச்சர் டில்லர்சன் தெரிவித்தார். (ம)



## 4,000 அரச ஊழியர்களை வீட்டுக்கு அனுப்பினார் எர்டகன்

அங்கரா, மே 1

இராணுவ புரட்சிக்கு உதவினார் என்ற குற்றச்சாட்டில் துருக்கியில் 4 ஆயிரம் அரச ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் பணி நீக்கம் செய்யப்பட்டனர்.

துருக்கியில் கடந்த ஆண்டு ஜீலை மாதம்ராணுவபுரட்சிக்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதை அதிபர் ரயிப் எர்டகன் பொதுமக்கள் உதவியுடன் முறியடித்தார். அமெரிக்காவில் தங்கியிருக்கும் மதகுரு பதுல்லா குலென் தூண்டுதலின் பேரில் புரட்சி நடந்தது என்று துருக்கி குற்றம்சாட்டு கிறது. இராணுவ புரட்சிக்கு உதவியவர்கள் மீது அதிபர் எர்டகன் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்.

ஏற்கனவே இராணுவம், பொலிஸ் மற்றும் சிவில் துறைகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான அதிகாரிகள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இந்த நிலையில் தற்போது 4 ஆயிரம் அரசு ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் பணி நீக்கம் செய்யப்பட்டனர். (ம)

## நிலச்சரிவில் 24 பேர் சாவு; கிர்கிஸ்தானில் அவலம்

பிஸ்கெக், மே 1

கிர்கிஸ்தானில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 9 குழந்தைகள் உள்பட 24 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

கிர்கிஸ்தானின் தெற்கு பகுதியில் சில நாள்களாக கனமழை பெய்து வருவதால் அந்தப்பகுதி முழுவதும் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கிறது. நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் உஸ்ஜென் மாவட்டத்தில் உள்ள ஓஷ் பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவாலேயே இந்த அசம்பாவிதம் ஏற்பட்டது. உயிரிழந்த 24 பேரைத் தவிர 30 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாலும் மேலும் பேரைக் காணவில்லை என்பதாலும் ழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று வெளியிடப்பட்டது.



# அமெரிக்க அதிபர் வாழ்க்கை கூட்டுப்புழு நிலை போன்றது

## சலித்துக்கொள்கிறார் ட்ரம்ப்

வொஷிங்டன், மே 1

அமெரிக்க அதிபர் பணி மிகவும் சவாலாக உள்ளது. அதனால் எனது பழைய வாழ்க்கையை விரும்புகிறேன் - இவ்வாறு தெரிவித்தார் ட்ரம்ப்.



அமெரிக்காவின் 45 ஆவது அதிபராகக் கடந்த ஜனவரி 20 ஆம் திகதி ட்ரம்ப் பதவியேற்றார். தற்போது அவர் அதிபர் பணியில் 100 நாள்களை நிறைவுசெய்துள்ளார். இந்த நிலையில் ரொயிட்டர்ஸ் ஊடகத்துக்கு நேற்றுமுன்தினம் வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"அமெரிக்க அதிபர் பணி மிகவும் எளிமையாக இருக்கும் என்றே நினைத்தேன்.

ஆனால் அந்தப் பணி எவ்வளவு சவாலானது என்பதை இப்போது உணர்கிறேன். கார் செலுத்துவதை மிகவும் விரும்புவேன். நான் நினைத்தால் கூட இப்போது கார் செலுத்த முடியாது.

எனக்குப் பிடித்தவற்றை, தனிப்பட்ட வாழ்க்கையை மிகவும் இழந்துவிட்டேன்.

24 மணி நேர பாதுகாப்பு காரணமாகப் பட்டுப்புழு கூட்டில் இருப்பது போல உணர்கிறேன். இந்த நேரத்தில் எனது பழைய வாழ்க்கையையே விரும்புகிறேன்" என ட்ரம்ப் மேலும் தெரிவித்தார். (ம)

ட

ந்த ான ரிட் ான கெதி ஸ், ந்து, உள் கள் னா ந்து. தக் த்து விட றது (ம)

# மூளையின்றிப் பிறந்த சிசுவின் உடல் உறுப்புக்கள் தானம்



வொஷிங்டன், மே 1

அமெரிக்காவில் மூளையின்றி பிறந்த சிசுவின் உடல் உறுப்புகள் தானம் செய்யப்பட்டன. இந்தச் சம்பவம் உலகை உருக்கும் விதத்தில் அமைந்துள்ளது.

அமெரிக்காவின் ஒக்ல கோமா பகுதியைச் சேர்ந்தவர் ரோய்ஸ். இவரது மனைவி கெரியங். இவர் கர்ப்பமாக இருந்தார். கருவில் வளரும் குழந்தைக்கு ஈவா என பெயரிட்டிருந்தனர். குழந்தை மூளை உருவாகாமல் வளர்வது கடந்த பெப்ரவரி மாதம் தெரிய வந்தது. இருந்தாலும் கருவை அழிக்க கணவன், மனைவி இருவரும் விரும்பவில்லை. தொடர்ந்து வளர்ச்சி அடைந்து மூளையில்லாமல் குழந்தை பிறந்தது. குழந்தை சில மணிநேரம் மட்டுமே உயிர் வாழும்என்று தெரிவிக்கப்பட்டதைஅடுத்து அதன் உறுப்புக்கள் தானம் செய்யப்பட்டன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் மாதிரிகளின் அசைவுகள்

*"2016 ஆம் ஆண்டு மற்றும் 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அசைவுகள் மாதங்களிடையேயான சுட்டெண்ணின் வீத மாற்றங்கள் மற்றும் வருடத்தின் மீதான பணவீக்க வீதங்களின் மாறுதல் என்பவற்றின் ஒப்பீட்டு ரீதியான வெளிப்பாடாக தரப்பட்டுள்ளது."*

**தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2013 = 100)**

| வருடம் | மாதம் | சுட்டெண் | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் மாற்றம் % | வருடத்தின் மீது வருடம் பணவீக்கம் % |
|---|---|---|---|---|
| 2016 | மார்ச் | 110.0 | -0.7 | 2.2 |
| | ஏப்ரல் | 111.6 | 1.5 | 4.3 |
| | மே | 113.7 | 1.9 | 5.3 |
| | யூன் | 116.1 | 2.1 | 6.4 |
| | யூலை | 115.2 | -0.8 | 5.8 |
| | ஓகஸ்ட் | 113.3 | -1.6 | 4.5 |
| | செப்ரெம்பர் | 113.5 | 0.2 | 4.7 |
| | ஒக்ரோபர் | 114.7 | 1.1 | 5.0 |
| | நவம்பர் | 116.6 | 1.7 | 4.1 |
| | டிசம்பர் | 118.0 | 1.2 | 4.2 |
| 2017 | ஜனவரி | 119.3 | 1.1 | 6.5 |
| | பெப்ரவரி | 119.9 | 0.5 | 8.2 |
| | மார்ச் | 119.5 | -0.3 | 8.6 |

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் மாதம் மீதான மாத மாற்றங்கள் என்ற வகையிலே ஒப்பிடும் போது 2017 பெப்ரவரி மாதத்தில் பதிவாகிய தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் 119.9 ஆக இருந்து 2017 மார்ச் மாதத்தில் 119.5 ஆக குறைந்துள்ளது.
இதனை பெப்ரவரி மாதத்துடன் ஒப்பிட்டு நோக்கும் போது 0.4 சுட்டெண் புள்ளி மாற்றம் மற்றும் 0.3 சதவீதக் குறைவு என்பவற்றை வெளிக்காட்டியுள்ளது. இந்த மாதாந்த மாற்றத்துக்கான காரணங்களாக உணவுப்பொருள்களின் செலவுப்பெறுமதியானது 0.38 வீதத்தினால் குறைந்துகொண்டுள்ள மற்றும் உணவல்லாப் பொருள்களின் செலவுப்பெறுமதியானது 0.03 வீதத்தால் அதிகரித்துக்கொண்டுள்ளதான தன்மைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## நுட்பம்



# நொக்கியா அதிதிறன் பேசி கருவிகள் சந்தைக்கு

### எச்.எம்.டி குளோபல் தகவல் வெளியீடு

நொக்கியா அதிதிறன் பேசிக்கான கருவிகளை சந்தைக்கு அறிமுகம் செய்வது தொடர்பிலான தகவலை பின்லாந்து நாட்டின் எச்.எம்.டி குளோபல் நிறுவனம் அண்மையில் வெளியிட்டுள்ளது.
ஆறு மாதங்களுக்கு முன்பதாக நொக்கியா, எச். எம்.டி. குளோபல் நிறுவனங்களுக்கிடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தைத் தொடர்ந்தே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.
இதன்படி எதிர்வரும் பத்து ஆண்டுகளுக்கு நொக்கியாவின் வர்த்தக நாமத்தை பயன்படுத்துவதற்கும் கைபேசிகளை தயாரிப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது தவிர முன்னைய நொக்கியா கருவிகள் கொண்டிருந்ததான அதே தரத்தை புதிய கருவிகள் கொண்டிருக்குமெனவும் இதற்காகவே பழைய ஊழியர்களை பணியில் அமர்த்தியுள்ளதாகவும், தயாரிப்பு மற்றும் விற்பனை உரிமத்தை எச்.எம்.டி குளோபல் நிறுவனம் பெற்றுக்கொண்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.
மேலும் வெளியாகவுள்ள புதிய கருவிகளில் புதுமை, தரம் மற்றும் அனுபவம் குறித்து அதிக கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும் எச்.எம்.டி நிறுவனம் தெரிவித்துள்ளது.
அத்துடன் இவ்வாண்டு நடைபெறவுள்ள சர்வதேச மொபைல் காங்கிரஸ் விழாவில் புதிய கருவிகளை அறிமுகம் செய்ய எச்.எம்.டி நிறுவனம் தீர்மானித்துள்ளதாகவும் தெரிய வருகிறது. இந்த நிலையிலே புதிய கருவிகளின் வெளியீடு குறித்த எதிர்பார்ப்பு பன்மடங்கு அதிகரித்திருக்கிறது.

# இலங்கை வங்கி 'சுவசக்தி' கடன் வழங்கல் சேவையை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்தது



10 மில்லியன் வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல் என்ற அரசின் முயற்சிக்கு அமைவாக இலங்கை வங்கி அதன் கிளைவலையமைப்புக்கு ஊடான 'சுவ சக்தி' கடன் வழங்கும் சேவையை அண்மையில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துள்ளதாக. தெரிவிக்கப்படுகின்றது.
இதன்பிரகாரம் இலங்கை வங்கியின் தலைவர் றொனால்ட் சி. பெரேராவின் அனுசரணையுடன் பொது முகாமையாளர் டி.எம் குணசேகர், பிரதிப் பொது முகாமையாளர் சி. அமரசிங்க மற்றும் கூட்டாண்மை உறுப்பினர்கள், நிறைவேற்று முகாமைத்துவ உறுப்பினர்கள் ஆகியோரின் பங்களிப்புடன் வங்கியின் கிளைகளுக்கு ஊடான 'சுவசக்தி' கடன்களை வழங்கும் திட்டம் இடம்பெற்றது.
குறிப்பாக இலங்கை மத்திய வங்கி, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சுடன் இணைந்து நாட்டில் தொழில் முயற்சிகளையும், வேலைவாய்ப்புக்களையும் முன்னின்று செய்தல் என்ற நோக்கத்தின் வெளிப்பாடாக 'சுவசக்தி' கடன் திட்டத்தை வடிவமைத்துள்ளமை நோக்கத்தக்கது.
தவிர இந்த நிகழ்வை முன்னிட்டு தகுதியுள்ள இலங்கை வங்கி வாடிக்கையாளர்களுக்கும் அன்றைய தினம் நிதி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வணிகம்



மன்னார் மாவட்ட மக்கள் வங்கிக் கிளையின் மகளிர் தின நிகழ்வுகள் வங்கியின் முகாமையாளர் கமலநாதன் பிரதீப் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் மன்னார் அரச வைத்தியசாலையின் அத்தியட்சகர் திருமதி அன்ரன் சிசில் முதன்மை விருந்தினராகவும், மன்னார் மாவட்ட கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ். சுகந்தி, உதவி பிரதேச செயலாளர் எஸ். கமலாம்பிகை ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கான நினைவுப் பரிசில்களை மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் திருமதி சிவா சிவக்கொழுந்து வழங்கி வைத்தார்.

# மத்திய வங்கிக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை நிதியமைச்சர் தன்வயப்படுத்த முயற்சி

### நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவிப்பு

அரசமைப்பின் ஊடாக மத்திய வங்கிக்கு வழங்கப்பட்டுள்ளதான அதிகாரத்தை நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தன்வயப்படுத்த முற்படுவதான கருத்து நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தனவால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
அத்துடன் இந்தச் செயற்பாடுகள் என்பது நாடாளுமன்ற அதிகாரத்தை கையகப்படுத்த முயற்சிப்பதற்குசமனானகைங்கரியமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
"மத்திய வங்கியின் அதிகாரங்களை நாணயக் கட்டுப்பாட்டுச் சபைவரைவின் ஊடாக தமது அதிகாரத்தின் கீழாகக் கொண்டு வந்து புலம்பெயர்ந்துள்ள புலி ஆதரவாளர்களின் முதலீட்டை நாட்டுக்குள் கொண்டு வர நிதி அமைச்சர் முயற்சிக்கிறார். மத்திய வங்கியின் கட்டுப்பாடின்றி நாட்டிற்குள் முதலீடுகளை கொண்டுவரும் புலி ஆதரவாளர்கள் நாட்டின் பொருளாதாரத்தை கையகப்படுத்துவதான அபாயம் காணப்படுகிறது"
-என்றார்



தவிர, நாட்டின் பொருளாதாரத்தை புலம்பெயர் விடுதலைப்புலி ஆதரவாளர்களது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதான முயற்சியாகவே நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவின் செயற்பாடுகள் அமைந்துள்ளதாக மஹிந்த அணியும் குற்றஞ்சாட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமே மே தின குறிக்கோள்



தேவிபரமலிங்கம்

'உலக தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்' என்னும் கோரிக்கைக் கோசம் 130. ஆண்டுகளைத் தாண்டியும் உரத்துக் கேட்டுக் கொண்டே இருக்கிறது.

எட்டு மணிநேர வேலையை வென்றெடுத்து 128 ஆண்டுகள் ஓடி மறைகின்றன. எனினும் எத்தனை இடங்களில் இன்னமும் தொழிலாளர்கள் எட்டு மணித்தியாலங்களுக்கு மேலாகவும் வேலை வாங்கப்படுகிறார்கள்.

எமது குடாநாட்டில் பெண் தொழிலாளர்கள் கண்மூடித்தனமாக அவ்விதம் வேலை வாங்கப்படுவதுடன் வேதனங்களும் மிகக்குறைவாகவே வழங்கப்பட்டு வருவது ஒன்றும் புதுமை இல்லை.

நாளொன்றுக்கு 18 மணி நேரங்களுக்கும் மேலாகத் தொழிலாளர்கள் மிருகத் தனமாக வேலை வாங்கப்பட்டதை எதிர்த்து எட்டு மணி நேரம் வேலை. எட்டு மணி நேரம். ஓய்வு எட்டு மணி நேரம் உறக்கம் என்னும் மார்க்கத்தை வென்றெடுப்பதற்கு 1886 ஆம் ஆண்டு அமெரிக்க சிக்காக்கோ நகரில் தொழிலாளர் போராட்டம் தொடங்கினர்.

**1885இல் அத்திபாரம்**

அவ்விதம் 1886இல் ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்தை நெறிப்படுத்தும் விதமாக 1885ஆம் ஆண்டே பாட்டாளி வர்க்கத்தினரிடையே அமெரிக்காவில் சுற்றறிக்கை ஒன்றில் போராட்டம் சம்பந்தமான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு அடி கோலப்பட்டும் இருந்தது.

அதன்படி 1886ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி அமெரிக்க நாடு தழுவிய அளவில் பொது வேலை நிறுத்தம் ஒன்றை ஒன்றுபட்ட தொழிலாளர்கள் முழுமையாக முன்னெடுத்தனர்.

அவ்வகையில் இந்த வருடம் மே தினத்தின் வயது 132 என்றும் நினைவு கூரலாம். ஆயினும்1889 ஆம் ஆண்டு பிரட்றிக் ஏங்கல்ஸ் தலைமையிலான இரண்டாவது தேசிய ஸ்தாபக மகாநாட்டில் வைத்தே மே தினம் எனத் தொழிலாளர் தினத்துக்கு பெயர் வழங்கப்பட்டது. அதனால் இந்த வருடம் 128ஆவது ஆண்டை மே தினம் எட்டிப் பிடித்துள்ளது.

ஆயினும் என்ன 90 சதவீத பலத்தைத் தன்னகத்தே கொண்ட பாட்டாளி வர்க்கம் இன்னமும் தலைதூக்க முடியாத அளவுக்கு 10 வீதமேயான முதலாளித்துவ சக்தி உலகைத் தன்னகத்தே கட்டிப் போட்டு வைத்துள்ள நிலைமைதான் வியாபித்து வளர்ந்து வருகிறது.

**குருதி வெள்ளம் பாய்ந்தது!**

1886 ஆம் ஆண்டு மே மாதம் 1ஆம் திகதி பாட்டாளிவர்க்கத்தினரால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தை அமெரிக்க முதலாளி வர்க்கம் அரச கூலிப்படைகளின் துணை கொண்டு மிலேச்சத்தனமாக முறியடித்தது.

தொழிலாளர்கள் கிளர்ச்சியாளர்களது கேந்திர மையமாக விளங்கிய அமெரிக்க சிக்காகோ நகரில் மட்டும் 30 ஆயிரம் தொழிலாளர்கள் வீதிகளில் இறங்கிப் போராடினர்.

அவர்களுக்கு எதிரிக நீட்டப்பட்ட ஆளும் வர்க்கத்தின் காவல் படையான பொலிஸாரின் துப்பக்கிச்சூடுகளில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இரத்தம் சிந்தி வீதிகளில் வீழ்ந்து மரணம் அடையவும் கூடிற்று.

அதன் விளைவாக சிக்காக்கோ நகர வீதிகளில் இரத்த வெள்ளம் பாய்ந்து ஓடியது பொலிஸாரது நடவடிக்கைகளுக்கு எதிராகக் கிளர்ச்சியாளர்களும் நடவடிக்கை மேற்கொண்டதால் கூலிப்படைத் தரப்பில் உயிரிழப்புகள் தோன்றின.

அதனைச்சந்தர்ப்பமாகப் பயன்படுத்திய அடக்குமுறையாளர்கள் ஆயிரக்கணக்கில் கிளர்ச்சியாளர்களையும், தொழிளாளர்களையும் சிறையில் பூட்டிப் பழி தீர்த்தனர். ஆயினும் முன்னெடுத்த போராட்டத்தில் சளைக்காமல் தொழிலாளர் இழப்புகளின் மத்தியிலும் முன்னேறிக் கொண்டிருந்ததை அவதானித்ததுடன்.

தாக்குப்பிடிக்கவும் முடியாமல் போன அடக்குமுறை வர்க்கம் முதன் முதலாக அடிபண்ணிந்த வரலாற்றுத் தினமே மே தினம் மலரக் காரணமாயிற்று.

**மீண்ட பாட்டாளி வர்க்கம்!**

முற்போக்குச் சிந்தனைகளுடன் சகல விதமான அடக்கு முறைகளையும் அழித்தொழித்து முழுச்சமுதாயத்தையும் முன்னேற்றகரமான வழிக்கு அழைத்துச் செல்லும் நோக்குடன் 1871 ஆம் ஆண்டு உடமைகள் இல்லாதவர்களின் பெயரில் அதிகாரத்தைக் கைப்பற்ற முதன்முதலாக பரிஸ் பாட்டாளிவர்க்கம் துணிந்தது. அவ்வாறு தமது முற்போக்குப் பார்வையை முன்வைத்து பிரபலமான பாரிஸ் கம்யூன் பிற்போக்குச் சிந்தனை கொண்ட பிரான்ஸ் பூருசிய துப்பாக்கிப் படைகளால் நிர்மூலம் செய்யப்பட்டும் இருந்தது.

1878 ஆம் ஆண்டில் கடுமையான சட்டங்களைப் பிறப்பித்த அடக்குமுறையாளர்களின் கெடுபிடிகளால் புரட்சிகரக் கட்சி சட்ட விரோதமாக இயங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுப் போயும் இருந்தது.

பரிசில் அவ்வாறு சுடர்விட்ட சுவாலை முற்றாக அணைக்கப்பட்டது போன்று சிறிது காலம் இருந்து திடீரென எதிர்பாராத கோணங்களில் புதிய நோக்குடைய புரட்சிகரக் குமுறல்கள் கிளம்பி வெடித்தன.

அதன் அடிச்சுவடே வட அமெரிக்காவில் கைத்தொழில் மிகுந்த நகரங்களில் ஒன்றான சிக்காகோர் நகரில் 1886 இல் முகிழ்ந்த பாட்டாளி வர்க்கத் தொழிலாளர்களது போராட்டமாகும்.

அந்தப் போராட்டத்தை நடத்திய தொழிலாளர்கள் அமெரிக்கர்களாக இருக்கவில்லை. ஜேர்மனி, பிரான்ஸ், அயர்லாந்து, ரஷ்யா, போலந்து, பொகிமியா பெருமளவில் கலந்து கொண்டிருந்தனர்.

**படிப்பறிவு இல்லாதோர்!**

அந்நிய மண்ணில் போராட்டம் நடத்துவதன் மூலம் உயிர் வாழ்வதற்குத் தள்ளப்பட்டவர்களில் பெரும்பாலானோர் படிப்பறிவு இல்லாத விவசாயிகளாக இருந்தனர்.

அதனிலும் ஜேர்மனியினர்களே அதிகமாகப் பங்கெடுத்து இருந்தனர்.

மார்க்ஸ் ஏங்கல்ஸ் போன்ற முதலாவது பன்னாட்டுத் தொடர்பு கொண்டிருந்த தத்துவஞானிகளது புதிய தீவிர வாதத் தலைமைத்துவம் ஜேர்மனியில் இருந்து வந்தவர்கள் மத்தியில் தோன்றி இருந்தது.

தொழிலாளர்களின் பலவீனங்களைத் தமக்கு வசதியாக்கும் உபாயங்களால் சீர்குழைத்து வந்ததாலே இன்னமும் அதிகூடிய தொகையைக் கொண்டிருக்கும் தொழிலாள வர்க்கம் மேலெழ முடியாமல் இருந்தும் வருகிறது. தொழிலாளர்களின் மறு மலர்ச்சிக்காக 18 ஆம் நூற்றாண்டில் அமெரிக்க சிக்காகோ நகரில் குருதி ஆற்றில் நீந்திப் பெற்ற உலகத் தொழிலாளர்களின் தோற்றுவிக்க முளைவிட்ட மகா விருட்சத்தின் தோற்றுவாய்க் குறிக்கோளாகும் என்பதை உலகத் தொழிலாளர் அனைவரும் மறந்து விடக்கூடாது.

அதற்கு உறுதுணையாக தீவிர வாதக் குடியரசு வாதியாகத் திகழ்ந்த அமெரிக்கர்கள் தொடர்ச்சியாக முன்னெடுத்த போராட்டத்தின் நிமித்தம் அடக்குமுறையாளர்களை அடிபணிய வைத்துப் பெற்ற வெற்றியை உலகளாவியமட்டில் உழைக்கும் வர்க்கத் தொழிலாளர்கள் அனுபவித்தும் வருகிறார்கள்.

அமெரிக்க சிக்காகோ நகரிலே குருதி சிந்திய போராட்டத்தில் அடைந்த வெற்றியின் தினமாக உலகெங்கும் இன்று 01.05.2017 மே தினம் 128 ஆவது முறையாகவும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதற்கான அத்திபாரம் 131 வருடங்களுக்கு முன்பாகவே இடப்படிப்பட்டிருந்ததை நினைவுகூறலாம்.

உலகத்தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் அரிவாளும் சம்மட்டியும் கரங்களில் ஏந்திய இருபால் தொழிலாளர்களும் வீதிகளில் இறங்கி ஊர்வலங்கள் செய்வதை இன்று பன்னாடும் எங்கணும் பரக்கக் காணலாம்!

**பூஷ்வா மே தினம் காணீர்!**

பாட்டாளி வர்க்கம் குருதி-சிந்திப் பெற்ற தொழிலாளர்களது மே தினத்தை இந்தக் காலங்களில் பூஷ்வாக்களான முதலாளிமார்களும் கொண்டாடும் காரணகாரியங்களைக் கண்டும் காணாமல் இருந்துவர முடியாது.

உண்மைத் தொழிலாளர்கள் அவர்களுக்கே உரிய கூட்டங்களில் கூடி முதலாளித்துவ பூஷ்வாக்களின் வேடமாதிரிகளை அறிந்து கொள்ளாமல் இருக்கவே பெருமெடுப்பில் வட இந்திய, தமிழகத் திரையுலகப் பிரபலங்களைக் கூட்டி வந்து காலிமுக மற்றும் ஜப்பார்க் விகாரமா தேவி பூங்காக்களில் விநோத வேடிக்கைக் கேளிக்கைகளில் ஈடுபடுத்தி வந்துள்ளமைஒன்றும்புதியவிடயங்களில்லை.

இதுவரை காலமும் அதனைப் புரிந்து கொள்ளாமல் சிதறுண்டு போயிருக்கும் தொழிலாளர்கள் விழிப்படைந்து செயற்பட வேண்டிய காலகட்டம் எழுந்துள்ளது. தொழிலாளர்களின் பலவீனங்களைத் தமக்கு வசதியாக்கும் உபாயங்களால் சீர்குழைத்து வந்ததாலே இன்னமும் அதிகூடிய தொகையைக் கொண்டிருக்கும் தொழிலாள வர்க்கம் மேலெழ முடியாமல் இருந்தும் வருகிறது.

தொழிலாளர்களின் மறு மலர்ச்சிக்காக 18 ஆம் நூற்றாண்டில் அமெரிக்க சிக்காகோ நகரில் குருதி ஆற்றில் நீந்திப் பெற்ற உலகத் தொழிலாளர்களின் தோற்றுவிக்க முளைவிட்ட மகா விருட்சத்தின் தோற்றுவாய்க் குறிக்கோளாகும் என்பதை உலகத் தொழிலாளர் அனைவரும் மறந்து விடக்கூடாது.

கார்ல்ஸ்மார்க்ஸ் ஏங்கல்ஸ்ஆகிய ஆரம்பகால தத்துவஞானிகளின் அந்தக்குறிக்கோளை மிக விரைவாக உலகெங்கும் ஏற்படுத்த மேதினமான இன்றே ஒன்றிணையும் உலகத் தொழிலாளர்கள் அனைவரிடமும் அறைகூவல் விடப்படுகிறது உலகத் தொழிலாளர்களே ஒன்று படுங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## முன்னாள் தளபதி பொன்சேகாவுக்கு மீண்டும் பொறுப்பான இராணுவ பதவி?

முப்படைகளின் தளபதியாக இரண்டு ஆண்டுகாலத்துக்குப் பதவி வகிக்க பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா நியமிக்கப்படலாம் என்று வந்துள்ள செய்தியானது அரசியல் மட்டத்திலும் பொது மக்கள் மட்டத்திலும் பல்வேறு கருத்து வெளிப்பாடுகளுக்குக் காரணமாகியுள்ளன.

ஈழப் போரை இராணுவத் தளபதியாக முன்னின்று நடத்தி வெற்றி பெற்றவரான பொன்சேகா உலகின் மிகச் சிறந்த இராணுவத் தளபதியென்று கடந்த ஆட்சியாளர்களால் வாயாரப் புகழப் பெற்றவர். பிறகு அவர்களாலேயே மிகக் கேவலமாக நடத்தப்பட்டு அவமானப்படுத்தப்பட்டவர் அவர். அவசர அவசரமாக நடத்தப்பட்ட இராணுவ நீதிமன்ற விசாரணையொன்றின்பின்னர்ஒருசாதாரணகுற்றவாளியைப் போல் படையினரால் தரதரவென்று இழுத்துக் செல்லப்பட்டுச்சிறையில்அடைக்கப்பட்டவ்ர். அவ்வாறானஒருவர்மீண்டும் படைத் தளபதியாக அல்லது சகல அதிகாரங்களும் கொண்டமுழுநிலைதளபதியாக நியமனம்பெற்றால் தங்கள் நிலை என்ன ஆகும் என்பது பற்றி முன்னைய ஆட்சியாளர்களும்அந்தக்காலத்தில்உயர்பதவிகளில்அமர்ந்திருந்தவர்களும் இப்போது கவலை கொள்ளாமல் இருக்க முடியாது. நிச்சயம் அவ்வாறுஆனவர்களின்வயிற்றில்புளிகரையத்தான்செய்யும்.

"அரச தலைவர், அமைச்சரவைக் கூட்டத்தில் இவ்வாறான ஒருபதவியை ஏற்று சமூக சேவைகள் சிதறுவதைத் தடுக்கும் வகையில் சேவையாற்றமுடியுமா? என்று பகிடியாகவே கேட்டார்.ஆனால்அதைஅவர்ஆலோசனையாகவோதீர்மானமாகவோ முன்வைக்கவில்லை" என்று அமைச்சர்கள் சிலர் மறுத்திருக்கிறார்கள். குறிப்பாகசமூகவலுவூட்டல்மற்றும்சமூகநலஅமைச்சர் இதுபற்றிக் கூறுகையில், அரச தலைவர் பகிடியாகத்தான் இதைக் குறிப்பிட்டார். அவர் அதில் அழுத்தம் ஏதும் பிரயோகிக்கவில்லை என்றார். கடந்த வியாழனன்று பத்திகையாளர் மாகாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளரான ராஜித சேனாரட்ணகுறிப்பிடுகையில்; பீல்ட் மார்ஷல்சரத் பொன்சேகாவிடம் அமைச்சர் பதவியைத் துறந்து விட்டு முப்படைகளின் தளபதியாக இரண்டு ஆண்டுகள் பதவி வகித்து நாட்டை ஒழுங்கு நிலைக்குக் கொண்டு வருவீர்களா? என்று கேட்டார். பொன்சேகா ஒழுங்கு முறைகளுக்குப் பேர்போன பிரமுகர். நாட்டைஎதிர்கொண்டுள்ளபலசிக்கல்களைபுலனாய்வுசெய்வதை அவரால் துரிதப்படுத்த முடியும் என்று அரச தலைவர் தெரிவித்தார்என்றார். அவ்வாறானபதவியொன்றைஏற்படுத்துவதானால் நாடாளுமன்றத்தில் சிறப்பு சட்டமொன்றை நிறைவேற்ற வேண்டி இருக்கும் என்றும் அமைச்சர் ராஜித சேனாரட்ண மேலும் தெரிவித்தார். அமைச்சர் விஜித் விஜயமுனிசொய்சாகூறுகையில்அரசதலைவரின்இந்தக்கோரிக்கை பாரதூரமானதாகக் கருதப்பட வேண்டும் நாட்டின் அபிவிருத்தியைக் குலைப்பதில் பல மறைமுக சக்திகள் செயற்பட்டு வருகின்றன. அவைகளைக் கட்டுப்படுத்த சிறப்புப் படைகள் இருக்கவேண்டும்"என்றார். முன்னாள்தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை மீண்டும் இராணுவத்துக்குள் கொண்டு வருவதைப் பலசமூக அமைப்புகளும் அரச மருத்து வர்கள் உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் பலவும் எதிர்த்துள்ளன.

பொதுவில் நாட்டின் அடிக்கடி ஏற்படும் வேலைநிறுத்தங்கள் மற்றும் பொதுச் சேவைகளில் ஏற்படும் தடங்கல்களை சீராக்குவதற்கான பொறிமுறையொன்றை முன்னாள் தளபதியின் தலைமையில்உருவாக்குவது குறித்தே அரசதலைவர் அக்கறை கொண்டிருப்பதாக மீன்பிடி மற்றும் நீர்வள அபிவிருத்தி அமைச்சர் மகிந்தசமரவீர தெரிவித்துள்ளதுடன்பத்திரிகைகள் தவறாகச்செய்திகளைப்பிரசுரித்துள்ளனவென்றும்தெரிவித்துள்ளார். அதே சமயம் அத்தியாவசிய சேவைகள் சீர்குலையாமல்இருக்கும்வகையில்சேவையாற்ற அரசதலைவர் விரும்புகிறார். அந்தப் பொறுப்பு எனக்கு வழங்கப்படுமானால் அவரது விருப்பத்தை நான் முழுமையாக நிறைவேற்றத் தயாராய்இருக்கிறேன்என்று பீல்ட் மார்ஷல்சரத்பொன்சேகா கூறியதும் தெரியவந்துள்ளது.

தென்னிலங்கையில்இப்போதைய அரசைக்கவிழ்க்கப்போவதாகவும் அதற்கான காலக்கெடு குறிப்பிட்டும் அரசியல் மட்டத்தில் சவால்கள் விடுக்கப்பட்டு வருகின்றன. இந்தச் சவால்களைஎதிர்த்தரப்பினர் எவ்வாறு நிறைவேற்றப் போகிறார்கள் என்பதுவிளக்கமாகஇல்லை. தேர்தல்எதுவும்இப்போதைக்கு இடம்பெறுவதாகவும் இல்லை. எனவே கூட்டு எதிர்க் கட்சியினரின் உசுப் பேற்றலில் ஊக்கமடைந்துள்ள சக்திகள் அரசுக்கு எதிராகக் கிளர்ச்சிகளை நடத்தி அவைகளை விரிவாக்கி ஆட்சிக் கவிழ்ப்புக்கு திட்டமிடப்பட்டிருப்பின் அதனை எதிர்கொள்ள தாம் தயாராய் இருக்கிறார் என்பதை வெளிப்படுத்துவதே சரத் பொன்சேகாவுக்கு இராணுவ மட்டத்திலான ஒரு பொறுப்பை வழங்க அரச தலைவர் யோசிக்கிறார் என்பதையும் இது எடுத்துக் காட்டுவதாக இருக்க முடியும்.



# வடக்கு ஆளுநரது கருத்து யதார்த்தமானது தானா?

சேரலாதன்

"யாழ். மாவட்டத்தில் அரசியல்வாதிகள் எத்தனையோபேர் உள்ள போதிலும் இங்குள்ள மக்கள் தமது கோரிக்கைகளுடன் என்னிடமே வருகின்றனர்" இவ்வாறு கூறியிருப்பவர் வேறுயாருமல்லர். வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரேயே அவராவர். ஆளுநரின் இந்தக் கருத்தை நாம் சாதாரணமாகக் கருதிவிட முடியாது.

### வடக்கு மக்களுக்குப் பிரச்சினைகளோ ஏராளம்

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களைப்பொறுத்தவரையில்தினமும் அவர்கள் ஏராள்மான, பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். வலிகாமம் வடக்கில் இருந்து சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னர் இடம் பெயர்ந்த மக்களில் கணிசமான தொகையினர் இன்னமும் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர முடியாத நிலையில் காணப்படுகின்றனர். இவர்களுக்குச் சொந்தமான காணிகளைப் படையினர் அடாத்தாகப் பிடித்து வைத்திருக்கின்றனர். இவற்றை விடுவிப்பதற்கு அரசால் முடியவில்லைஎன்றுசொல்லிக்கொள்வது வெட்கக்கேடானது.

இதே நிலைதான் முல்லைத்தீவு மாவட்டத்திலும் காணப்படுகின்றது. கேப்பாப்பிலவு மக்கள்தமது காணிகளை விடுவிக்குமாறு கோரிப் போராட்டத்தில் ஈடுபட ஆரம்பித்து இரண்டு மாதங்களாகின்றன. ஆனால் அவர்களது கோரிக்கை நிறைவேறுவதற்கான எந்தவித அறிகுறியையும் காண முடியவில்லை.

### பூதாகரமாகப் பயமுறுத்தும் குடிதண்ணீர்ப் பிரச்சினை

குடாநாட்டின் குடிதண்ணீர்ப் பிரச்சினை பூதாகாரமாக எழுந்து நிற்கின்றது. இதன் தீவிரத்தன்மையை இங்குள்ள அரசியல்தலைவர்கள் எவரும்புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கடல்நீரைக் குடிதண்ணீராக மாற்றுவதன் மூலமாகக் குடாநாட்டு மக்களின் குடிதண்ணீர்த்தேவையைப்பூர்த்திசெய்ய முடியுமெனத் தெரிவித்ததாக சில ஊடகங்களில் செய்தியொன்று வெளியாகியிருந்தது. இது குடாநாட்டு மக்களுக்கொரு மகிழ்ச்சியான செய்தியாகும். ஆனால் அது நிலைக்கவில்லை.

கடல்நீரை நன்னீராக்கும் மருதங்கேணித் திட்டத்துக்கு அனுமதி வழங்க முடியாது. குடா நாட்டின் குடிதண்ணீர்த் தேவையை நிறைவேற்றுவதற்கு மாற்றுவழியைத் தேடுங்கள் என கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார். ஆனால் மாற்றுவழி தொடர்பாக அவர் எதையும் தெரிவிக்கவில்லை. அரசியல்வாதிகள் தமது வசதிக்கு ஏற்றவாறு எதையாவது கூறிவிட்டுச் சென்றுவிடுகின்றனர். ஆனால் மக்கள் தர்ம சங்கடமான நிலைக்குத் தள்ளப்பட்டு விடுகின்றனர். வேலை தேடும் பட்டதாரிகளின் போராட்டமும் தீர்வு எதுவுமின்றித் தொடருகின்றது. இவர்களின்கோரிக்கை நியாயமானது. ஆனால் அதற்கான தீர்வு கிடைப்பதில்தான் தாமதம் ஏற்படுகின்றது. காணாமற்போனவர்களின் பிரச்சினையும் நீண்ட நாள்களாக இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது. காணாமற்போனவர்களின் உறவுகள் தமது உறவுகளைத் தேடிக் கலைத்துப்போன நிலையில் செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர். இவற்றையெல்லாம் விட வேறுபல பிரச்சினைகளும் இங்கு காணப்படுகின்றன. இவற்றுக்கெல்லாம் சாதாரண மனிதர்களால் தீர்வு காண முடியாது. அரசியல்வாதிகளின் தயவையே அவர்கள் நாடவேண்டியுள்ளது. இந்தநாட்டைப்பொறுத்தவரையில் அரசியல்வாதிகளின் தயவு இருந்தால் மட்டுமே எதனையும் சாதித்துக் கொள்ள முடியுமென்ற நிலையொன்று காணப்படுகின்றது. இது குடாநாட்டு மக்களுக்கும் விதி விலக்கான ஒன்றல்ல.

### மக்களது பிரச்சினைக்கு தீர்வு காணும் பொறுப்பு எவர் கைகளில்?

யாழ். குடாநாட்டில் நாடாளுமன்றஉறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் எனப் பல மக்கள் பிரதிநிதிகள் உள்ளனர். மாகாண சபைகளை நாட்டின் பொருளாதாரத்தை நலிவுபடுத்துகின்ற வெள்ளை யானைக்கு ஒப்பிடுவார்கள். இலங்கை போன்ற சிறியதொரு நாட்டில் மாகாணசபைகளை அமைக்க வேண்டியதேவையும்இல்லை. வடக்கு மாகாணசபையும் வடக்கு மக்களைப் பொறுத்தவரையில் வெள்ளை யானையாகவே கருதப்படுகின்றது. மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுகின்ற வகையில் அதன் வினைத்திறன் அமைந்திருக்கவில்லை. பெரிதாகச் சாதிப்பாரென எதிர்பார்க்கப்பட்ட வடக்கு மாகாண முதலமைச்சராலும் மாகாணசபையை வினைத்திறனுடன் நடத்திச்செல்ல முடியவில்லை. தீர்மானங்களை நிறைவேற்றி அடுக்கி வைப்பதும், மாகாணசபை அமர்வுகளின்போது தேவையற்ற தர்க்கங்களில் ஈடுபடுவதுமே பல மாகாணசபை உறுப்பினர்களது செயற்பாடுகளாகிவிட்டன. குடாநாட்டு மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் இந்த உறுப்பினர்களின் கண்களுக்குத் தெரிவதாகத் தோன்றவில்லை. நிலத்தடிநீரில் ஒயில் கலந்து மக்களை இன்னலில் தள்ளிவிட்ட கழிவு ஒயில் பிரச்சினையைக் கூடச் சரியாகக்கையாண்டு மக்களின் இன்னல்களைக் களைவதற்குக் கூட நாதியற்ற நிலையில் மாகாணசபை உறுப்பினர்கள் காணப்படுகின்றனர். இந்த நிலையில் மக்கள் இவர்களை அணுகினால் தமக்கு ஏதாவது நன்மை கிடைக்குமென எண்ணுவார்களா? சில மாகாணசபை உறுப்பினர்களின் தான்தோன்றித்தனமான, சுய நலம்கலந்த செயற்பாடுகளும் மக்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்திவிட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கூட மக்களின் பிரச்சினைகளைக்கண்டுகொள்ளாதுதேவையற்ற குதர்க்கமான செயற்பாடுகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்கின்றனர். இதனால் தமிழர்களின் ஒற்றுமைக்கும் வேட்டு வைக்கப்படுகின்றது. இவர்களை அணுகுவதற்கும் மக்கள் தயங்கி நிற்கின்றனர்.

இந்த நிலையில்தான் அரசின் பிரதிநிதிஎன்றவகையில் மக்கள் ஆளுநரை நாடிச் செல்கின்றனர். இதைத்தான் ஆளுநரும் மனம் திறந்து கூறியிருக்கிறார். இந்த நிலை தொடருவது தமிழர்களுக்குப் பெருமை சேர்க்குமா? என்பதைத் தமிழ் அரசியல்வாதிகள்ஒருகணம்சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ வந்தியத்தேவர்



# நெடுந்தீவு படகுச் சேவை சிரமமோ சிரமம் என்ற நிலையில்!

காற்றுக்காலம் தொடங்கவுள்ளதால் நெடுந்தீவு மக்கள் குமுதினிப்படகு எப்போது சேவையில் ஈடுபடுத்தப்படும் என்ற ஏக்கத்தில் உள்ளனர். கொந்தளிக்கும் நெடுந்தீவுக் கடலுக்கு ஈடுகொடுக்கக் கூடிய தகுதி குமுதினிப் படகுக்கு மட்டுமே உண்டு என்பது அனைவரது ஒருமித்த கருத்தாகும். திருத்த வேலைகளுக்காக ஊர்காவற்றுறையில் நங்கூரமிட்டு நிற்கும் இந்தப் படகு, இன்னமும் ஒரு வார காலத்தில் சேவைக்குத் திரும்பும் எனத் தெரிகின்றது. இப்போது சேவையில் உள்ள வடதாரகை ஒரு வார கால மாக பழுதடைந்து குறிகாட்டுவானில் துறைமுகப் பாலத்தில் நிறுத்தப்பட்டுள்ளதால், நெடுந்தாரகையில் வரும் பயணிகள் வடதாரகை வழியாகவே துறைமுகத்தில் இறங்கவேண்டிய நிலை உள்ளது. வடதாரகையைத் துறைமுகத்தில் இருந்து வெளியே கொண்டு சென்று வேறு ஒரு பகுதியில் நங்கூரமிடலாம்.

நெடுந்தீவுத் துறைமுகத்தில் இருந்து வரும் பயணிகள் படகுக்கு, குறி காட்டுவான் இறங்குதுறையில் வசதியாக நிறுத்த வழிவகைகள் செய்து கொடுக்கப்பட வேண்டும் . சிறுவர்கள், நோயாளர்கள், முதியவர்கள், மூட்டை, முடிச்சுக்களுடன் வருபவர்கள் என்று வரும் பயணிகள் படகில் இருந்து இறங்குவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள நேர்கிறது. இருப்பினும் இது நெடுந்தீவு மக்களுக்கு சாதாரணமான தொன்றாகவே தென்படுகின்றது. இந்த விடயம் குறித்துப் பல தடவைகள் சுட்டிக்காட்டப்பட்டபோதிலும் அதிகாரிகள் எவரும் பயணிகளது சிரமத்தைக் கண்டு கொள்வதாக இல்லை.

### பயணிகள் படகுகள் அடிக்கடி பழுதடைவதன் மர்மமென்ன?

இரண்டு மாதங்களாகத் திருத்த வேலைகளுக்காக ஊர்காவற்றுறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் குமுதினிப் படகு உரிய முறையில் தகுதியான பொருள்கள், உதிரிப்பாகங்கள் கொண்டு சிறப்பான விதத்தில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா? என்பதும் கேள்விக்குரியதே. பயணிகளுக்கான இருக்கைகளுக்கு 'குஷன்' சீற்றுகளுக்குப் பதிலாக வெறும் பலகைகள் போடப்பட்டுள்ளன. படகின் உட்புறத்தில் சப்புப் பலகைகள் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிகின்றது. குறிப்பிட்ட சிறிய கால இடைவெளியில், சப்புப் பலகைகள் உழுத்துப் போகமீண்டும் ஒரு முறை திருத்த வேலைக்காகக் குமுதினிப்படகு ஊர்காவற்றுறைக்கு கொண்டு வரப்படவும் இடமுண்டு. ஒவ்வொரு தடவையும் பெருமளவு பணம் செலவு செய்து திருத்த வேலைகள் இடம்பெறுகின்றன. இருந்தும் கடைசியில் உரிய பயனேதும் கிட்டுவதில்லை. தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் இருட்டினில் நீதியை மறைக்க முயலுகிறார்கள் போலும்.

வடதாரகை படகுச் சேவையின் பொறுப்பு எவர் வசமுள்ளது என்பதும் சரியாகத் தெரியவரவில்லை. வீதி அபிவிருத்தி அதிகார சபையினரும், கடற்படையினரும் கயிறு இழுத்தல் போட்டியில் ஈடுபட்டிருப்பதுபோல் தெரிகின்றது. நெடுந்தாரகைக்கான எரிபொருள் தேவைக்குக் கூட பணம் போதாதுள்ளது என்று என்ற பேச்சுக்களும் அடிக்கடி காற்றோடு கலந்து வருகின்றன. நெடுந்தாரகைக்கு பணியாளர்களைத் தெரிவு செய்து பயிற்சியும் வழங்கப்பட்டது. ஆனால் பயிற்சி பெற்ற படகோட்டி ஒருவர் இல்லாமல் அதுவும் சிலகாலம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. என்னதான் நடக்கிறது என்றே புரியவில்லை. புதிய படகுகளோ பழுதடைவதும் சேவை செய்ய முடியாதவாறு நிறுத்தி வைக்கப்படுவதுமாக, சிறுவர்கள் கடுதாசிக் கப்பல் செய்து மழை வெள்ளத்தில் மிதக்க விடுவது போல பெரிய படகுகளைக் கட்டி, நெடுந்தீவு மக்களுடன் அதிகாரிகள் சடுகுடு விளையாட்டில் ஈபட்டுக் கொண்டிருக்கின்றனர் எனக் கருத வேண்டியுள்ளது.

### துறைமுகங்களில் பயணிகள் எதிர்கொள்ளும் கெடுபிடி நிலை


துறைமுகங்களில் படகுகளில் ஏறி இறங்குவதிலும், படகுப் போக்குவரத்திலும் பொதுமக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் இன்னமும் சீரடைவதாக இல்லை. கடந்த காலங்களைவிட நிலமை தற்போது மிகவும் மோசமாகிக் கொண்டிருப்பது போலேயே காணப்படுகின்றது. சுதந்திரமான பயணத்தை மேற்கொண்ட மக்கள் இப்போது அதிகாரத்தில் உள்ளவர்கள் சொற்படியெல்லாம் ஆடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். தலையீடுகள் இல்லாத சுதந்திரமான படகுப் போக்குவரத்தே நெடுந்தீவு மக்களின் தேவை. மனதுக்குள் குமுறிக் கொண்டிருக்கும் தமது உணர்வுகளை வாய்திறந்து கூற மக்கள் தயங்கினாலும் அபிவிருத்திக்கான ஒருங்கிணைப்புக் கூட்டங்களில் இது விடயம் அலசப்படாமல் இல்லை. பயணிகளது இத்தகைய சிரமங்கள் குறித்து மக்கள் பிரதிநிதிகளும், அவர்களைச் சுற்றிக் கொண்டிருக்கும் நெடுந்தீவின் பிரமுகர்கள் எனத் தங்களை கூறிக் கொண்டிருப்பவர்களும் உரிய இடங்களில் பேசி உங்கள் பிரச்சிளையைத் தீர்த்து வைப்போம் என்று உறுதியுரை கூறுவதுடன் எல்லாமே முடிந்துவிடுகிறது.

நெடுந்தீவின் அபிவிருத்திக்கு முதலில் சீரான கடல்வழித் தடம் அமைய வேண்டும். இந்தச் சேவையின் உண்மை நிலையைத் தெரிந்து கொண்டு தடங்கலற்ற, இடையூறுகளற்ற போக்குவரத்து வசதியை உருவாக்க இயலாத நிலையில், நெடுந்தீவின் வீதிகள் சீரமைப்புக்கென மனிதர்கள் பெருமளவில் பயன்படுத்தாத வீதிகள் சீரமைப்புக்கு அறுபது கோடி ஒதுக்கியுள்ளோம் என்று பேசிப் பெருமைப்படுவதில் அர்த்தமில்லை. முதன்மை வீதியே ஓட்டை ஒடிசலாகி பேருந்து போக்குவரத்துக்குக் கூட சீரற்ற நிலையில் இருக்கும்போது, வீதிகளுக்கெல்லாம் நிதி ஒதுக்கி அபிவிருத்தி செய்கிறோம் என்றால், அது அர்த்தம் அற்றதொன்று.

நெடுந்தீவு பிரதேச செயலர் தற்சமயம் வேலணை பிரதேச செயலர் பிரிவிலும் பதில் கடமையாற்ற வேண்டியுள்ளதால், அவரால் வாரத்தில் இரண்டொரு நாள்களே கடமைக்கு வர முடிகிறது. நெடுந்தீவைப் பொறுத்தவரை அப்பகுதியில் சேவையாற்றும் அரச அலுவலர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து கடமையாற்ற வேண்டி இருப்பதால், அதிகாரத்தில் உள்ளவர்கள் பொறுப்புமிக்கவர்களாக இருத்தல் வேண்டும்.

வெறுமனே வாய் வீரம் காட்டி, ஓடி ஒதுங்கும் அரசியல் வாதிகளாலும், மக்களது நலன் குறித்துக் கவலைக்படாத உத்தியோகத்தர்களாலும் எந்தப் பயனும் கிட்டப் போவதில்லை. நெடுந்தீவில் என்ன நடக்கிறது? என்பது புரியாத புதிராகவே தொடரப் போகிறது. கடந்த காலங்களிலும் பார்க்க வளர்ச்சி கண்டிருக்க வேண்டிய பொதுமக்கள் நலன்சார் செயற்பாடுகள் படிப்படியாக வீழ்ச்சியடைந்து போவதற்கு அங்குள்ள மக்களின் எதற்கும் வாய்மூடி மௌனம் காக்கும் போக்கே காரணமாகிவிடும்.





## ஆசிரியருக்கான கடிதம்

### ஊடகங்களது வலிமை உறுதிமிக்கது

மக்கள் நலன்சார் விடயங்கள் போன்றே மக்களது துன்ப, துயரங்கள் குறித்து பொதுமக்கள் மத்தியில் ஓர் உணர்வைத் தூண்டி அவர்களைச் சிந்திக்க வைப்பதில் ஊடகங்களது பங்களிப்பு அதிலும், குறிப்பாக அச்சு ஊடகங்களது பங்களிப்பு அளப்பரியது.

காணாமற்போனோரைக் கண்டறியும் விடயத்தில் தமது பிள்ளைகளை, உறவுகளைத் தொலைத்துவிட்டுத் தவிக்கும் தரப்பினரது வேதனை குறித்து இதுநாள் வரை கிஞ்சித்தும் கவனம் செலுத்தாத சிங்கள அரச இயந்திரம் அவர்களது போராட்டம் குறித்து அக்கறை காட்ட முன்வராதது ஆச்சரியமானதொன்றல்ல.

ஆயினும் தமது உறவுகளைத் தொலைத்துவிட்டு வாடும் அவர் தம் உறவுகளது கவலை, ஏக்கம், கண்ணீர் உணர்வுகளுக்குப் பின்னால் ஒட்டுமொத்த ஈழத் தமிழினமும் ஒன்றிணைந்து தனது அனுதாபங்களை, அரசின் நிலைப்பாடு மீதான தனது அதிருப்தி நிலை ஆத்திரத்தை, அமைதியான முறையில் வெளிப்படுத்தி சிங்கள ஆட்சியாளர்களையும் பன்னாட்டுத் தரப்புகளையும் ஒரு கணமாவது சிந்திக்க வைப்பிக்க வேண்டுமென்ற நோக்கில் ஒழுங்கு செய்யப்பட்ட முழு அடைப்புப் போராட்டத்தில் தமிழ் மக்களை கடந்த 27ஆம் திகதி ஒட்டுமொத்தமாக ஒன்றிணைந்து ஈடுபடத் தூண்டுதல் அளித்ததன் மூலம், ஈழத் தமிழினத்தின் நலனில் உள்ள அக்கறையை வெளிப்படுத்தியமைக்காக ஊடகங்களுக்கு பாராட்டைத் தெரிவித்தேயாக வேண்டும். அந்த வகையில் பத்திரிகா தர்மத்துக்கமைந்த உதயனது பணியும் போற்றுதற்குரியது.

இ.இராசநாயகம்,
புத்தூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** செயலில் தடுமாற்றம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். லாபம் சுமார். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர். உறவினர் வகையில் செலவு ஏற்படும்.

**இடபம்:** சமயோசித புத்தியுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். லாபம் பன்மடங்கு உயரும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வர்.

**மிதுனம்:** உழைப்பில் அதிக நம்பிக்கை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் உள்ள மந்த நிலை சீராகும். லாபம் உயரும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். உடல்நலனில் அக்கறை தேவை.

**கடகம்:** பேச்சு, செயலில் அன்பு நிறைந்திருக்கும். தொழில், வியாபாரம் செழிக்க தேவையான மாற்றம் பின்பற்றுவீர்கள். நிலுவைப் பணம் கிடைக்கும். பெற்றோரின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள்.

**சிங்கம்:** திட்டமிட்ட பணி நிறைவேற விடா முயற்சி தேவைப்படும். நண்பரின் ஆலோசனை நன்மை அளிக்கும். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதுமானது. மிதமான லாபம் கிடைக்கும்.

**கன்னி:** பெற்றோரின் சொல்லுக்கு மரியாதை தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணி நிறைவேறும். எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். மனைவியின் பாசம் நிறைந்த அன்பில் மகிழ்வீர்கள்.

**துலாம்:** கடந்த கால உழைப்பின் பயனைப் பெறுவீர்கள். நன்றி மறந்தவரைக் கூட பெருந்தன்மையுடன் மன்னிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி ஏற்படும். லாபம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** நண்பர்களின் செயல் அதிருப்தியை உருவாக்கலாம். தொழில், வியாபாரத்தில் மூலதனம் தேவைப்படும். லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணிச்சுமையில் இருந்து விடுபடுவர்.

**தனுசு:** உறவினர்களின் அதிருப்தி பேச்சுக்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் வரும். பணியாளர்கள் விரும்பிய இடமாற்றம் கிடைக்கப் பெறுவர்.


**மகரம்:** திட்டமிட்ட செயலை விரைந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த சிரமம் விலகும். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.

**கும்பம்:** சிறு முயற்சி கூட பலமடங்கு நன்மை தரும். தொழில், வியாபாரத்தில் வருமானம் பன்மடங்கு அதிகரிக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெறுவர். நீண்ட நாள் எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**மீனம்:** அறிமுகம் இல்லாதவரிடம் நெருக்கம் வேண்டாம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும். சேமிக்கும் விதத்தில் ஆதாயம் கிடைக்கும். உடல்நலம் சீராக இருக்கும்.

# அஜித்தின் பிறந்த தினத்தில் விவேகம்



வீரம், வேதாளம் படங்களைத் தொடர்ந்து அஜித் நடிப்பில் உருவாகி வரும் படம் விவேகம். அனிருத் படத்துக்கு இசையமைக்கிறார். விவேக் ஓபராய், காஜல் அகர்வால், அக் ஷரா ஹாசன் உள்ளிட்ட பலரும் நடிக்கின்றனர். ஏற்கெனவே இந்தப் படத்தின் முதற்பக்கம் வெளியானது. அதனால் படத்தை ரசிகர்கள் பெரிதும் எதிர்பார்க்கின்றனர்.

இந்நிலையில், இன்று அஜித்தின் பிறந்தநாள் மற்றும் தொழிலாளர் தினம். எனவே, இதனை முன்னிட்டு நேற்று நள்ளிரவு விவேகம் படத்தின் இரண்டாவது பக்கம் மற்றும் பாடல்களின் முன்னோட்டம் வெளியிடப்படும் என்ற தகவல் சமூக வலைதளங்களில் பரவி வந்தன. விவேகம் படத்தின் இரண்டாவது பக்கம் என்றுக்கூறி ஒரு பக்கம் சமூக வலைதளங்களில், தற்போது பரவி வருகிறது. தன்து தோள்பட்டையில், மரம் ஒன்றை தூக்கியபடி அஜித் காட்சியளிக்கிறார். ஆனால், இந்தப் பக்கத்தைப் படக்குழுவினர் அதிகாரப்பூர்வமாக வெளியிடவில்லை. அதனால், பக்கத்தின் அதிகாரப்பூர்வ அறிவிப்புக்காக ரசிகர்கள் காத்திருக்கின்றனர்.

தன் உழைப்பு திருடப்படுவது தெரிந்தும் விடாமல் உழைத்துக் கொண்டிருப்பவர்கள்



தேனியும், விவசாயியும் தான்

நேத்திக்கு நீங்க யாரோ ஒரு அழகான பொண்ணோட சினிமாவுக்கு போனீங்களாமே?



ஆமாம்மா இந்தக் காலத்து படங்கள் எல்லாம் குடும்பத்தோட பாக்கற மாதிரியா இருக்கு?

பனித்துளி @mymindvoice
மணல் வீடு கட்டும் சிறுமியின்
கைகிழிக்கும் கண்ணாடிச் சில்லாய்...
வாழ்வின் சில நியாயமற்ற
தண்டனைகள்

திங்கட்கிழமை காலையில மட்டும் எப்படி தான் தூக்கம் தூக்கமா வருதோ தெரியலையே....




இந்த நோய் எனக்கு மட்டும் தானா?

# சுடோக்கு
## எண் விளையாட்டு

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | 1 | 8 | 9 | 3 | 7 | 2 | 4 |
| 4 | 2 | 8 | 7 | 6 | 5 | 3 | 9 | 1 |
| 3 | 7 | 9 | 2 | 4 | 1 | 8 | 5 | 6 |
| 2 | 8 | 3 | 1 | 7 | 6 | 5 | 4 | 9 |
| 1 | 4 | 6 | 9 | 5 | 8 | 2 | 3 | 7 |
| 5 | 9 | 7 | 3 | 2 | 4 | 6 | 1 | 8 |
| 7 | 6 | 5 | 4 | 3 | 9 | 1 | 8 | 2 |
| 9 | 1 | 2 | 5 | 8 | 7 | 4 | 6 | 3 |
| 8 | 3 | 4 | 6 | 1 | 2 | 9 | 7 | 5 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 4 | | 6 | | | 3 | |
| | | 1 | | 3 | 8 | 4 | 5 | |
| | | | | | 2 | | | 7 |
| 2 | | | 7 | | 5 | | 1 | |
| | | | | 9 | | | | |
| | 3 | | 1 | | 6 | | | 9 |
| 9 | | | 3 | | | | | |
| | 8 | 7 | 6 | 5 | | 2 | | |
| | 4 | | | 7 | | 5 | | |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண் டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறு வனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


``கீதா இருக்காங்களா...?"
``இல்லை... அவ நேற்று இரவு தான் இறந்து போனா..."
``ஓ... கடவுளே....!"
``ஆமா... நீங்க யாருங்க...?"
``கீதாவும் நானும் ஒரு வருடமா நல்ல நண்பர்கள்....
முகநூல் மூலமாத்தான் நண்பரானோம்..
போன வாரந்தான் நேரில் சந்திக்க முடிவெடுத்தோம்.
அதுக்குள்ளே இப்படி ஆகிடுச்சே... ச்சே..."
``என்னது நண்பரா....
இப்படியொரு அழகான பையன் நண்பரா இருக்கிறதா... பாட்டி சொல்லவே இல்லையே..."
``என்னது பாட்டியா...?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்ஷ்டக் கற்கள்

## மரகதம்



மரகதக் கல்லின் ஆங்கிலப் பெயர் எமரால்ட். ஒளி புகக்கூடிய அருகம்புல்லின் நிறமுடைய இக்கல் பெரில் எனப்படும் வகையைச் சேர்ந்தது. வெளிர் பச்சை நிறத்திலிருந்து அடர்பச்சை நிறம் வரை கிடைக்கும். இந்த மரகதம் பெரில்லீயம் அலுமினியம் சிலிகேட் என்ற மூலப் பொருளால் ஆனது.

மரகதம் அடர்த்தி குறைவானதாகவும் எடை இலேசானதாகவும் இருப்பதால் ஒரு காரட் எடையுள்ள மரகதம் சற்று பெரியதாக இருக்கும் இது நொருங்கும் தன்மை கொண்டது என்பதால் இதை உபயோகிப்பதில் கவனம் தேவை. குரோமியம் என்ற பொருள் கல்லில் இருந்தால்தான் அது மரகதக் கல்லாகும். இல்லையெனில் அது பச்சை நிற பெரில் என்றே அழைக்கப்படுகிறது. பச்சை நிற பெரில்லை தகுந்த சூழ்நிலையில் உஷ்ணம் செய்தால் அக்குவாமெரின் எனப்படும் நீலப்பச்சை நிறக் கல்லாக மாறுகிறது. இந்த நிறமாற்றம் நிரந்தரமாக இருக்கும் பட்சத்தில் அது உலக அளவில் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. சாம்பிராணி வாசம் வந்தால் தான் மரகதம் என்ற தவறான கருத்து ஒன்று மக்களிடையே உள்ளது. பச்சை நிறம் உடைய ஒளி ஊடுருவும் தன்மை கொண்ட இரத்தினத்தை மிதுனம், கன்னி ராசி உடையவர்களும், புதன் திசை நடப்பவர்களும், 5,14,23 ம் எண்களில் பிறந்தவர்களும் அணியலாம்.

தங்கம் அல்லது வெள்ளியில் பதித்து மோதிர விரல் அல்லது சுண்டு விரலில் அணிந்து கொள்ளுதல் நல்லது. புதன் கிழமைகளில் காலை 6 மணி முதல் 7 மணிக்குள் அணிவது மிகவும் சிறப்பு.



## வரலாற்றில் இன்றைய தினம்

305 -ரோமப் பேரரசர் பதவியிலிருந்து டயோகிளரியனும் மக்ஸிமியனும் ஓய்வு பெற்றனர்.

1840 -ஒட்டும் தபால் தலைபென்னி பிளாக் முதன் முதலாக ஐக்கிய இராஜ்யத்தில் விநியோகிக்கப்பட்டது.

1844 -உலகின் இரண்டாவதும் ஆசியாவின் முதலாவதுமான நவீன பொலிஸ் என ஹொங்கொங் பொலிஸ் படை நிறுவப்பட்டது.

1851 -லண்டன் பளிங்கு மாளிகையில் பெரியஅளவிலானகண்காட்சிவிக்டோரியா மகாராணியால் தொடங்கி வைக்கப்பட்டது

1884 -அமெரிக்காவில் நாளொன்றுக்கு 8 மணித்தியால வேலை கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

1886 -நாளொன்றுக்கு 8 மணித்தியால வேலை கோரி அமெரிக்கா முழுவதும் பேரணிகள் நடத்தப்பட்டன. இதுவே ஹே சந்தை கலவரம் உருவாகக் காரணமானது. இந்த நினைவாகவே மே 1 பன்னாட்டு தொழிலாளர் தினமாக பல நாடுகளிலும் கொண்டாடப்படுகின்றது.

1900 -அமெரிக்க வரலாற்றில் ஐந்தாவது பெரிய சுரங்க விபத்தான உத்தா ஸ்கோபில்ட் சுரங்க விபத்தில் 200 பேர் கொல்லப்பட்டனர்.

1915 -ஆர்.எம்.எஸ். லூஸ்தேனியா தனது 202 ஆவது பயணமாக நியூயோர்க் நகரிலிருந்து புறப்பட்டு வட அத்திலாந்திக் கடலில் கவிழ்ந்ததில் 1198 உயிர்கள் பறிபோயின.

1929 -ஈரான் துக்மெனியஸ்தானில் 7.2 லிய அளவிலான நிலநடுக்கத்தில் 3800 பேர் வரை உயிரிழந்ததுடன் 1121 பேர் காயமடைந்தனர்.

1930 -குள்ளக் கிரகமான புளூட்டோவுக்கு உத்தியோகபூர்வமாகப் பெயரிடப்பட்டது.

1948 -ஜனநாயக மக்கள் கொரியக் குடியரசு வட கொரியா, கிம் 11 சுங் தலைமையில் உருவாக்கப்பட்டது.

1956 -ஜனஸ்சோல்க்கால் விருத்தியாக்கப்பட்ட போலியோ தடுப்பு மருந்து பொதுமக்கள் பயன்பாட்டுக்குக் கிடைக்கப்பெற்றது.

1961 -கியூபா தலைமை அமைச்சர் பிடல்கஸ்ரோ கியூபா ஒரு சோசலிச நாடென பிரகடனப்படுத்தி தேர்தல்களை நீக்கி விட்டார்.

1977 -தொழிலாளர் தினக் கொண்டாட்டத்தின் போது இஸ்தான்புல் ரக்ஸிம் சதுக்கத்தில் 36 பேர் கொல்லப்பட்டனர்.

1993 -குண்டுத்தாக்குதலில் ஆர். பிரேமதாச உயிரிழந்ததையடுத்து டிங்கிரி பண்டா விஜயதுங்க இலங்கையின் அரச தலைவரானார்.

2003 -யாழ். கோட்டையில் அமைந்த படைத் தளத்துக்கு புலிகள் ஆட்சேபம்: பாதுகாப்புச் செயலருக்குத் தமிழ்ச் செல்வன் கடிதம்.

2009 -சுவீடனில் ஒரே பால் திருமணம் சட்டபூர்வமானது.

2016 -தொழிலாளர் தினத்தை முல்லைத்தீவு மீனவர்கள் கறுப்பு தினமாகக் கடைப்பிடித்தனர்.

2016 -தற்போதைய நல்லாட்சியில் முஸ்லிம்களுக்கு அச்சுறுத்தல் என முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் தெரிவிப்பு.

**நாளை**

**சித்திரை-19**
செவ்வாய்க்கிழமை -02.05.2017
திதி: ஸப்தமி பி.இ.02.41
நட்சத்திரம்: புனர்பூசம் மு.ப.10.50
சுபநேரம்:10.27-11.57 வரை
ராகுகாலம்:02.57-04.27 வரை

# புதிய பேருந்து நிலையம் திறந்து வைப்பும், வடக்கு அமைச்சின் கையாலாகத்தனமும்

வடக்கு மாகாணத்தின் போக்குவரத்துத் துறை அமைச்சருடைய செயற்பாடுகள் மென் போக்கானவையா? அல்லது கையாலாகாத்தனமா? என்பது பற்றிய சிந்தனை பரவலாக அனைவரிடமும் எழுந்துள்ளது. சிறப்பு நிகழ்வுகளுக்கு வாழ்த்துச் செய்திகளை அள்ளி வழங்குவதற்கும், நிகழ்வுகளுக்கு விருந்தினராகக் கலந்து கொள்வதற்குமே போக்குவரத்து அமைச்சர் சாலச்சிறந்தவர் - பெயர் பெற்றவர் என்றுதான் அடுத்த சந்ததிகள் அவருடைய வரலாற்றை எழுதுவர் போலும்.

வவுனியாவில் 195 மில்லியன் ரூபா செலவில் இலங்கையில் நவீன வசதிகளுடன் கூடியதாக அமைக்கப்பட்ட புதிய பேருந்து நிலையம் கடந்த ஜனவரி மாதம் 16 ஆம் திகதி கொழும்பு போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறி பால டி சில்வாவால், மக்களின் பாவனைக்குத் திறந்து வைக்கப்பட்டது. திறந்து வைக்கப்பட்டதிலிருந்து இ.போ.ச மற்றும் தனியார் பேருந்து சாரதிகளிடையே முறுகல் நிலைஏற்பட்டது. தனியார் பேருந்தின் சாரதியால் இ.போ.ச பேருந்தின் சாரதி தாக்கப்பட்டார். பொலிஸ் நிலையங்களில் பிணக்குகள் இடம்பெற்றன. சாரதிக்கு எதிராக வழக்குத் தாக்கல்செய்யப்பட்டது. இ.போ.ச சாலை ஊழியர்கள் தமக்கு பழைய பேருந்து நிலையத்தில் சேவைகள் மேற் கொள்வதற்கு அனுமதிக்குமாறு கோரித் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து வடக்கு மாகாணத்தினுடைய அனைத்து இ.போ.ச சாலைப் பணியாளர்களும், பணிப்புறக்கணிப்பை மேற் கொண்டனர். போராட்டம் உணவு ஒறுப்புப் போராட்டமாக மாற்றமடைந்து. வவுனியா மாவட்டச்செயலகத்தில் நீண்ட பேச்சுக்கள் இடம் பெற்றன. இணைந்த நேர அட்டவணை தயாரிக்கும் வரை புதிய பேருந்து நிலையத்தில் எந்த விதமான சேவைகளும் மேற்கொள்ளப்பட மாவட்டாது எனவும், அதுவரை பழைய பேருந்து நிலையத்தில் இருந்து தனியார் இ.போ.ச. பேருந்துகள் சேவைகளை மேற்கொள்ளமுடியும் என்றும் முடிவு செய்யப்பட்டது. ஒப்பந்தத்தில் இரு தரப்பினரும் கைச்சாத்திட்டனர். மறுநாள் இ.போ.ச சாலை பேருந்துகள் தமது சேவைகளை பழைமையான பேருந்து நிலையத்தில் மேற்கொண்டு வந்தன. எனினும் தனியார் பேருந்துகள் புதிய பேருந்து நிலைத்தில் சேவைகளை தொடர்ந்தன. ``வடமாகாணத்திலுள்ள 5 மாவட்ட தனியார் பேருந்து சங்க உரிமையாளர்களும் ஒன்றினைந்து வவுனியாவில் கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபட்டனர்.




``புதிதாக அமைக்கப்பட்ட பேருந்து நிலையத்திலேயே இனிமேல் தனியார் பேருந்துச் சேவைகள் இடம்பெறும். வவுனியாவில் புதிதாக அமைக்கப்பட்ட பேருந்து நிலையத்தில் இருந்து மையப் பேருந்து நிலையத்துக்கு மக்கள் சிரமமின்றிப் போக்குவரத்து செய்ய இலவச சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன'' என்று வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத் தலைவர் எஸ்.ராஜேஸ்வரன் (ரஞ்சன்) தெரிவித்திருந்தார். அதன் பின்னர் புதிய பேருந்து நிலையத்தில் எந்த விதமான சேவைகளும் இடம் பெறவில்லை. இது தொடர்பாக இன்றுவரை வடக்கு அமைச்சருடைய செயற்பாடுகள் என்ன? இணைந்த நேர அட்டவணையினுடைய நிலைதான் என்ன? சாதாரண பேருந்து சாரதிகளுடைய பிரச்சினைனை தீர்க்க இறுக்கமான முடிவுகளை எட்ட முடியாமல் உள்ள அமைச்சர் ஒட்டுமொத்த மக்களுக்கும் சேவையாற்றுவார் என்பதை எவ்வாறு நம்புவது? இன்று 4 மாதங்கள் நிறைவடைந்துள்ளன. பேருந்து நிலையப் பிரச்சினைகளில் தலையிட்டால் அமைச்சருடைய கொடும்பாவிகள் எரிக்கடும் என்பதற்காக அவர் அஞ்சுகின்றாரா? அவ்வாறு அஞ்சுபவரானால், அவர் இந்த பதவிக்கே லாயிக்கில்லாதவராவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையும்



அமரர் திருமதி
**ஆனந்தமனோகரி காசிப்பிள்ளை**

மலர்வு . 23 . 01 . 1931
உதிர்வு . 01 . 04 . 2017

தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை மறைந்தும் மறையாது எமது இதயத்தில் நிலை கொண்ட அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதிய போசனமும் இன்று (01.05.2017) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் என்பதனை அனைவருக்கும் அறியத் தருகின்றோம். எல்லா வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது மனப் பூர்வமான நன்றிகள்.

29/22, உடையார் ஒழுங்கை,
ஐயனார் கோயிலடி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### இராசரெத்தினம் நாகராசா

(ஆசாரியார்)



கன்னாதிட்டியை ப்பிறப்பிடமாகவும்கண்ணாபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரெத்தினம் நாகராசா (ஆசாரியார்) (29.04.2017) சனிக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரெத்தினம் தர்மாவதி தம்பதியினரின் அன்பு மகனும் நாகராசா புஸ்பராணியின் அன்புகணவரும் காலஞ்சென்றவர்களான அருளப்பு விஸ்வமணி தம்பதியினரின் அன்பு மருமகனும் தனிஸ்குமார்,ஜேக்குமார், தீவா, தர்சினி காலஞ்சென்ற சசிக்குமார், கபிலக்குமார், மதனக்குமார் காலஞ்சென்ற இந்துஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள்இன்று(01.05.2017) திங்கட்கிழமைமு.ப11.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வில்லூன்றிப் பிள்ளையார்,
கண்ணாபுரம், கொட்டடி,
யாழ்ப்பாணம்.

தகவல்: (மகன்)
நாகராசா தனிஸ்குமார்
077 986 9731

## இராசையா சின்னராசா



யாழ்ப்பாணம் கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், நல்லூரை வசிப்பிடமாகவும் பண்டாரிக்குளம், வவுனியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா சின்னராசா 29.04.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா மங்கையர்க்கரசி தம்பதியரின் அன்பு மருமகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் மனோன்மணி, புவனேஸ்வரி, சண்முகநாதன், கமலாதேவி, துரைராசா, காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் மற்றும் தர்மலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சிலோஜினி (பிரான்ஸ்), ரோகினி (வவுனியா), சிறிதரன் (பிரான்ஸ்), சிறிரூபன் (மலேசியா), நிசாந்தன் (வவுனியா), ஜெயரூபன் (கிளிநொச்சி), தனரூபன் (வவுனியா), நிரோசன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தாரகா(பிரான்ஸ்), துவாரகா (பிரான்ஸ்), ரேணுகா (பிரான்ஸ்) ஆகியோரின் பெரியப்பாவும் கிருஸ்ணகுமார் (வவுனியா), கோகுலராஜ் (பிரான்ஸ்), தர்சினி (கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமனும் தாட்சாயினி, அபிசன்ஜா, டனுஸ்கா, தீட்ஸா, மானுஸா ஆகியோரின் அன்புப் பேரனும் பாலசுப்பிரமணியம் (வவுனியா), புவனேஸ்வரி (பிரான்ஸ்), சற்குணநிதி (பிரான்ஸ்), சுந்தரலிங்கம் (லண்டன்), கஜேந்திரலிங்கம் (பிரான்ஸ்), ராஜேஸ்வரி (யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற கமலேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2017) திங்கட்கிழமை யாழ்ப்பாணம், நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

46, சங்கிலியன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 502 0610

## மரண அறிவித்தல்



திருமதி
### செல்லம்மா (நாகம்மா) விசுவலிங்கம்

கைதடி வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா விசுவலிங்கம் நேற்று (30.04.2017) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற இலங்கையர் சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் விசுவலிங்கத்தின் அன்பு மனைவியும் குணசீலனின்(சுவிஸ்) அன்புத்தாயும் செந்தில் செல்வியின்(சுவிஸ்) அன்பு மாமியாரும் குணாலினி , தருசிகா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (02.05.2017) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் மு.ப 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தச்சன்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி வடக்கு,
கைதடி.

தகவல்:
விசுவலிங்கம் (கணவர்)
குணசீலன் (மகன்)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் திருநாவுக்கரசு (சாமியார்)

(யாழ்ப்பாணம் பழைய வர்த்தக சங்கத்தலைவர், பிரபல பாக்கு வியாபாரி, சிவதொண்டர்)



மண்ணில் 12.11.1928
விண்ணில் 29.04.2017

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி யைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் திருநாவுக்கரசு (29.04.2017) சனிக்கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - காசிப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகனும் காலஞ்சென்ற பார்வதிப்பிள்ளையின் பாசமிகு கணவரும் பாலாம்பிகை, உமா மகேசன் (கனடா), ஞானாம்பிகை ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன் மற்றும் துஷ்யந்தினி (கனடா), சிவபாஸ்கரன் (உரிமையாளர் சாரங்கா நகைமாடம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கௌரி தேவி (கனடா), ஸ்ரீரங்கன் (பிரான்ஸ்), மாதங்கி, பிருந்தாயினி, பிருந்தா, அனித்தா, சேயோன் (கனடா), சாரங்கன் (பொறியியல் பீடம் SLIIT), வைஷ்ணவி, வைதேகி (யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), சஞ்சீவன், தனுஜா, சுரேன், அருண்புஜன் (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும் பிரகீர்த், ஜெனுஷ் (கனடா) ஆகியோரின் பாசமிகு பூட்டனும் காலஞ்சென்ற இராசரட்ணம் மற்றும் முத்துக்குமாரசுவாமி (லண்டன்), நாகரட்ணம், தங்கரட்ணம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்ற தங்கரட்ணம் மற்றும் இராசமணி (லண்டன்), இராசேந்திரம் காலஞ்சென்ற சிவானந்தம், வள்ளிப்பிள்ளை காலஞ்சென்ற சிவனடியாள் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2017) திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ்ப்பாணம் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

374, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

## வடக்கு - கிழக்கு...

வடக்கு-கிழக்கு மாகாணம் முன்னர் அரசியல் நிர்வாக அலகுகளுள் ஒன்றாகவே காணப்பட்டது. வடக்கு - கிழக்கு மாகாணத்தை நிர்வகிப்பதற்காகக் கொண்டு வரப்பட்ட நிர்வாக சபையே வடக்கு - கிழக்கு மாகாண சபை. 1987 ஆம் ஆண்டில், இந்தியத் தலைமை அமைச்சராக இருந்த ராஜீவ் காந்திக்கும் இலங்கை அரச தலைவராக இருந்த ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கும் இடையே 1987 ஆம் ஆண்டு ஜீலையில் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் நோக்குடன் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் வடக்கு -கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டன. 1988 இல் நடைபெற்ற வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கான பொதுத் தேர்தலைத் தொடர்ந்து இலங்கை-இந்திய ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தது. இந்த ஒப்பந்தத்தின்படி இலங்கை ஒரு பல்லின, பல்மத, பல்மொழி நாடாக ஏற்று வடக்கு - கிழக்கை தமிழ், முஸ்லிம் மக்களின் இணைந்த தாயகப் பிரதேசமாக ஏற்றுத் தமிழ்மொழியை அரச மொழியாக ஏற்று மாகாண சபைகளூடான அதிகாரப் பரவலாக்கத்தை முன்வைத்து ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

ஆனால் 2007 ஆம் ஆண்டு வடக்கு - கிழக்கைப் பிரிக்கவேண்டும் என்று ஜே. வி. பி. கட்சியினர் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். வழக்கையடுத்து உயர்நீதிமன்றின் அப்போதைய தலைமை நீதியரசர் சரத். என். சில்வா தலைமையிலான 5 நீதிபதிகளைக் கொண்ட ஆயம் 1987 இல் கைச்சாத்திடப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்கு அமைய ஒன்றாக்கப்பட்ட இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் இணைப்பு செல்லுபடியற்றது என்று அறிவித்தது. இதனால் வடக்குகிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்டதன் முக்கிய சூத்திரதாரிகள் ஜே. வி. பியினரே என்ற குற்றச்சாட்டு இருந்து வருகிறது. (த-4-8)

## காங்கேசன்...

துறைப் பொலிஸாரிடம் நேற்று மாலை ஒப்படைக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் பொலிஸார் தெரிவித்ததாவது: மியன்மாரில் நடைபெறும் கலவரம் காரணமாக அங்கிருந்து வெளியேறிய அவர்கள் இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ள னர். இந்தியாவிலிருந்து வெளியேறுமாறு தமக்குக் கூறப்பட்டதாகவும் அதனால் இராமேஸ்வரத்திலிருந்து நேற்று முன்தினம் புறப்பட்டதாகவும் அகதிகள் குறிப்பிட்டனர்.

அவர்கள் பயணித்த படகின் இயந்திரம் கடலில் பழுதடைந்து விட்டது. இந்திய மீனவர்களின் உதவியை அவர்கள் நாடியுள்ளனர். அவர்களை இந்திய கரைக்கு வருமாறு கேட்டபோது, அகதிகள் மறுத்துள்ளனர். இதன் பின்னர், இந்திய மீனவர்கள் வெள்ளைக் கொடியைக் கடலில் வைத்து அசைத்துள்ளனர்.

ரோந்துக்குச் சென்ற கடற்படையினர் மதியம் (நேற்று) 12.30 மணியளவில் இவர்களை அவதானித்துள்ளனர். அவர்களை மீட்டுக் கரைசேர்த்தனர். பின்னர் மாலை 4 மணியளவில் எம்மிடம் ஒப்படைக்கப்பட்டனர். 30 மியன்மார் அகதிகளில் 14 பேர் 10 வயதுக்கு உட்பட்டவர்கள். கைக்குழந்தைகளும் உள்ளடங்குகின்றனர். அனைவரையும் நாளை செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க பதில் நீதிவான் உத்தரவிட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-5-26-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகைச் ...

அனுரகுமார திசாநாயக்க குற்றஞ் சாட்டினார்.

மக்கள் விடுதலை முன்னணியின் மேதின கூட்டம் நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் யாழ்ப்பாணம் முற்ற வெளிப்பகுதியில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வெள்ளைக்காரர்களின் பிடியிலிருந்து இலங்கை விடுபட்ட போது, இலங்கை அரசுக்கு 11 கோடி ரூபா கடன் மட்டுமே இருந்தது. ஆனால் இப்போது நிலைமை மாறி இலங்கையின் கடன் தொகை 10 இலட்சம் கோடி ரூபாவைத் தாண்டியுள்ளது. இவ்வளவு தொகை கடனில் இலங்கை என்ன அபிவிருத்தியைக் கண்டுள்ளது?

ஓமந்தையிலிருந்து காங்கேசன் துறை வரையான 260 கிலோ மீற்றர் வீதியை அமைக்கும் பணிக்கு ஆயிரத்து 400 கிலோ மீற்றர் நீளமுடைய வீதியை அபிவிருத்தி செய்யும் அளவு பணம் செலவிடப்பட்டுள்ளது. அனுராதபுரத்திலிருந்து காங்கேசன்துறை வரையான பகுதிகளில் தொடருந்து நிலையங்களை மற்றும் பாதைகளை அமைக்கும் பணியிலும் தேவைக்கு அதிகமாக பணம் செலவிடப்பட்டுள்ளது. இதன் விளைவாக தற்போது அரசு உலகைச் சுற்றி பிச்சை எடுக்கும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது.

தற்போதைய அரசிலும் நாட்டில் சட்ட ஒழுங்கு பிரச்சினை காணப்படுகின்றது. கடந்த காலங்களில் உள்நாட்டுப் போர் காரணமாக தெற்கில் இருக்கின்ற சந்திரிகா, மகிந்த ராஜபக்ச போன்றவர்களின் பிள்ளைகளுக்கு எந்தவித ஆபத்துக்களும் ஏற்படவில்லை. அதே போல வடக்கில் இருக்கின்ற சம்பந்தன், விக்னேஸ்வரன், செல்வம் அடைக்கலநாதன் போன்ற தமிழ் தலைவர்களின் பிள்ளைகள் பாதிப்புக்களை எதிர்நோக்கவில்லை. இவர்கள் அனைவரதும் பிள்ளைகள் வெளிநாடுகளிலும் உள்நாடுகளிலும் சிறந்த பாடசாலைகள், கல்வி நிறுவனங்கள் போன்றவற்றில் படித்து நல்ல நிலையில் இருக்கின்றனர். ஆனால் முழுமையாக பாதிக்கப்பட்டவர்களாக சாதாரண மக்களின் பிள்ளைகளே காணப்படுகின்றனர்.

எத்தனையோ ஆண்கள், பெண்கள் படுகொலை செய்யப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டும் உள்ளனர். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அவர்களுக்கு என்ன நடந்தது? எனத் தெரிவிக்குமாறு போராடி வருகின்றனர். எத்தனையோ அரசியல் கைதிகள் இன்றும் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

2012ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலைக்குச் சென்றிருந்த போது ஒரு தமிழ் அரசியல் கைதியை சந்தித்திருந்தேன். 1996ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் அடையாள அட்டையை தன் வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டதாக அவர் என்னிடம் தெரிவித்தார்.

அந்த அடையாள அட்டையில் கையொப்பமிட்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் அமைப்பின் ஊடகப் பேச்சாளர் தயா மாஸ்டர் விடுதலையாகி வெளியில் உள்ளார். ஆனால் அந்த அடையாள அட்டையை வைத்திருந்த சாதாரண நபர் கைதாகி இன்றுவரை சிறையில் இருக்கின்றார். வங்கிக் கணக்குகள், ஆயுதக் கப்பல்கள் போன்றவற்றுடன் தொடர்புடைய குமரன் பத்மநாதன் வெளியில் இருக்கின்றார். விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்த கருணா வெளியில். இவ்வாறு இவர்கள் எல்லாம் வெளியில் இருக்கும் போது சாதாரண மக்களை சேர்ந்த அரசியல் கைதிகள் மட்டும் சிறையிலேயே இருக்கின்றனர்.

போர்க் காலத்தில் விடுதலைப்புலிகள் 28 கிலோமீற்றருக்கும் அதிகமான இலக்கை தாக்கக்கூடிய கனரக ஆயுதங்களை வைத்திருந்தார்கள். இதன் காரணமாக வடக்கில் பல உயர் பாதுகாப்பு வலயங்களை அமைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஆனால் இப்போது வடக்கில் கனரக ஆயுதங்களை வைத்திருப்பவர்கள் யாரும் இல்லை. இப்படி இருக்கையில் உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றாமல் வைத்திருப்பது சரியல்ல. கொழும்பில் அரச தலைவரின் செயலகம், வானூர்தி நிலையம், புறக்கோட்டை தொடருந்து நிலையம் போன்ற பகுதிகளில் இருந்த உயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட்டுள்ளன. எனினும் வடக்கில் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்படாத நிலைமையே காணப்படுகின்றது. எனவே பொது மக்களின் காணிகள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். அவர்கள் சொந்தக் காணியில் மீளவும் குடியமர்த்தப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளை அமைப்பதற்காக மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் 65 ஆயிரம் பொருத்து வீட்டுத்திட்டத்தை கொண்டுவந்தார். ஒவ்வொரு வீடுகளும் 23இலட்சம் ரூபா பெறுமதியானவை என கூறப்பட்டது. அப்போது நாடாளுமன்றில் வைத்து அமைச்சரிடம் ஏன் இவ்வளவு செலவில் பொருத்து வீடுகள்? இதற்கு பதிலாக சாதாரண வீடுகளை அமைத்துக் கொடுக்கலாம் தானே? எனக் கேட்டேன். அதற்கு அமைச்சர் அனைத்து பொருத்து வீடுகளுக்கும் வைபை இணைப்பு போருத்தவுள்ளோம் எனப் பதிலளித்தார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவா இப்போது முக்கியம். வீடுகள் இல்லாது கூடாரங்களில் மக்கள்வாழ்கின்றனர் - என்றார். (வ-8)

## வீட்டுக்குள்...

ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகின்றனர். ஆனால் குடும்பத்துக்கு வெளியே வடக்கில் உள்ள தமிழர்களிடையே இனவாதத்தைத் தூண்டும் வகையில் செயற்பட்டு வருகின்றார் முதலமைச்சர்.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் மேதினக் கூட்டம் யாழ்ப்பாணம் முற்றவெளிப் பகுதியில் நேற்று மாலை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முதலமைச்சரின் இரண்டு பிள்ளைகளும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களையே திருமணம் முடித்துள்ளனர். முதலமைச்சரின் பேரப்பிள்ளைகள் அவரை (தாத்தா), சியா என்று பாசமாகக் கூப்பிடுவார் கள். இவ்வாறு இரண்டு இனத்தைச் சேர்ந்தவர்கள் அவரின் குடும்பத்தில் இன ஒற்றுமையுடன் சந்தோசமாக வாழ்ந்து வருகின்றனர். ஆனால் குடும்பத்துக்கு வெளியே வடக்கு மக்கள் மத்தியில் இனவாதத்தைத் தூண்டும் வகையில் அவர் கருத்துகளைக் கூறிவருகின்றார்.

முன்னாள் அரச தலைவரான மகிந்த ராஜபக்சவின் மைத்துநர் நடேசனும் ஒரு தமிழர். அவரும் தெற்கில் இனவாதத்தைக் கக்கி வருகின்றார். இவர்கள்போன்று வடக்கில் சிலரும் தெற்கில் சிலரும் இனவாதக் கருத்துகளைக் கூறி வருகின்றனர்.

எமது நாட்டில் உள்நாட்டுப் போரின் காரணமாக ஏராளமான உயிர்களை இழந்துவிட்டோம். இழந்த அனைத்து உயிர்களும் சாதாரண மக்களின் உயிர்கள். வடக்கில் போரின் காரணமாக 45 ஆயிரம் விதவைப் பெண்கள் வாழ்ந்து வருகின்றனர். தாய், தந்தையரை இழந்த ஏராளமான குழந்தைகள் வாழ்ந்து வருகின்றன. இவர்களுக்கான தேவைகள் இன்றுவரை பூர்த்தியாகாமல் இருக்கின்றன.

இலங்கையிலேயே முல்லைத்தீவு மாவட்டம்தான் வறிய மாவட்டமாக கணிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் பெயரளவில் அறிக்கைகளையும் கருத்துக்களையும் கூறிக்கொண்டிருந்து எவ்வித பயனுமில்லை. அந்த மாவட்டத்தை வறுமையிலிருந்து எவ்வாறு மீட்கலாம் என்ற திட்டங்களை வகுத்து அபிவிருத்திகளை செய்ய வேண்டும். அனைத்து இன மக்களும் ஒன்றுபட வேண்டும். அனைவரும் ஒன்றிணைந்து இந்த நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும் - என்றார். (த-4-8)

**கோழிகள் விற்பனைக்கு**

6 மாதம் நிரம்பிய முட்டையிடும் ஊர்க்கோழிகள் விற்பனைக்கு உண்டு. மற்றும் 2 கிலோ இற்கு மேல் நிறை உள்ள புறொயிலர் கோழிகள் விற்பனைக்கு. (1கிலோ - 290) தொடர்பு - 077 245 3673

கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 130
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 30.04.2017
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 84,655,200/-
G 02 04 27 66
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 30.04.2017 | வெற்றிவாரம் 2126 | வர்ணம் ஊதா
துலாம் 15 26 28 58
செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி
ரூ 2, 607, 088/=
2017.05.02 ஆம் திகதி செவவாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

## முதலாமாண்டு நினைவஞ்சலி



உதிப்பு
17 . 08 . 1948

உதிர்வு
12 . 05 . 2016

### அமரர் கதிர்காமு பத்மநாதன்

**திதி : சஷ்டி -(01.05.2017)**

ஓராண்டு கடந்து சென்றாலும் - எம் நினைவோடு
என்றும் வாழும் எம் குல தெய்வமே அப்பா!
தினந்தோறும் எமை அழைத்து தேன்மொழி பேசும் உறவே!
எம்மைவிட்டுச் சென்று இன்று ஓராண்டு ஆனதுவோ?
காலங்கள் கடந்து சென்றாலும் - உம்
நினைவற்ற செயல் இங்கு இல்லை அப்பா
அப்பா அப்பா என்றழைக்கும் எம் உதடுகள்
என்றும் ஓயாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

"அபி அகம்"
டச்சு வீதி, சாவகச்சேரி.

மனைவி, பிள்ளைகள்.

**வீடு விற்பனைக்கு**

உரும்பிராய் வடக்கு மரக்கனா வீதியில் 1 3/4 பரப்பில் அமைத்த வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 844 9687

Galaxy Star
வெற்றி வாரம் 156 | திகதி 30.04.2017
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
01 11 19 35 40
அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2,581,904/-
03.05.2017 ஆம் திகதி புதன்கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்.
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>GS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.


**வீடுகள் விற்பனைக்கு**

கோண்டாவில் சந்திக்கு அருகில் 3 பரப்பிலும், இராஜ வீதி சந்திக்கு அருகில் 2 1/2 பரப்பிலும், கச்சேரி நல்லூர் வீதியில் 3 பரப்பிலும் அமைந்த வீடுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு - 076 697 2287

**வீடு விற்பனைக்கு வேண்டும்**

யாழ். நகரில் அல்லது கல்வியங்காடு, திருநெல்வேலி அண்டிய பகுதியை அண்மித்ததாக வீடு ஒன்று விலைக்கு வேண்டும். (ஐம்பது லட்சத்திற்கு உட்பட்டதாக) தொடர்பு - 071 7096 969

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட பீடாபதியாக இருக்கும்
பேராசிரியர்

### இ. விக்னேஸ்வரன்

அவர்கள்

**யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர்** ஆக இன்று (01.05.2017) திங்கட்கிழமை பதவி ஏற்பதனையிட்டு யாழ். பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களாகிய நாம் அகமகிழ்ந்து வாழ்த்துவதுடன் அவர் மேன்மேலும் பல சிறப்புக்களை பெறுவதற்கு எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்
யாழ். பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவு சங்கம்.
பாதுகாப்பு திணைக்களம், யாழ். பல்கலைக்கழகம்

## மரண அறிவித்தல்

### திருமதி
### தர்மகுலதேவி பொன்னுத்துரை



யாழ்ப்பாணம், 19, புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் இல.9/2, விஜயசேகர மாவத்தை, தெஹிவளை, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தர்மகுலதேவி பொன்னுத்துரை 29.04.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு அருளம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை கதிராசி தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் ஜீவராணி, சுரேஸ், டெய்சிராணி, ஜமுனாராணி, றமேஸ் ஆகியோரின் பாசமிகு தாயாரும் சத்திக்குமாரன், றேக்கா, அருட்பிரகாசம், சிவநேசசிங்கம், கஸ்தூரி ஆகியோரின் பாசமிகு மாமியும் காலஞ்சென்றவர்களான நேசராசா, அமிர்தலிங்கம் மற்றும் தர்மராணி, கேதீஸ்வரன் காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் சுரேந்திரன், ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் மகேஸ்வரி, பரநிருபராணி, ஜெகநாதன், நாகேஸ்வரி, காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் வசந்தகுமாரி, சந்திரகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

9/2, விஜயசேகர மாவத்தை,
தெஹிவளை, கொழும்பு.

தகவல்:
குடும்பத்தினர்.
011 273 3217, 077 268 7843

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள்...

தந்தை செல்வா 1947ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். அவர் இந்த நாட்டின் அரசியல் ஆட்சிமுறை ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்லஎன்றவாதத்தை முன்வைத்து இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியை ஆரம்பித்து அரசியல் பயணத்தை ஆரம்பித்தார். அந்தப் பயணம் இன்றும் தொடர்கின்றது. நாங்களும் பயணித்துக்கொண்டிருக்கின்றோம். எமக்குத் தேவை எமது மக்களின் ஒற்றுமையாகும். எமது மக்கள் அனைவரும் ஒருமித்து நிற்க வேண்டும்.

நாங்கள் ஒரு அரசியல் தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கு முயற்சிக்கின்றோம். கருமங்கள் முன்னெடுக்கப்படுகின்றபோது, அனைவரினதும் ஆதரவுகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். பகைமையை வளர்க்கக் கூடாது.

உருவாக்கப்படுகின்ற அரசமைப்பு, மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும். பின்னர் நாட்டு மக்களிடம் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும். இது ஒரு சாதாரணமான விடயமுமல்ல, நடைமுறைச் சாத்தியமற்ற விடயமுமல்ல. எம்முடைய அரசியல் சூழலில் அதனை அடையக் கூடிய நிலைமை இருக்கின்றது. அதற்காக நாங்கள் அனைவரினதும் ஆதரவுகளைப் பெற்றுச் செயற்பட்டு வருகின்றோம். அதற்காக நாங்கள் பிடிகொடுக்கும் அளவுக்கு நடந்து கொள்ளக் கூடாது.

இந்த நாட்டிலுள்ள ஆட்சிமுறை எமக்கு உகந்ததாக அமைவதற்கு இந்த நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பதாகவோ அதற்குப் பிறகும் ஏற்பட்ட வாய்ப்புக்களை நாங்கள் இழந்திருக்கின்றோம். இதனை நாங்கள் இழக்க முடியாது.

எமது மக்கள் தங்களது இறைமையின் அடிப்படையில் அதிகாரங்களைக் கைப்பற்றி, அவற்றைத் தாங்கள் பயன்படுத்தி, அதன் மூலம் தங்களுடைய வேணவாக்களையும், உரிமைகளையும் அனுபவிக்கக் கூடிய நிலமை ஏற்பட வேண்டும்.

அரசியல் தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கு முயற்சிக்கின்றோம். இவை நடைபெறுவதற்கு எமது மக்கள் மத்தியில் ஒற்றுமை இருக்க வேண்டும். தமிழ் மக்கள் ஒருமித்து தமிழ் அரசுக் கட்சியின் பின்னால் நின்றுள்ளார்கள். மக்களை ஆட்சி புரிவதற்கு அந்த மக்களின் ஒப்புதல் இருக்க வேண்டும். இதனை அந்த மக்கள் ஜனநாயக ரீதியில் தெரிவித்திருக்க வேண்டும். இவ்வாறு ஐ.நா. மனித உரிமைகள் சபையின் சாசனத்தில் சொல்லப்பட்டுள்ளது. எமது விருப்பத்துக்கு மாறாகத்தான் நாங்கள் ஆட்சி செய்யப்படுகின்றோம் - என்றார். (வ-5)

## ஒன்றித்த...

அரசே அனுமதி வழங்கியுள்ளது. கிராமத்துக்கு ஒரு மில்லியன் (பத்துலட்சம்) ரூபா திட்டம், இந்த ஆண்டு தொடக்கம் கிராமத்துக்கு 5 லட்சம் ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது. திட்டத்துக்குரிய வேலைகள் கிராம மட்டங்களில் இனங்காணப்பட்டு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தகவலுக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். இதன் பின்னரே திட்டம் அனுமதிக்காக அனுப்பப்பட வேண்டும் என்று அரசால் சுற்றறிக்கை வெளியிடப்பட்டிருந்தது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்த நடைமுறை பின்பற்றப்படவில்லை. பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நடத்தப்படாமல், பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களின் இணைத் தலைவர்களிடம் நேரடியாகக் கையெழுத்து மாத்திரம் பெறப்பட்டு, அரசின் அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அரச சுற்றறிக்கையில் சொல்லப்பட்டவாறு நடைமுறையைப் பின்பற்றாமல் அனுப்பப்பட்ட திட்டத்துக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. 217.5 மில்லியன் ரூபா நிதியும் கிடைக்கப் பெற்றுள்ளது. (வ-5)

## ஆனந்தத்துடன்...

9 மணியளவில் கடற்படையினரின் கட்டுப்பாட்டில் காணப்பட்ட முள்ளிக்குளம் பரலோக மாதா ஆலயத்தில் நன்றி திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர். முள்ளிக் குளம் பங்கின் அருட்தந்தை அன்ரன் தவராசா தலைமையில் முருங்கன் மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை மார்க்கஸ் அடிகளார் மற்றும் அருட்தந்தை சுகீன் அடிகளார் ஆகியோர் இணைந்து கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுத்தனர்.

திருப்பலி நிறைவடைந்த பின்னர் மக்கள் தமது நிலங்களைப் பார்வையிட்டனர். முள்ளிக்குளம் மக்கள் அனைவரும் ஒன்றாக சமைத்து உணவு உண்டு தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

கடற்படையினர் முதற்கட்டமாக 100 ஏக்கர் காணியை விடுவித்துள்ளதாக அறிவித்துள்ள நிலையில் அடையாளம் காணப்பட்ட இடங்களுக்கு மாத்திரமே மக்களின் நடமாட்டத்துக்கு அவர்கள் அனுமதி வழங்கியுள்ளனர்.

"சில தினங்களில் குழு அமைத்து மக்கள் கடலுக்குச் சென்று வரும் பாதை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் கடற்படையூடாக நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாகவும், முள்ளிக்குளம் கிராமத்துக்கு வந்துள்ள மக்கள் ஆலயத்தில் தங்கியிருந்து கட்டம் கட்டமாக தற்காலிக வீடுகளை அமைத்த பின் தமது இடங்களுக்குச் செல்வார்கள்" என்று முள்ளிக்குளம் பங்குத்தந்தை அருட்தந்தை அன்ரன் தவராசா தெரிவித்தார்.

பின்னணி

போர் காரணமாக 2007ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 8ஆம் திகதி பலவந்தமாக முள்ளிக்குளம் கிராம மக்கள் சொந்த நிலங்களில் இருந்து வெளியேற்றப்பட்டனர். போர் முடிந்த பின்னரும் மக்களின் காணிகள் விடுவிக்கப்படவில்லை. ஆட்சி மாற்றத்தின் பின்னரும் தமது காணிகள் விடுவிக்கப்படாத நிலையில் மக்கள் போராட்டத்தை ஆரம்பித்தனர். நேற்று முன்தினம் 38ஆவது நாள் போராட்டத்தை அவர்கள் தொடர்ந்தனர். காணி விடுவிப்புத் தொடர்பாக நேற்றுமுன்தினம் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தின் முடிவில் ஒரு தொகுதி காணி விடுவிக்க இணக்கம் காணப்பட்டது. (வ-5.56)

## 2020 அரச...

மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டில் ஆட்சி புரிந்த அத்தனை அரச தலைவர்களுக்கும் முன்னுதாரணமாக எமது தற்போதைய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன திகழ்கின்றார். தனது அதிகாரத்தையே குறைக்க வேண்டும் என்று விரும்பும் ஒருவர். தான் பதவியேற்றது முதல் இதற்கான முயற்சியில் அவர் ஈடுபட்டு வருகின்றார்.

அவர் ஏகாதிபத்திய தன்மையுடன் செயற்படுபவர் அல்ல. தனித்து முடிவெடுப்பவர் அல்ல. இரவில் முடிவெடுத்து காலையில் அறிவிப்பவர் அல்ல. அவர் எடுக்கும் முடிவுக்கு அனைவரும் கட்டுப்பட்டே ஆக வேண்டும் என்று விரும்புபவர் அல்ல. இதுவரை நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் பதவியை வகித்த அனைவரும் அவர்களின் நலன்களை அடிப்படையாகக் கொண்டே முடிவெடுத்தனர். மைத்திரி ஒருபோதும் அப்படிச் செயற்பட்டதில்லை.

தலைமை அமைச்சர் தலைமையிலான நாடாளுமன்றத்துக்கு அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அவர் இருப்பதால், அவர் அரச செயற்பாட்டில் மூக்கை நுழைப்பதில்லை. 2020 இல் அரச தலைவர் தேர்தல் ஒன்று இடம்பெறுமாக இருந்தால், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு மைத்திரியைத் தவிர வேறு ஒரு சிறந்த வேட்பாளர் இல்லை.

இதன் காரணமாக எமது கட்சி முன்கூட்டியே தீர்மானம் ஒன்றை எடுத்துள்ளது. அரச தலைவர் தேர்தல் 2020 இல் இடம்பெற்றால் சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் மைத்திரி என்பது தான் அந்தத் தீர்மானம். இது தொடர்பில் அரச தலைவர் எதுவித முடிவையும் அறிவிக்காத போதிலும் அவர் கட்சியின் முடிவுக்குக் கட்டுப்பட்டே ஆக வேண்டும். அவர் போட்டியிடுவார் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம் என்றார். (வ-5.3)

## மோடியின்...

கொண்டாட்டம் கொழும்பில் மே 12ஆம் திகதி ஆரம்பமாகிறது. ஆரம்ப நிகழ்வில் இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி பங்கேற்கவுள்ளார்.

இதனை முன்னிட்டு இந்தியப் பாதுகாப்பு முகவர் அமைப்புகள், இலங்கையுடன் நெருக்கமாக இணைந்து, பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன.

இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியின் பயணத் திட்டத்தைக் குழப்பும் வகையில், கொழும்பில் எதிர்ப்புப் போராட்டங்களை மகிந்த அணியினர் நடத்தக் கூடும் என்று புலனாய்வு அமைப்புகள் எச்சரித்துள்ளன.

இந்த நிலையில், இந்தியத் தலைமை அமைச்சரின் பயணத் திட்டத்தைக் குழப்பும் வகையிலான போராட்டங்கள் இடம்பெறாதிருப்பதை உறுதிப்படுத்தும் வகையில், மோடியின் பயணத்துக்கு முன்னதாக, பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவுக்கு முக்கிய பொறுப்பு அளிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது" என்று அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது (வ-5)

## யாருமே...

உட்பட எவரும் எங்களைக் கைவிடாததால் ஈழத் தமிழர் அரசியல் இப்பொழுது திருப்பு முனையில் வந்து நிற்கிறது"

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தந்தை செல்வாவின் 40ஆவது நினைவு தின நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு கலுதாவளை கலாசார மண்டபத்தில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பட்டிருப்புத் தொகுதிக் கிளையின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

இப்பொழுது சில ஊடகங்கள் குறிப்பாக தமிழ் ஊடகங்கள் தேவையில்லாமல் இல்லாதது பொல்லாதது எல்லாவற்றையும் சொல்லி மக்களைக் குழப்பிக் கொண்டிருக்கின்றார்கள். கருத்துப் பரிமாற்றம் நல்லதுதான். தெளிவாகவே இல்லாத விடயத்தை இருக்கிறதென்றும் இருக்கிறதை அதன் சாரமே இல்லையென்றும் ஊதிப் பெருப்பித்துச் சொல்லுவது ஊடக தர்மத்துக்குப் புறம்பானது.

ஊடகவியலாளர்கள், ஊடகங்கள் தாம் வெளியிடும் விடயங்களின் உண்மைத் தன்மையை ஒன்றுக்குப் பலமுறை ஒப்பு நோக்கிப் பார்த்து வெளியிட வேண்டும். தீர்மானங்களை, பரிந்துரைகளை, அறிக்கைகளை அலசி ஆராய்ந்து படித்துப் பார்க்க வேண்டும். ஒருவர் சொல்லி விட்டார் என்பதற்காக அதுதான் உண்மை என்றிருந்து விடக் கூடாது. அவரது கருத்தோடு சேர்த்து உண்மையையும் மக்களுக்கு ஊட்ட வேண்டும். இதுதான் ஊடகங்களினதும் ஊடகவியலாளர்களினதும் பொறுப்பு வாய்ந்த கடமையாகும்.

எல்லோரும் எங்களைக் கைவிட்டு விட்டார்கள் என்கின்ற ஒப்பாரி இப்பொழுது நடந்து கொண்டே இருக்கின்றது. ஆனால், உண்மை அதுவல்ல. யாரும் எங்களைக் கைவிடவில்லை. எங்களுக்குச் சாதகமான எத்தனையோ விடயங்கள் நடந்து கொண்டே இருக்கின்றன. 1950ஆம் 1951ஆம் ஆண்டிலே ஆரம்பித்த அந்தப் பயணம் படிப்படியாக இன்றைக்கு இந்த அளவுக்கு வந்து முன்னேற்றம் கண்டிருக்கின்றது.

மிக முக்கியமாக அரசியல் தீர்வொன்று வழங்கப்பட வேண்டும், புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும். இந்த விடயத்தை இலங்கை அரசு 2015ஆம் ஆண்டே பன்னாட்டுச் சமூகத்துக்கு வாக்குறுதியாகச் சொல்லியுள்ளது.

இலங்கையிலே இதற்கு முன்னர் இடம்பெற்ற அத்தனை விடயங்களும் மீண்டும் நிகழாமல் இருப்பதற்கான உத்தரவாதமும் தரப்பட்டிருக்கிறது. புதிய அரசமைப்புத் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றியும் உத்தரவாதப்படுத்தப்பட்டிருக்கிறது. இது இலங்கை அரசு பன்னாட்டுச் சமூகத்துக்குக் கொடுத்த வாக்குறுதிகளாகும்.

முன்னர் நடந்திருக்காத இந்த விடயங்கள் பன்னாட்டு மட்டத்திலே நடந்தேறியிருக்க இங்கே ஒன்றுமே நடக்கவில்லை என்று கூப்பாடு போடுவது சரியல்ல. இத்தகைய முன்னேற்றங்களோடு ஈழத் தமிழர் அரசியல் நகர்வு திருப்பு முனையில் சென்று கொண்டிருக்கின்றது.

உலகம் எங்களைக் கைவிட்டுவிடக் கூடாது. தந்தை செல்வாவின் வழியிலே வந்த சம்பந்தன் தமிழர்களுக்குத் தலைவனாகக் கிடைத்திருப்பது ஒரு பெரும் பாக்கியம் என்றே கருத வேண்டும் - என்றார். (வ-5)

## உண்மையைக்...

மைத்திரி அரச தலைவரானால் மைத்திரியுடன் இணைதல் மகிந்த அரச தலைவரானால் மகிந்தவுடன் இணைதல் என்று இரண்டு தோணிகளில் கால் வைத்திருக்கும் அமைச்சர்களுக்கு கசப்பான செய்திதான்"

இவ்வாறு அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

பொன்சேகா நியமனம் தொடர்பில் கூட்டு அரசுக்குள் குழப்பமான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வருவதால் இது தொடர்பில் விளக்கமளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சரத் பொன்சேகாவை மீண்டும் இராணுவப் பதவியில் அமர்த்துதல் என்ற செய்தி பொய்ச் செய்தியல்ல. இது அமைச்சரவையில் கலந்தாலோசிக்கப்பட்டது. நாட்டின் உறுதித் தன்மை கருதி எடுக்கப்பட்ட முடிவு இது. இதை அமைச்சர்கள் எவரும் மறுக்க முடியாது.

உண்மையைக் கூறுவதற்கு அமைச்சர்களுக்கு முதுகெலும்பு இருக்க வேண்டும். சில அமைச்சர்கள் சரத் பொன்சேகா மீண்டும் இராணுவத்துக்குள் நுழைவதை விரும்பவில்லை. இந்தச் செய்தியைக் கேட்டு மகிந்த ராஜபக்சவின் குடும்பம் அச்சத்தால் நடுங்குகிறது.

தகவல் அறியும் சட்டத்தின் கீழ் அமைச்சரவையில் நடக்கும் பேசப்படும் விடயங்களை மக்களுக்குத் தெரியப்படுத்துமாறு அரச தலைவர் என்னிடம் கூறியுள்ளார். அந்த அடிப்படையில், பொன்சேகாவை மீண்டும் இராணுவத்தில் இணைப்பது என்ற செய்தியானது அமைச்சரவையில் பேசப்பட்ட அரச தலைவரால் எடுக்கப்பட்ட முடிவாகும். இது பொய்யோ அல்லது விளையாட்டாகப் பேசப்பட்ட விடயமோ அல்ல. இது விளையாட்டாகப் பேசப்பட்டது என்றே சில அமைச்சர்கள் கூறிக் கொள்கின்றார்கள் - என்றார். (வ-5.3)

## ஜி.ஜி.பொன்னம்பலத்தின்...

கூட்டமைப்பின் தலைவரும் எதிர்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.

மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற தந்தை செல்வா நினைவுப் பேருரையில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பண்டா செல்வா ஒப்பந்தம், டட்லி செல்வா ஒப்பந்தம் இவற்றை ஜி.ஜி.பொன்னம்பலம் எதிர்த்தார். தந்தை செல்வாவின் கூட்டாட்சிக் கோரிக்கையையும் எதிர்த்தார். இந்த எதிர்ப்புக்களினால் தன்னுடைய இலக்கை தந்தை செல்வாவால் அடைய முடியாமல் இருந்தது. இவர்கள் இருவரும் தமிழ்த் தலைவர்கள். ஒரு தலைவரின் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் தொடர்ச்சியாக பொன்னம்பலம் எதிர்த்துக் கொண்டிருந்தார்.

அப்போதிருந்த தந்தை செல்வாவின் தடத்தில் தற்போது பயணித்துக்கொண்டிருக்கும் நிலையில் அதனையும் எதிர்த்து செயற்படுகின்றவர்கள் இருக்கின்றார்கள். இப்படிப்பட்டவர்கள் அமரர் பொன்னம்பலத்தின் வாரிசுகளா? பொன்னம்பலத்தின் சைக்கிள்களில் ஓடிக்கொண்டிருப்பவர்களா? இந்தக் கேள்விகளுக்குப் பதில் கொடுக்க வேண்டிது மிகவும் முக்கியமாகும்.

பண்டா செல்வா உடன்படிக்கையின் மூலம் நிலத்தைப் பாதுகாக்கும் பொருட்டு பிராந்தியங்கள் இணைக்கப்பட்டு பிராந்திய சபைகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டு மக்கள் வாழ வேண்டும் என்று சொல்லப்பட்டது.

கூட்டாட்சிக் கோரிக்கையை முன் வைத்து நாட்டில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும், போதிய சுயாட்சி வடக்கு - கிழக்கில் செயற்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை தந்தை செல்வா முன் வைத்தார். மாவட்ட சபைகளை உருவாக்கி காணி அதிகாரத்தை முழுமையாக கைப்பற்றி வட கிழக்கை தமிழ் பேசும் மக்களுடைய பிராந்தியமாக செயற்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டை அவர் கொண்டிருந்தார். இவற்றையும் அமரர் பொன்னம்பலம் எதிர்த்தார். தற்போதும் பொன்னம்பலத்தைப் பின்பற்றி அரசியலில் ஈடுபடுகின்றவர்கள் ஒவ்வொரு விடயத்தையும் எதிர்த்துக் கொண்டு வருகின்றார்கள். நாங்கள் பேச்சுக்களில் ஈடுபடுவதை இவ்வாறானவர்கள் விரும்ப வில்லை - என்றார். (வ-5)

## தகவல்...

வழங்குவதற்காக இரகசிய தகவல்களை நேரடியாகப் பெற முயல்வதும் குற்றம் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டம் பொதுப் பாதுகாப்பின் அடிப்படையில் தகவல்களை மறைக்க முடியாது என்று தெரிவித்திருந்தது. தேசிய பாதுகாப்பு, தேசத்தின் பாதுகாப்பு ஆகிய காரணங்களுக்காக மாத்திரமே தகவல்களை வழங்க மறுக்கலாம் என்று அந்தச் சட்டம் தெரிவித்திருந்தது.

ஆனால் இவற்றுக்கு முரணாக, புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் சரத்துக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மையின் சக்தி



மலைப் பிரதேசமொன்றின் மலையின் உச்சியில் ஒரு இனத்தவரும் அதன் அடிவாரத்தில் மற்றொரு இனத்தவரும் வாழ்ந்து வந்தார்கள். இரு இனத்தவரும் எப்போதும் பகை பாராட்டிக் கொள்வார்கள்.

ஒரு முறை இரு பகுதியினருக்கும் ஏற்பட்ட பூசலில் மலை உச்சியில் இருப்பவர்கள், அடிவாரத்தைச் சேர்ந்த ஒரு குழந்தையைக் கடத்திச் சென்று விட்டார்கள். அடிவார சமூகத்தில் இருந்த சில பெரியவர்கள் மலைமேல் இருந்த சமூகத்தவரிடம் சமாதானமாகப் பேசினால். குழந்தையை மீட்டு வந்து விட சாத்தியம் இருப்பதாக ஊரில் உள்ள இளைஞர்களிடம் அறிவுரை கூறினர். இந்த முயற்சிக்கு இளைஞர்கள் ஒத்துழைப்பு வழங்க முன் வந்தனர். முன் வந்தவர்கள் அனைவரும் கடினமான வேலைகள் செய்து பழகியவர்கள். எந்தச் செயலை எடுத்தாலும் அதை விடா முயற்சியுடன் முடிக்கும் மனப்போக்கைக் கொண்டவர்கள். ஊர்ப் பெரியவர்களும் இந்தச் செயலை முடிக்க இவர்களே தகுந்தவர்கள் என்று தெரிந்து அவர்களை வாழ்த்தி அனுப்பி வைத்தார்கள். இளைஞர்களும் ஆர்வத்துடன் கிளம்பினார்கள். அந்த மலையின் சில பகுதிகள் மிகவும் செங்குத்தானவை. அந்த இளைஞர்கள் அப்படி ஒரு பகுதியை ஏறிக் கடக்க முடியாமல் சிரமப்பட்டனர். விடாமுயற்சியுடன் பலமணி நேரமாக அந்தப் பகுதியில் நின்று பல வழிகளிலும் முயன்று கொண்டிருந்தனர். இடையிடையே மிகவும் களைத்துப் போயினர். அதனால் ஓய்வெடுத்துக்கொண்டு மீண்டும் முயற்சித்துக் கொண்டிருந்தனர்.



அப்போது தம் ஊர்ப் பெண் ஒருவர் மேலே உச்சிப் பகுதியில் இருந்து இறங்கி வருவதைக் கண்டார்கள்.


அவள் அவர்களுக்கு அண்மையில் வந்த பின்பே அவளது முதுகுப் புறத்தில் பை போன்ற சேலை மடிப்பில் குழந்தை ஒன்று தாயை இறுக அணைத்துக் கொண்டிருப்பது தெரிய வந்தது. அவர்கள் எல்லோரும் அதிர்ச்சியடைந்தனர். "நாங்கள் ஏற மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த செங்குத்து பாறையில் நீ எப்படி ஏறிச் சென்றாய்" என்றனர் வியப்புடன்.

அவள் தனது இடுப்பைக் கட்டி அணைத்துக் கொண்டிருந்த குழந்தையைக் காட்டி "இது உங்கள் குழந்தை அல்ல. என் குழந்தை. அதுதான் வித்தியாசம்" என்றாள்.

**தன்பிள்ளைக்காக தன் உதிரத்தை பாலாக்கி கொடுப்பது மட்டுமல்ல, தன் உயிரையும் கொடுப்பாள் தாய்.**

**அந்தத் தாயைப் பணிவோம்**
**தாய் தந்தையரைப் வேணுவோம்.**

## கீழே தரப்பட்டுள்ள சொற் கோபுரத்தை பூர்த்தி செய்வோம்



1. நோயைப் பரப்புவது.
2. சமாதானப் பறவை.
3. இது இரவில் கொந்தளிக்கும்.
4. தபாலகத்தில் இதனைப் பெறலாம்.
5. வானொலியைக் கண்டு பிடித்தவர்.
6. இவர்கள் இல்லாவிடில் எமக்கு உணவு கிடைக்காது.
7. உடல் ஆரோக்கியத்துக்கு இது அவசியம்.



## தொடர் மொழிக்கு ஒரு மொழி

| | | |
|---|---|---|
| 1. அட்டாவதானி | - | ஒரே நேரத்தில் எட்டு விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் படைத்தவன். |
| 2. அவிசு | - | உப்பின்றி சமைத்த அரிசிச் சாதம். |
| 3. ஊதாரி | - | கண் மூடித் தனமாக பணத்தைச் செலவு செய்பவன். |
| 4. கட்டுக்கதை | - | ஆதாரமற்ற செய்திகளைக் கொண்டு புனையப்பட்ட கற்பனைக் கதை . |
| 5. சகபாடி | - | ஒரே பாடசாலையில் ஒன்றாகப் படித்தவன். |
| 6. தபுதாரன் | - | மனைவியை இழந்தவன். |
| 7. தபோவனம் | - | துறவறம் பூண்டோர் வாழும் இடம். |
| 8. நைட்டிகன் | - | வாழ்நாள் முழுவதும் பிரமச்சரிய விரதம் காப்போன். |
| 9. பஞ்சமா பாதகங்கள் | - | கொலை, களவு, கள், பொய், குருசிந்தை. |
| 10. பன்னசாலை | - | தழைகள் கொண்டு வேயப்படும் குடில் . |
| 11. படியெடுத்தல் | - | ஒன்றைப் பிரதி செய்தல். |
| 12. பிதிர்க் கடன் | - | இறந்தவரின் ஆன்ம சாந்திக்காக செய்யப்படும் சிரார்த்தம் முதலிய கடன்கள். |
| 13. விகடகவி | - | நகையும் பரிகாசமும் பொருந்த கவிபுனையும் ஆற்றல் படைத்தவன் . |
| 14. வெள்ளோட்டம் | - | உருவாக்கப்பட்ட தேர்,கப்பல், வாகனம் என்பவற்றை முதன் முதல் செலுத்திப் பார்த்தல். |
| 15. அகதி | - | அனைத்து உடைமைகளையும் இழந்தவர். |

## தொழிலாளர் தினம் மே -1

மே மாதம் முதலாம் திகதியை உலக தொழிலாளர் தினமாக தொழிலாளர் அனைவரும் கொண்டாடி வருகிறார்கள். முற் காலத்தில் ஆதி மனிதர்கள் செல்வந்தர்களின் கீழ் அடிமைகளாக நாள் முழுவதும் வேலை செய்த காலங்கள் உண்டு. உதாரணமாக இத்தாலியில் உரோம் நகரில் வெள்ளையர்களான செல்வந்தர்கள் ஆபிரிக்க கறுப்பு இனத்தவர்களை வண்டிகளில் மாடுகளாகப் பூட்டி பொருள்களை இழுத்துச் செல்வதற்கு பயன்படுத்தினர்கள். வேலை முடிவடைந்ததும் கைகளில் விலங்கு பூட்டி அடைத்து மீண்டும் மறுநாள் அதே வேலைக்கு திறந்து விடுவர். இப்படி நேரக் கட்டுப்பாடின்றி வேலை செய்த காலம் மாறி அது 18 மணித்தியால வேலையாகக் குறைக்கப்பட்டது. இதனை மறுத்துப் பேச எவருக்கும் உரிமையில்லை. ஆயினும் 1820, 1834 ஆம் ஆண்டுகளில் சில தொழிலாளர் போராட்டங்கள் நடைபெற்றன. இவ்வாறு தொடர்ந்து ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் வேலை நேரக் குறைப்பு விடயமாக பல எழுச்சிப் போராட்டங்கள் நடைபெற்று வந்தன. 1886 ஆம் ஆண்டு மே மாதம் அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் ஒரு நாளில் 8 மணித்தியாலய வேலை எனக் கோரி நடாத்தப்பட்ட எழுச்சிப் போரட்டத்தில் 5 லட்சம் தொழிலாளர் கலந்து கொண்டதோடு பல அடக்கு வன்முறைகளால் தொழிலாளர், விவசாயிகள் என பலர் இரத்தம் சிந்தி உயிர் துறக்க வேண்டிய கொடூரங்களும் ஏற்பட்டன. ஆயினும் போராட்டம் தொடந்து நடைபெற்று, ஒரு நாளில் 8 மணித்தியாலயம் வேலை என்பது கைச்சாத்திடப்பட்டு தொழிலாளர் போராட்டம் வெற்றி கண்டது.



அடக்கு முறையில் இரவு பகலாக இரத்தம் சிந்தி உழைத்த தொழிலாளர் வெற்றி கண்டதையும், அன்றைய நாளில் தொழிலாளரின் உயிர்த் தியாகங்களையும் நினைவு கூரு முகமாகவே, மே முதல் திகதி வருடாவருடம் தொழிலாளர் தினமாக கொண்டாடப்படுகிறது.

## பூமி கீழே விழுமா?

ஒரு வகுப்பறையில் நடந்து கொண்டிருந்தது புவியியல் பாடம். புவியீர்ப்பு பற்றிய விடயத்துக்கு ஆசிரியர் விளக்கம் அளித்துக் கொண்டிருக்கிறார். விளக்க மளித்தல் முடிந்ததும் அவர் மாணவரை நோக்கி கேள்விகளை எழுப்பினார்.

கே : மேலே எறிந்த பொருள் மேலே சொல்லாமல் கீழே ஏன் விழுகிறது?
ப : புவியீர்ப்புச் சக்தியினால்.
கே : புவிக்கு ஈர்ப்பு சக்தி உள்ளதென்பதைக் கண்டறிந்தவர் யார்?
ப : சேர் ஐசாக் நியூட்டன்.
கே : இதனை அவர் எதனை ஆதாரமாக வைத்து நிரூபித்தார்?
ப : தனது தலையில் அப்பிள் பழம் ஒன்று விழுந்ததைக் கொண்டு நிரூபித்தார்.
கே : சரி... பூமி ஏன் விழுவதில்லை...?

ஆசிரியர் வினவிய கேள்விக்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு பதில் கூறிக் கொண்டிருந்தனர். திடீரென ஒரு மாணவி. "பூமி எங்கே சார் விழும்?" ஆசிரியர் திகைத்துப் போய் நின்றார். ஆனாலும் அதுதான் சரியான பதில்.



எல்லையற்ற அண்ட வெளியில் எது மேல் புறம்... எது கீழ்ப்புறம்?... அதிலே மேலே கீழே என்பதெல்லாம் ஒன்றும் கிடையாது. அப்படி இருக்கும் போது பூமி ஏன் விழுவதில்லை? என்ற கேள்வியே தவறுதானே... மாணவர்களுக்கு விளக்கமளித்த ஆசிரியர், அந்த மாணவியைப் பாராட்டினார்.

**ஆசிரியர் சொல்கிறார் என்பதற்காக மாணவர்கள் எல்லாவற்றுக்கும் சரி சரி என தலையாட்டக் கூடாது. ஏன்? எங்கே? எப்படி? என வினாக்களை எழுப்பி மூளைக்கு வேலை கொடுங்கள்.**

**கேள்வி பிறந்தது அன்று; நல்ல பதில் கிடைத்தது இன்று.**

## அரிசித் தவிட்டிலிருந்து சிமெண்ட்

வீணாகிப் போகும் அரிசித் தவிட்டிலிருந்து சிமெண்ட் தயாரிக்கும் முறையைப் பாங்காக் நகரைச் சேர்ந்த மருத்துவர் திமிட் யோங்ஸ் குர் என்பவர் கண்டுபிடித்தார். தாய்லாந்தில் அதிகம் கிடைக்கும் சுண்ணாம்புக் கற்களையும் அரிசித் தவிட்டையும் கலந்து இந்த புதிய சிமெண்ட் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த சிமெண்ட் போர்ட்லாண்டு சிமெண்டுக்கும் இணையாக உறுதியாக இருக்கிறது. இதனைப் பரிசோதனை மூலம் நிரூபித்துக் காட்டினார். இந்தச் சிமெண்டினால் உருவாக்கப்பட்ட கான்க்ரீட் கற்கள் நன்கு உறுதியாக இருந்தமையால்1989 ஆம் ஆண்டு முதல் இந்த புதுவகையான சிமெண்ட் பரவலாக விற்னைக்கு வந்தது. உயர்தரமான இந்தச் சிமெண்டின் விலையும் மிகவும் குறைவானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்

கரணவாய், மே 1

**கடற்கரை கரப்பந்து**

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான கடற்கரை கரப்பந்தாட்டம் இன்று திங்கட்கிழமை காலை 8 மணி முதல் வல்வெட்டித்துறை உதயசூரியன் உல்லாசக் கடற்கரை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

ஆண்களுக்கான ஆட்டங்களில் யாழ்ப்பாண பிரதேச செயலகத்தை எதிர்த்து பருத்தித்துறை பிரதேச செயலகமும், கரவெட்டி பிரதேச செயலகத்தை எதிர்த்து சண்டிலிப்பாய் பிரதேச செயலகமும், தெல்லிப்பழை பிரதேச செயலகத்தை எதிர்த்து மருதங்கேணி பிரதேச செயலகமும், நெடுந்தீவு பிரதேச செயலகத்தை எதிர்த்து நல்லூர் பிரதேச செயலகமும், சாவகச்சேரி பிரதேச செயலகத்தை எதிர்த்து உடுவில் பிரதேச செயலகமும், காரைநகர் பிரதேச செயலகத்தை எதிர்த்து கோப்பாய் பிரதேச செயலகமும் மோதவுள்ளன.

பெண்களுக்கான ஆட்டங்களில் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தை எதிர்த்து உடுவில் பிரதேச செயலகமும், சாவகச்சேரி பிரதேச செயலகத்தை எதிர்த்து நல்லூர் பிரதேச செயலகமும், பருத்தித்துறை பிரதேச செயலகத்தை எதிர்த்து சண்டிலிப்பாய் பிரதேச செயலகமும் கோப்பாய் பிரதேச செயலகத்தை எதிர்த்து கரவெட்டி பிரதேச செயலகமும் மோதவுள்ளன.

**எவ்.ஏ. கிண்ணத் தொடர்**

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் தேசிய ரீதியில் நடத்தும் எவ்.ஏ. கிண்ணத் தொடரின் ஆட்டமொன்று இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் யாழ்ப்பாணம் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து களுத்துறை புளுஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-108-23-422)



# யாழ். மாவட்ட அணி வடக்கில் சம்பியன்

யாழ்ப்பாணம், மே 1

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் யாழ்ப்பாண மாவட்ட அணி கிண்ணம் வென்றது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட அணியை எதிர்த்து கிளிநொச்சி மாவட்ட அணி மோதியது. ஆட்டத்தின் 16 ஆவது நிமிடத்தில் முதல் கோலைப் பதிவுசெய்தது யாழ்ப்பாணம். இரண்டாவது கோல் ஆட்டத்தின் 26 ஆவது நிமிடத்தில் சானுவினால் பதிவானது. முதல் பாதியின் முடிவில் 2:0 என்று ஆதிக்கம் செலுத்தியது யாழ்ப்பாண மாவட்ட அணி.

இரண்டாவது பாதியின் 14 ஆவது மற்றும் 25 ஆவது நிமிடங்களில் சானு கோல்களைப் பதிவுசெய்து யாழ்ப்பாண மாவட்டத்தின் கோல் கணக்கை நான்காக உயர்த்தினார். ஆட்டத்தின் 56 ஆவது நிமிடத்தில் கிளிநொச்சியின் சார்பாக கோல் பதிவாக முடிவில் யாழ்ப்பாண மாவட்ட அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

முல்லைத்தீவுமாவட்டஅணியை 2:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி மூன்றாம் இடத்தை தனதாக்கியது மன்னார் மாவட்ட அணி. (ம-23-422-108)

## வவுனியாவுக்கு மூன்றாமிடம்

யாழ்ப்பாணம், மே 1

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் வவுனியா மாவட்ட அணி மூன்றாம் இடத்தைத் தனதாக்கியது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்று இடம்பெற்ற மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில், வவுனியா மாவட்ட அணியை எதிர்த்து கிளிநொச்சி மாவட்ட அணி மோதியது. ஆட்டத்தின் 18 ஆவது நிமிடத்தில் வவுனியாவின் மனோஜ் முதல்கோலைப் பதிவுசெய்தார். முதல் பாதியின் முடிவுவரை வேறெந்த கோல்களும் பதிவாகவில்லை.



இரண்டாம் பாதியின் 14 ஆவது மற்றும் 25 ஆவது நிமிடங்களில் கிளிநொச்சி அணி கோல்களைப் பதிவுசெய்தது. வவுனியாவின் சார்பாக மேலும் ஓர் கோல் பதிவாக நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா இரு கோல்களைப் பதிவுசெய்திருந்த நிலையில் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 6:5 என்ற கோல் கணக்கில் வவுனியா மாவட்ட அணி வெற்றிபெற்றது. (ம-23)

## 'நீலங்களின் போர்' சமநிலை கண்டது

கிளிநொச்சி, மே 1

**கிளிநொச்சி இந்துக் கல்லூரிக்கும், கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய அணிக்கும் இடையிலான** நீலங்களின் சமர் துடுப்பாட்டம் சமநிலையில் முடிந்தது.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் கடந்த வெள்ளி, சனி என இரு தினங்கள் இந்த ஆட்டம் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய அணி 260 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக கிசோகரன் 53 ஓட்டங்களையும், சுபிகரன் 48 ஓட்டங்களையும், யதுசன் 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பிரதீசன் 8 இலக்குகளையும், தர்சன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்துக் கல்லூரி அணி முதல் நாள் (வெள்ளிக்கிழமை) முடிவில் 6 இலக்குகளை இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. நேற்றுமுன்தின இறுதி நாளில் அந்த அணி 185 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக ஏ.அனுஸ்டன் 30 ஓட்டங்களையும், சி.பிரதீசன் 30 ஓட்டங்களையும், சி.பார்த்தீபன் 29 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் எஸ்.சுவிகரன், எஸ்.லக்சன், கலைவாணன் மூவரும் தலா இரு இலக்குகளை வீழ்த்தினர்.

75 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய அணி 121 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக எஸ்.சுபிகரன்




45 ஓட்டங்களையும், ஆர்.தனுசன் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் எஸ்.பார்த்தீபன் 6 இலக்குகளையும், ஏ.அனுக்சன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

197 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குக் களமிறங்கிய கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி 7 இலக்குகளை இழந்து 114 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ஆட்டம் சமநிலையில் முடிவுகண்டது. ஆட்டநாயகனாக இரண்டு இனிங்ஸ்களிலும் 48, 45 ஓட்டங்களைப் பெற்றதுடன், 3 இலக்குகளை வீழ்த்திய கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய வீரர் எஸ்.சுபிகரன் தெரிவானார். சகலதுறை வீரராக கிளிநொச்சி இந்து கல்லூரி அணியின் ஏ.அனுக்சன், சிறந்த துடுப்பாட்ட வீரராக கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய அணியின் பி.அனுக்சன், சிறந்த பந்து வீச்சாளராக கிளிநொச்சி இந்து கல்லூரி அணியின் எஸ்.பிரதீன் ஆகியோர் தெரிவாகினர். (ம-6)




## நல்லூர் அணி இறுதியில்

யாழ்ப்பாணம் மாவட்ட இளைஞர் சேவை மன்றத்திற்கு உட்பட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத்தில் நல்லூர் பிரதேச செயலக அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் நல்லூர் பிரதேச இளைஞர் கழக அணியை எதிர்த்து கரவெட்டி பிரதேச இளைஞர் கழக அணி மோதியது. ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய நல்லூர் பிரதேச இளைஞர் கழக அணி [illegible] என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-422)

## வென்றது கலைமகள்

யாழ்ப்பாணம், மே 1

நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக இரு பிரிவாக நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரில், 'பி' பிரிவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கலைமகள் அணி வெற்றி பெற்றது.

பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இரவு 8 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்சுவேலி கலைமகள் விளையாட்டுக் கழக அணி மோதியது. மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. 28:26, 25:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றி பெற்றது கலைமகள் அணி. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


யாழ். அணி


மன்னார் அணி

# யாழ். - மன்னார் இறுதியாட்டத்தில்

யாழ்ப்பாணம், மே 1
வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் மன்னார், யாழ்ப்பாணம் மாவட்ட அணிகள் இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றன.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் மாலை இந்த அரையிறுதி ஆட்டங்கள் நடைபெற்றன. முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் மன்னார் மாவட்ட அணியை எதிர்த்து கிளிநொச்சி மாவட்ட அணி மோதியது. 5:0 என்ற கோல் கணக்கில் மன்னார் மாவட்ட அணி வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதிபெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட அணியை எதிர்த்து வவுனியா மாவட்ட அணி மோதியது. 8:1 என்ற கோல் கணக்கில் யாழ்ப்பாண மாவட்ட அணி வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. யாழ்ப்பாணம், மன்னார் மாவட்ட அணிகள் இறுதியாட்டத்தில் பலப்பரீட்சை நடத்தவுள்ளன.
(ம-23)

## யாழ். மாவட்ட கடற்கரை கபடி

கரணவாய், மே 1
யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான கடற்கரை கபடித் தொடர் வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரை மைதானத்தில் இன்று காலை 8 மணிமுதல் இடம்பெறவுள்ளன.
ஆண்களுக்கான ஆட்டங்களில், கரவெட்டி பிரதேச செயலகத்தை எதிர்த்து பருத்தித்துறை பிரதேச செயலகமும் நல்லூர் பிரதேச செயலகத்தை எதிர்த்து நெடுந்தீவு பிரதேச செயலகமும், சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தை எதிர்த்து காரைநகர் பிரதேச செயலகமும், தெல்லிப்பழை பிரதேச செயலகத்தை எதிர்த்து உடுவில் பிரதேச செயலகமும், சாவகச்சேரி பிரதேச செயலகத்தை எதிர்த்து உடுவில் பிரதேச செயலகமும், காரைநகர் பிரதேச செயலகத்தை எதிர்த்து கோப்பாய் பிரதேச செயலகமும் மோதவுள்ளன.
பெண்களுக்கான ஆட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தை எதிர்த்து உடுவில் பிரதேச செயலகம் மோதவுள்ளது.
(ம-422-108)

## திறப்பு விழா

யாழ்ப்பாணம், மே 1
அரியாலையில் புதிதாக அமைக்கப்பட்ட கால்பந்தாட்ட பயிற்சி அக்கடமி இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்படவுள்ளது. இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தில் தலைவர் அனுர டி சில்வா கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக இலங்கை கால்பந்தாட்ட சங்கத்தின் செயலாளர் அன்ரனி பாலேந்திரா கலந்துகொள்ளவுள்ளார். (ம-23)

## உத்தப்பாவுக்கு கம்பீர் ஆதரவு

இந்திய அணியின் தேர்வாளர்கள் உத்தப்பாவின் மீது ஓர் கண் வைக்கவேண்டும் இவ்வாறு தெரிவித்தார் கொல்கத்தா அணியின் தலைவர் கம்பீர்.
"துடுப்பாட்டத்திலும், இலக்குக் காப்பிலும் உத்தப்பா மிகச் சிறந்தவராக விளங்குகிறார். அவர் இந்திய அணிக்கு வேண்டப்பட்ட ஒருவர். அவர் மீது தேர்வாளர்கள் கவனம் செலுத்த வேண்டும்" என்று கம்பீர் மேலும் தெரிவித்தார். (ம)







## மும்பை திரில் வெற்றி

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற ஆட்டத்தில் சுப்பர் பந்துப்பரிமாற்றத்தில் வைத்து வென்றது மும்பை அணி.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற குஜராத் அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 9 இலக்குகளை இழந்து 153 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக இசான் கிசான் 48 ஓட்டங்களையும், ஜடேயா 28 ஓட்டங்களையும், டை 25 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் பாண்டியா 3 இலக்குகளையும், மலிங்க, பும்ரா இருவரும் தலா இரு இலக்குகளையும், ஹர்பஜன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய மும்பையும் 153 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக பார்திவ் பட்டேல் 70 ஓட்டங்களையும், குருநல் பாண்டியா 29 ஓட்டங்களையும், ரணா 19 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் தாம்பி 3 இலக்குகளையும், பல்க்நெர் 2 இலக்குகளையும், அன்கிட் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
சுப்பர் பந்துப்பரிமாற்றத்தில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. மும்பை 11 ஓட்டங்களை எடுத்தது. குஜராத்தால் 6 ஓட்டங்களையே எடுக்கமுடிந்தது. (ம)

# டெல்லியை மிக இலகுவாக ஊதித்தள்ளியது பஞ்சாப்

ஐ.பி.எல். தொடரில் நேற்று மாலை நடைபெற்ற ஆட்டத்தில் மிகமிக இலகுவாக டெல்லியை வென்றது பஞ்சாப்.
நாணயச் சுழற்சியில் வென்று களத்தடுப்பைத் தீர்மானித்தது பஞ்சாப். ஆரம்ப வீரர்களான சாம்சன் மற்றும் பில்லிங்ஸ் இருவரும் முறையே 5 ஓட்டங்களுடனும் ஓட்டமெதனையும் பெறாதும் ஆட்டமிழந்தனர். இருவரையும் வெளியேற்றியவர் சன்டீப் சர்மா. நாயரை போல்ட் செய்தார் அக்சர் பட்டேல். இலக்குச் சரிவு தொடர்ந்தது. மத்திய வரிசையில் அண்டர்சன் பெற்ற 18 ஓட்டங்களே அதிகபட்சம். பஞ்சாப்பின் பந்துவீச்சு எழுச்சியில் டெல்லியின் பின்வரிசையும் தவிடுபொடியாய்ப்போனது. முடிவில் 67 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது டெல்லி.
பந்துவீச்சில் சன்டீப் 4 இலக்குகளையும், அக்சர் பட்டேல், ஆரோன் இருவரும் தலா 2 இலக்குகளையும், மொகிற் சர்மா, மக்ஸ்வெல் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய பஞ்சாப் ஆட்டத்தை விரைவாக முடித்து சராசரியை உயர்த்த முனைப்புக் காட்டியது. இதன்படி ஆரம்ப வீரரான குப்தில் அடித்தாடினார். அவர் 27 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். 73 பந்துகள் மீதமிருக்க இலக்குச் சரிவில்லாமல் வெற்றிபெற்றது பஞ்சாப்.



இந்த வெற்றியுடன் பஞ்சாப் அணி 8 புள்ளிகளுடன் தரப்படுத்தலில் 5ஆவது இடத்துக்கு முன்னேறியது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# தொடர் தோல்விகளால் கோக்லி கடும் விரக்தி

ஐ.பி.எல். தொடரில் பிளே ஓவ் சுற்றுக்குத் தகுதிபெறாதமை குறித்து, பெங்களூர் அணித்தலைவர் கோக்லி கடும் ஏமாற்றமும் விரக்தியும் அடைந்துள்ளமையை வெளிப்படுத்தினார்.

புனே அணிக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் அந்த அணி நிர்ணயித்த 157 ஓட்டங்கள் என்ற இலக்கை எட்டமுடியாமல் 61 ஓட்டங்களால் தோற்றது பெங்களூர். இதையடுத்தே கோக்லி இவ்வாறு தெரிவித்தார்.

ஆட்டம் முடிந்த பின்னர் உரையாற்றுகையில், "என்ன நடந்தது என்பதை அனைவரும் பார்த்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். இப்படிப்பட்ட ஒரு ஆட்டத்தை ஆடிவிட்டு இங்கு நின்று பேசுவது கடினமாக உள்ளது. பிளே ஓவ் சுற்றுக்கு முன்னேறும் போட்டியில் நாங்கள் இல்லை. மீதியுள்ள 4 ஆட்டங்களையும் முடிவுகள் பற்றி கவலைப்படாமல் மகிழ்வுடன் விளையாட வேண்டியதுதான். நாங்கள்தான் போட்டியைத் தோற்றோமே தவிர அவர்கள் வெல்லவில்லை. இது போன்ற அனுபவங்களிலிருந்து கற்றுக் கொண்டு அடுத்தக் கட்டத்துக்கு நகர வேண்டும். அணியின் மோசமான ஆட்டத்துக்கு சில காரணங்கள் இருக்கலம். அவற்றை சீர்செய்யவேண்டியது அவசியம்" என கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)






# வலன்சியாவை வென்று ரியல் மட்ரிட் அசத்தல்

லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ரியல் மட்ரிட் அணி வலென்சியாவை வென்றது.

ஆட்டத்தின் 27ஆவது நிமிடத்தில் ரொனால்டோ ரியல் மட்ரிட்டின் முதல் கோலைப் பதிவுசெய்தார். பதிலடி கொடுக்க வலன்சியா பலமுறை முயன்ற போதிலும் எதுவும் பயனளிக்கவில்லை. முதல் பாதியின் முடிவில் 1:0 என்று ஆதிக்கம் செலுத்தியது ரியல் மட்ரிட்.

ரியல் மட்ரிட்டின் ஆதிக்கத்துடனேயே இரண்டாம் பாதியும் நகர்ந்துகொண்டிருந்தது. 82ஆவது நிமிடத்தில் வலென்சியாவின் சார்பாக கோல் பதிவாக நிலமை 1:1 என்றானது. 86ஆவது நிமிடத்தில் மார்செலோ மட்ரிட்டின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். குறுகிய நேரத்துக்குள் பதிலடி கொடுக்க வலன்சியாவால் முயவில்லை. முடிவில் ரியல் மட்ரிட் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம)

# மக்களின் மன்றாட்டு என்னை வழிப்படுத்துகிறது

## ரசிட் கான் உருக்கம்

ஆப்கானிஸ்தான் மக்களின் மன்றாட்டுக்களே என்னை வழிநடத்துகின்றன இவ்வாறு தெரிவித்தார் ஆப்கானிஸ்தான் அணியின் நட்சத்திர வீரரும் நடைபெற்றுவரும் ஐ.பி.எல். தொடரில் ஹைதராபாத் அணிக்காக விளையாடி வருபவருமான ரசிட் கான்.

ஐ.பி.எல். தொடரில் ரசிட்கானின் செயற்பாடுகள் சிறப்பாக உள்ளன. இது தொடர்பாக இந்திய ஊடகமொன்றுக்கு நேற்றுமுன்தினம் வழங்கிய செவ்வியிலேயே ரசிட்கான் இவ்வாறு தெரிவித்தார்.

"ஐ.பி.எல். தொடரை ஆப்கானிஸ்தானில் ரசிகர்கள் ஆவலுடன் பார்த்து வருகின்றனர். அங்கு இருந்து வரும் ஆதரவுதான் இங்கு நான் சிறப்பாக விளையாடுவதற்கான ஊக்கத்தை அளிக்கி



றது. என் மக்களின் மன்றாட்டுக்களே என்னையும், என்னுடன் ஹைதராபாத் அணியில் விளையாடிவரும் சக ஆப்கானிஸ்தான் வீரர் நபியையும் வழிநடத்துகின்றன. என்னுடைய இந்த ஆட்டத்திறன் ஆப்கான் கிரிக்கெட்டுக்கு பெரிய விடயமாகும். இங்கு வந்து இந்தமட்டத்தில்விளையாடுவதை நம்பிக்கையூட்டும் தருணங்களாக அவர்கள் பார்க்கின்றனர். ஐ.பி.எல். போன்ற பெரிய தொடர்களில் கிடைக்கும் அனுபவங்களை எனது தேசிய அணிக்காக எடுத்துச் செல்லவேண்டும் என்பதே எனது குறிக்கோள்" என ரசிட்கான் மேலும் தெரிவித்தார். (ம)

# டோனிக்கு ஆதரவாக விமர்சகர்களுக்குக் கடும் காட்டம்

பன்னாட்டு கிரிக்கெட்டில் டோனி இனி ஒன்றும் செய்யப்போவதில்லை என்று விமர்சிப்பவர்களுக்கு முன்னாள் ஆஸ்திரேலிய தலைவர் ரிக்கி பொண்டிங் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



"டோனி போன்ற சம்பியன்களைப் பற்றி அதற்குள் தவறாக முடிவெடுக்க வேண்டாம். மினி உலகக்கிண்ணத் தொடரில் அவர் ஒரு குறிப்பிடத்தகுந்த பங்காற்றும் திறமை கொண்டவர் எனவே அவரை விமர்சிக்க வேண்டாம்.. இப்போது டோனி சந்தித்து வரும் நிலையில் நானும் இருந்திருக்கிறேன். திறனில் சிறிது சரிவு ஏற்பட்டால்கூட பெரிய விமர்சனங்கள் எழும். எனினும் அதனை எப்படிக் கையாள்கிறோம் என்பதில்தான் சுவாரசியம் அடங்கியுள்ளது. ஆனால் விரைவில் நிலமை தலைகீழாக மாறும். இந்த கிரிக்கெட் ஆட்டத்தில் நான் கற்றுக் கொண்ட ஒரு விடயம் என்னவெனில் சம்பியன் வீரர்களை எப்போதும் ஓரங்கட்டி விடாதீர்கள் என்பதே. மீண்டும் எழுச்சி பெற அவர்கள் வழிகளைக் கையாளக்கூடிய திறமை படைத்தவர்கள். நிச்சயம் அணிக்காக சில போட்டிகளை இவர்கள் வெற்றி பெற்றுத் தருவார்கள். மத்திய வரிசையில் களமிறங்குவதன் மூலம் டோனியால் இன்னிங்ஸை கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும். இங்கிலாந்தில் இதுதான் தேவைப்படும்.

டோனியையும் அவரது வயதையும் வைத்து சிந்தித்துப் பார்க்கும் போது இதுவே அவரது கடைசி ஐ.பி.எல். தொடராக இருக்கலாம். ஆனால் இதைத் தெரிவிப்பதற்கான அடிப்படை எதுவும் என்னிடம் இல்லை. இப்படியிருக்கையில் அவர் தன் கிரிக்கெட் வாழ்வின் இறுதிக்கு வரவில்லை எனும்போது அவரை புனே அணி தலைமைத் துவத்தில் இருந்து நீக்கியமை விசித்திரமானதே" என பொண்டிங் மேலும் தெரிவித்தார். (ம)

**பணிப்பெண் தேவை**

வயது 40 - 55 வரை. அனுபவமுள்ள. வீட்டில் தங்கிநின்று பணிசெய்ய கூடியதாக இருக்கவேண்டும். தங்குமிட வசதி 3நேர உணவு,நீதியான சம்பளம் வழங்கப்படும். வார இறுதியில் ஓய்வு உண்டு. **தொடர்பு.**

**077 908 4950, 077 728 5175**

**பெண் வேலையாள்கள் தேவை**

எமது ஸ்தாபனத்துக்கு பொதி செய்வதற்கு பெண் வேலையாள்கள் தேவை. வயது 18 தொடக்கம் 35 வரை. வேலை நேரம் காலை 8 மணி தொடக்கம் 5.30 மணிவரை நாளொன்றுக்கு 400/= முதல் ரூபா 500/= வரை வழங்கப்படும்.

**021 222 3857**

# பார்சிலோனா மிகப்பெரும் வெற்றி

லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் மிகப்பெரும் வெற்றியைப் பதிவுசெய்தது பார்சிலோனா.

பார்சிலோனாவை எதிர்த்து எஸ்பன்ஜோல் மோதியது. இரு அணிகளும் சிறந்த போராட்டத்தை வெளிப்படுத்தின. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி.

இரண்டாம் பாதியின் 50 ஆவது நிமிடத்தில் பார்சிலோனாவின் முதல் கோலைப் பதிவுசெய்தார் லூயிஸ் சுவாரஸ். ராகிடிக் 76 ஆவது நிமிடத்தில் கோலொன்றைப் பதிவுசெய்து பார்சிலோனாவின் கோல் கணக்கை இரண்டாக்கினார். 84 ஆவது நிமிடத்தில் சுவாரஸ் மற்றுமொரு கோலைப் பதிவுசெய்ய முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது பார்சிலோனா. (ம)



ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற ஆட்டத்தில் குஜராத் அணியின் வீரர் அன்ரூ டை, பந்தை பவுண்டரிக்குச் செல்லவிடாமல் தடுக்க முற்பட்ட போது நிலத்தில் வீழ்ந்து காயமடைந்தார். அவரது தோள்பட்டையில் காயம் உள்ளது என்று முதல்கட்டமாகத் தெரிவிக்கப்பட்டது. காயத்தின் வீரியத்தன்மை அவர் இன்னும் எவ்வளவு காலம் ஓய்வில் இருக்க வேண்டும் போன்ற தகவல்கள் முழுமையாக வெளியாகவில்லை. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 1.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.